



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:137 | 02-12-2025 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# துணை ஜனாதிபதியாக உயர்ந்த விவசாயி மகன்

## மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்தவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ராஜ்யசபையில் மோடி புகழாரம்

**புதுடெல்லி, டிச.2:**


தேசத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன். எளிய பின்னணியை கொண்ட விவசாயி மகன் சி.பி. ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதியாக உயர்ந்துள்ளது, நமது ஜனநாயகத்தின் வலிமையை காட்டுகிறது என்று, ராஜ்யசபையில் பிரதமர் மோடி புகழாரம் சூட்டினார்.

பார்லிமெண்ட் குளிர் கால கூட்டத்தொடர் இன்று தொடங்கி, வருகிற 19-ந்தேதி வரை நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு பல்வேறு கட்சிகளின் எம்.பி.க்களும் நாடாளுமன்றத்திற்கு இன்று வருகை தந்துள்ளனர்.

துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்ற தமிழகத்தை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் முதன் முதலாக ராஜ்யசபை தலைவராக தனது பணியை தொடங்கினார். அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

அவருக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி பேசினார்.

இன்றைய தினம் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு பெருமைக்குரிய தருணம். இன்று ராஜ்யசபை தலைவராக பணியை தொடங்கும் உங்களை மனதார வாழ்த்துகிறேன். அவை உறுப்பினர்கள் சார்பிலும்





உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேவையாற்ற

அர்ப்பணித்தவர்

மாநிலங்களவையின் தலைவர் எளிய குடும்ப பின்னணி கொண்டவர். அவரது குடும்பம் ஒரு விவசாயக் குடும்பம்.அவர் தனது மழு வாழ்க்கையையும் சமூக சேவைக்காக அர்ப்பணித்துள்ளார். அரசியல் என்பது அதில் ஒரு பகுதி. ஆனால், அவரது வாழ்வின் நோக்கம் சமூக சேவையாகவே இருந்து வருகிறது. அவர் சமூகத்துக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். சமூக சேவையில் ஆர்வமுள்ள நம் அனைவருக்கும் அவர் ஒரு உத்வேகமாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறார். ஒரு எளிய குடும்பத்தில் இருந்து உயர்ந்த நிலைக்கு வந்துள்ள அவரது பயணமும் தலைமைத்துவமும் இந்திய ஜனநாயகத்தின் மிகப் பெரிய பலத்தைக் காட்டுகிறது.

ஜார்க்கண்ட் ஆளுநராக இருந்தபோது பழங்குடி சமூகங்களுடன் நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட பிணைப்பை நான் நன்கு அறிவேன். சிறிய கிராமங்களுக்கும் நீங்கள் சென்ற விதம் குறித்து ஜார்க்கண்ட் முதல்வர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் பெருமையுடன் கூறுவார். ஹெலிகாப்டர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்களிடம் இருக்கும் வாகனத்தைக்கொண்டு பயணித்திருக்கிறீர்கள்.

இரவு நேரத்திலும்

மக்கள் குறை கேட்பீர்கள்

இரவு நேரங்களில் சிறிய கிராமங்களில்கூட நின்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டிருக்கிறீர்கள். ஆளுநர் பதவியை புதிய உயரங்களுக்கு நீங்கள் கொண்டு சென்ற விதத்தை நாங்கள் அனைவரும் அறிவோம்.

மக்கள் சில நேரங்களில் தங்கள் பதவியின் சுமையை உணர்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் நெறிமுறைகளுக்கு (புரட்டோகால்) உட்பட்டு செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் எந்த நெறிமுறைகளையும் கொண்டிருக்கவில்லைஎன்பதை நான் கவனித்திருக்கிறேன். அவரை நீண்ட காலமாக அறிந்திருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. பொது வாழ்வில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பும் எனக்கு கிடைத்திருக்கிறது".

காசிக்கு போய் வந்ததும்...

காசிக்கு வந்து சென்றது முதல் அசைவ உணவு உண்பதில்லை என்ற முடிவை சி.பி. ராதாகிருஷ்ணன் எடுத்துள்ளார். அசைவ உணவு உண்பது தவறு என்று நான் கூறவில்லை. ஆனால், காசியின் எம்.பி., என்கிற முறையில் அவரது முடிவை மனதார ஏற்றுக் கொள்கிறேன்.

சி.பி.ராதாகிருஷ்ணன், தன் மாணவப் பருவம் முதலே, தலைமைப் பண்பை சிறப்பாக வெளிப்படுத்தியவர்.

எளிய பின்புலத்தில் இருந்து துணை ஜனாதிபதி வரை பதவி உயர்வு பெற்றுள்ள அவரது உயர்வு, ஜனநாயகத்தின் பலத்தை காட்டுகிறது. நாட்டுக்கு சேவையாற்றுவதற்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

இவ்வாறு மோடி பேசினார்.

## எதிர்க்கட்சிகள் கடும் அமளி மக்களவை ஒத்திவைப்பு



பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று (டிசம்பர் 1) தொடங்கியது.

இந்நிலையில், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் முழக்கமிட்டு அமளியில் ஈடுபட்ட நிலையில் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. SIR உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சியினர் மீண்டும் முழக்கமிட்ட நிலையில் மக்களவை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

வருகிற 19-ந் தேதி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது. விடுமுறை நாட்கள் நீங்கலாக 15 அமர்வுகள் இந்த கூட்டத்தொடரில் இடம்பெற உள்ளன.

கடந்த ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை நடை பெற்ற மழைக்கால கூட்டத் தொட ரில் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களுக்கான விவாதம் குறித்த எதிர்க்கட்சிகளின் அமளியால் பாதிக்கப்பட்டது.

மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவையின் செயல்பாடு 31 சதவீதமாகவும், மேல்-சபையின் செயல்பாடு 39 சதவீதமாகவும் இருந்தது. குளிர்கால கூட்டத்தொடரில் சிவில் அணுசக்தி துறையில் தனியாருக்கு அனுமதி வழங்குவது, இந்திய உயர் கல்வி ஆணையம் அமைப் பது, பெருநிறுவன சட்டம் மற்றும் பங்குச்சந்தை உள்ளிட்ட 10 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

10 மசோதாக்களில் 4 நிதித்துறை தொடர்புடையவை, 2 சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்புடையவை. கல்வி, எரிசக்தி, போக்குவரத்து துறை, உள்துறை ஆகியவை தொடர்பான தலா ஒரு மசோதாவும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பஞ்சாங்கம்

02.12.2025 கார்த்திகை 16
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று பிற்பகல் 12.29 வரை துவாதசி பின்பு திரயோதசி.

நட்சத்திரம்:
இன்று மாலை 6.23 வரை அசுவினி பின்பு பரணி

யோகம் :
இன்று இரவு 7.18 வரை வரீயான் பின்பு பரீகம்.

கரணம் :
இன்று அதிகாலை 1.33 வரை பவம் பின்பு பிற்பகல் 12.29 வரை பாலவம் பின்பு இரவு 11.21 வரை கௌலவம் பின்பு தைதுலம்..

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 6.23 வரை உத்திரம் பின்பு அஸ்தம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிக்கு பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை!

**சென்னை, டிச.2:**



வங்கக் கடலில் நிலவிய டிட்வா புயல், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலு குறைந்தது. இருப்பினும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கனமழை தொடர்ந்து வருகிறது. சென்னையில் பெய்துவரும் கனமழையால் பல்வேறு முக்கிய சாலைகளில் தண்ணீர் தேங்கின. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கைபாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெல்டா மாவட்டங்கள், ராமநாதபுரம், புதுக்கோட்டை,ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும் கனமழை தொடர்கிறது.

சென்னையில் நேற்று வழக்கம்போல் பள்ளி, கல்லூரிகள் இயங்கின. இதனால், மாணவர்கள் மழையில் நனைந்தபடி பள்ளி, கல்லூரி சென்று திரும்பும் சூழல் ஏற்பட்டது. இதைச் சுட்டிக்காட்டி பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், சென்னையில் இன்று செவ்வாய்க்கிழமை (டிச.2) பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உத்தரவிட்டுள்ளார். அதேபோல் திருவள்ளூர் மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்துள்ளார் அந்த மாவட்ட ஆட்சியர் பிரதாப். இதேபோல், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தென்மண்டல இயக்குநர் செந்தாமரைக் கண்ணன் அளித்த பேட்டியில், “காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னையை நோக்கி நகர்ந்து வருகிறது. இருப்பினும், இன்றும் சென்னையில் கனமழைக்கு வாய்ப்புள்ளது” என்றார்.

## டிட்வா புயலால் தொடர்ந்து கொட்டிய மழை:

# பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் ஆய்வு!

**சென்னை, டிச.2:**

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில் தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதற்கிடையே தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய இலங்கை கடலோரப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவலுப்பெற்று புயலாக உருவெடுத்தது.

இந்தப் புயலுக்கு டிட்வா என பெயரிடப்பட்டது.

இந்த டிட்வா புயல் தற்போது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவிழந்து, சென்னை கடற்கரையை நெருங்கியிருக்கும் நிலையில், இன்று காலை முதல் சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. மேலும் இந்த டிட்வா புயல் அடுத்து இரண்டு நாட்களுக்கு சென்னை கடற்கரை அருகே நிலை கொண்டிருக்கும் என



தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்த பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்குக் கனமழை நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதனால் நாளை சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மழை பாதிப்புகள் குறித்தும், மாநகராட்சி சார்பில் எடுக்கப்பட்டிருக்கும் முன்னெச்சரிக்கைநடவடிக்கை குறித்தும்சென்னையின்பல்வேறு பகுதிகளில்துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் சென்னை ரிப்பன் மாளிகையில் அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

## தங்கம் விலை : 1 சவரன் ரூ.96,500

**சென்னை, டிச.2:**

தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடனேயே போக்கு காட்டி வருகிறது. முதலீட்டாளர்களின் கவனம் ஒரு நாள் தங்கத்தின் பக்கமும், மறுநாளில் பங்கு சந்தைகள் பக்கமும் மாறி மாறி செல்வதால் இந்த நிலை நீடிக்கிறது.

ஒரு கிராம் தங்கம் ரூ.11,980-க்கும், சவரன் ரூ.95,840-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் இன்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.720 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.96,560-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.90 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.12,070-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.4-ம், கிலோவுக்கு ரூ.4 ஆயிரமும் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.196-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 96 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.




## குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்புப் பணி குறித்து டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது

**சென்னை, டிச.2:**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி IV பணிகள்) (அறிவிக்கை எண்.07/2025, நாள்.25.04.2025 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் 22.10.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு, தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ளத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி

**மதுரை, டிச.2:**



திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி வழங்கி உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்கான முழு பாதுகாப்பையும் காவல்துறை வழங்க வேண்டும் என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டுள்ளார்.

தீபம் ஏற்றுவதற்கான முழு பாதுகாப்பையும் காவல்துறை வழங்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது. பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது ஏற்கத்தக்கதல்ல என மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## திருக்குறள் குறள்-457

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்



மனதின் நன்மை உயிர்க்கு ஆக்கமாகும், இனத்தின் தன்மை (அவ்வளவோடு நிற்காமல்) எல்லாப் புகழையும் கொடுக்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



உதவி என்றழைத்தால்
எல்லாம் உள்ளவரை
விட எதுவுமே
இல்லாதவர்கள்
தான்
முதலில் ஓடி
வருவார்கள்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## முத்து மாரியம்மன் கோவில் யாகசாலை பூஜையுடன் கும்பத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம்



**விழுப்புரம், டிச.02:** விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்த தென்னமாதேவி கிராமத்தில் உள்ள முத்து மாரியம்மன் கோவில் கிராம மக்களால் புதுப்பிக்கப்பட்டது. பின்பு யாகசாலை பூஜையுடன் கும்பத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.யாக சாலை பூஜைகளை திருவாமாத்தூர் சந்திரசேகர சிவாச்சாரியார் தலைமையில் அருணாச்சல சிவாச்சாரியார், நெட்டப்பாக்கம் கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார் ஆகியோர் செய்தனர்.

விழா ஏற்பாடுகளை மாவட்ட சேர்மன் ஜெயச்சந்திரன் தலைமையில் கிராம முக்கியஸ்தர்கள் கோவிந்தராசு ஆகியோர் செய்திருந்தனர்.

## பாரம்பரிய உணவு திருவிழா



மயிலம் அடுத்த ரெட்டணை ஹோலி ஏஞ்சல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி தாளாளர் பழனியப்பன் தலைமையில் பாரம்பரிய உணவு திருவிழா நடந்தது. சென்னை, அண்ணா பல்கலைக்கழக பொறியாளர் மணிகண்டன் உணவு திருவிழாவை துவக்கி வைத்து பாரம்பரிய உணவு முறைகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

## மாணவ மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" எனும் கையேடு



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காணை வடக்கு ஒன்றியம் நல்லாபாளையம் ஊராட்சி அரசு பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தேர்வு எழுத சுலபமாக உள்ள வழிகாட்டி வினா-விடை தொகுப்பு "தேர்வை வெல்வோம்" எனும் கையேட்டினை அன்னியூர் சிவா MLA இன்று டிசம்பர் 1 வழங்கினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, ஒன்றிய கழக செயலாளர் .கல்பட்டுராஜா,R.முருகன், .RP.முருகன் மற்றும் ஆசிரிய பெருமக்கள், மாணவ மாணவிகள், கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## கார்த்திகை மாத பௌர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கார்த்திகை மாத பௌர்ணமி மலை கிரிவலம் செல்ல உகந்த நேரம் : டிசம்பர் 4-ஆம் தேதி காலை 7: 58 மணிக்கு முழு நிலவு தொடங்கி டிசம்பர் 5-ஆம் தேதி காலை 5:37 மணி வரை முழு நிலவு நடைபெறும். எனவே இந்த நேரங்களில் கிரிவலம் செல்ல உகந்த நேரம் என்று திருக்கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.
**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருக்கார்த்திகை தீபத் திருவிழா 8-ஆம் நாள் உற்சவம்



**திருவண்ணாமலை, டிச.02:** திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு எட்டாம் நாள் காலை விநாயகர் குதிரை வாகனத்திலும் மற்றும் சந்திரசேகர் குதிரை வாகனத்தில் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாட வீதி விழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.
**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அங்கன்வாடி மாணவச் செல்வங்களுக்கு டிசம்பர் 1 கல்வி உபகரணங்கள்



திண்டிவனம் சட்டமன்றத்தொகுதி மரக்காணம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சதீஷ் ஏற்பாட்டில் வடஆலப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிமற்றும் அங்கன்வாடி மாணவச் செல்வங்களுக்கு நேற்று டிசம்பர் 1 கல்வி உபகரணங்களை மரக்காணம் ஒன்றிய துணை பெரும் தலைவர் பழனி வழங்கினார். உடன் திமுகழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் இருந்தனர்

## சுய தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்



திருப்பத்தூரில் சுய தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு கலெக்டர் சிவசவுந்தரவல்லி சான்றிதழ் வழங்கினார்.

## ஸ்ரீபாலவிநாயகர் ஸ்ரீபாலமுருகன் ஸ்ரீபாலஜயப்பசுவாமி ஆகிய ஆலயங்களின் மகா கும்பாபிஷேக விழா



**விழுப்புரம், டிச.02:** விழுப்புரம் மாவட்டம் ,திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மரக்காணம் மேற்கு ஒன்றியம், மொளசூர் ஊராட்சியில் உள்ள ஸ்ரீபாலவிநாயகர் ஸ்ரீபால முருகன் ஸ்ரீபாலஜயப்பசுவாமி ஆகிய ஆலயங்களின் மகா கும்பாபிஷேக விழா நவம்பர் 30ல் நடைபெற்ற நிலையில் மரக்காணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பழனி கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார். உடன் திமுகமாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, ஊராட்சி மன்ற துணை தலைவர் சக்திவேல், கிளைக் கழக செயலாளர்கள் முருகன், சரவணன் சிங்கனூர் முருகானந்தம் ஒன்றிய அணி நிர்வாகிகள் இருந்தனர்

## பெரம்பூர் பகுதியில் வெள்ளமாக ஓடிய மழை நீர்



சென்னையில் இடைவிடாத மழையால் பெரம்பூர் பகுதியில் நேற்று வெள்ளமாக ஓடிய மழை நீர்.

## அருள்மிகு வெங்கடாஜலபதி பரிபாலன சபா



சென்னை சூளையில் தொன்மை மாறாமல் ரூ. 72 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்ட அருள்மிகு வெங்கடாஜலபதி பரிபாலன சபாவினை அமைச்சர் சேகர்பாபு திறந்து வைத்தார். இணை ஆணையர் முல்லை, மாமன்ற உறுப்பினர் வேலு, செயல் அலுவலர் உடன் உள்ளனர்.

## திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அன்னதான கூடத்தில் வழங்குதல்



**திருவண்ணாமலை, டிச.02:** பேகோபுர தெருவில் உள்ள சத்திய தர்மச்சாலை அறக்கட்டளை நித்திய அன்னதான கூடத்தில் தினமும் மூன்று வேளையும் தினமும் 5000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

திருக்கார்த்திகை தீபத் திருவிழா முன்னிட்டு 13 நாட்களும் அன்னதானம் நடைபெறும். இந்த அன்னதானத்தை சிறப்பாக நடத்துபவர்கள் பூ. ராமலிங்கம் அவர்கள் தலைமையில் மற்றும் ஆர். சங்கர், எஸ். சத்தியவேல், தினச்சந்திரன், கோகுல்தாஸ் அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது.

அன்னதான கூடத்தில் வள்ளலாருக்கு பூஜை செய்து சிவனடியார்கள் தாளத்துடன் பாட்டுகள் பாடி ஏராளமான பக்தர்கள் மூன்று வேலையும் பசியாற உணவருந்தி விட்டு செல்கிறார்கள்.13 நாட்களும் அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.
**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வந்தவாசி ரெட் கிராஸ் சார்பில் எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**வந்தவாசி, டிச 02:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ரெட் கிராஸ் சங்க கிளை சார்பில் உலக எயிட்ஸ் விழிப்புணர்வு மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி புதிய பேருந்து நிலைய பகுதியில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு நிலைய மருத்துவர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். ரெட் கிராஸ் சங்க நிர்வாகிகள் பீ.ரகமத்துல்லா, சி.காசி, சீ.கேசவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா.சீனிவாசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, வழூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். தமீன்கான் பங்கேற்று, எய்ட்ஸ் விழிப்புணர்வு தகவல்களை விளக்கினார். மேலும் ரெட் கிராஸ் பொறுப்பாளர்கள் பெ.பார்த்திபன், கு.சதானந்தன், பிடிஜி ஆறுமுகம், அ. ஷாகுல் அமீது, எக்ஸ்னோரா நிர்வாகிகள் மலர் சாதிக், சு.தனசேகரன், மருந்தாளுநர் சற்குணம், மணிகண்டன், சமூக ஆர்வலர் ஜியா உள்ளிட்ட புறநோயாளிகள் பலரும் பங்கேற்றனர்.

முன்னதாக எயிட்ஸ் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் தலைமை செவிலியர் ஸ்டெல்லா நன்றி கூறினார்.

## ரங்கநாதப் பெருமாளுக்கு பட்டு வஸ்திரங்கள்



ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாளுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் பட்டு வஸ்திரங்கள் வழங்கப்பட்டன.

## 'எஸ்ஐஆர் பணியில் தொடரும் சிக்கல்'



சென்னை, டிச.2:

தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ செய்தியாளர்களிடம் பேசுகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளில் இன்னும் பல சிக்கல்கள் தொடர்வதாகக் குறிப்பிட்டார். தேர்தல் ஆணையம் எந்த விஷயத்தையும் வெளிப்படையாக தெரிவிப்பதில்லை என்றும், 50 சதவீத மக்களுக்கு எஸ்.ஐ.ஆர். படிவங்களை நிரப்புவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பீகாரில் வாக்களித்த நபர், தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். படிவம் சமர்ப்பிப்பது போன்ற குழப்பங்களுக்கு தேர்தல் ஆணையம் இதுவரை விளக்கமளிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## 'ஒரு சீட்டுக்காக சேர மாட்டோம்!'

சென்னை, டிச.2:

"ஒரு எம்.பி., சீட்டுக்காக அதிமுக கூட்டணிக்கு செல்ல மாட்டோம். கடைக்கோடி தொண்டர்களும் நிர்வாகிகளும் விரும்புபவர்களுடன் கூட்டணி அமைப்போம். ஜனவரி 9 ஆம் தேதி கடலூரில் நடைபெறும் மாநாட்டில் கூட்டணி குறித்து தெளி வான முடிவெடுத்து அறிவிப்போம்" என தேமுதிக பொதுச் செயலா ளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

## பக்தர்கள் மலை ஏறத் தடை

திருவண்ணாமலை, டிச.2:

திருவண்ணாமலை அருணா சலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி சிகர நிகழ்ச்சியான மகாதீபம் டிச.3 அன்று ஏற்றப்படுகிறது. இந்நிலையில், டிட்வா புயல் காரணமாக திருவண்ணா மலை மாவட்டத்திற்கு மிக கனமழை பொழிவதற்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய புவியியல் ஆய்வு மைய புவியியல் வல்லுநர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், "மலை யேறும் பாதை தற்போது உறுதித் தன்மை அற்றும், ஏற்கனவே நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களில் மையப் பகுதிகளில் பல்வேறு தளர்வான கற்பாறைகள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே புயல் எச்சரிக்கை மற்றும் வல்லுநர் குழு அறிக்கை அடிப்படையில், பாதுகாப்பு கருதி தற்காலிகமாக இந்த ஆண்டும் பக்தர்கள் மலையேறுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுப்பு

திருவாரூர், டிச.2:

டிட்வா புய லால் தமிழகத்தின் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இத னால் வாழை உள்ளிட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டுள் ளன. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், திருவாரூரில் கனமழையால் பாதிக்கப் பட்ட நெற்பயிர்களை கணக்கெடுக்கும் பணி திங்கட்கிழமை முதல் தொ டங்குவதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது.

## வடகிழக்கு பருவமழை 8% அதிகம்

சென்னை, டிச.2:

தமிழ் நாட்டில் வடகிழக்குப் பருவமழை ஞாயிற்றுக் கிழமை வரை இயல்பை விட 8 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. இயல்பாக 352.5 மி.மீ மழை பொழியும் நிலையில், ஞாயிறன்று வரை 381.7 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

ஆனால் சென்னை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை இயல்பைவிட 28 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. இயல்பாக 645.0 மி.மீ பொழியும் நிலையில், ஞாயிறன்று வரை 465.2 மி.மீ மழை மட்டுமே பதி வாகியுள்ளது.

# உலக பிரசித்தி பெற்ற கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலம்: அமைச்சர்கள் பங்கேற்பு



கும்பகோணம், டிச.2:

கும்பகோணத்தில் உலக பிரசித்திபெற்ற ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் 16 ஆண்டுகளுக்கு பிறகு இன்று கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது.

கும்பகோணத்தில் உலக பிரசித்திபெற்ற ஆதிகும்பேஸ்வரர் கோவில் உள்ளது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத் திருவிழா தொடர்புடைய 12 சைவ திருத்தலங்களில் முதன்மையானது ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் அருள்பாலித்து வருகிறார். இக்கோவிலில், கடந்த 2009ம் ஆண்டு ஜூன் 5ம் தேதி கும்பாபிஷேகம் நடந்தது. இந்நிலையில், வரும் 2028ம் ஆண்டில் மகாமக விழா நடைபெற உள்ள சூழலில், கோவில் கும்பாபிஷேக்தை நடத்த பக்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, கும்பாபிஷேகம் செய்ய 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த 2023ம் ஆண்டு மார்ச்,23ம் தேதி பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணிகள் நடந்து வந்தன. தொடர்ந்து 16 ஆண்டுகளுக்கு பிறகு இன்று(டிச.1ம் தேதி) கும்பாபிஷேகம் செய்ய திட்டமிடப்பட்டது.

இதையொட்டி, கடந்த 24ம் தேதி, மகா கணபதி ஹோமம்,கஜ, விக்னேஸ்வர, பிரம்மச்சாரி பூஜைகளும், மாலை வாஸ்து சாந்தி, பிரவேச பலி, 25ம் தேதி நவக்கிரஹ ஹோமம், கோ, அஸ்வ, சுவாசினி பூஜைகளும், மாலை ரக்ஷோக்ன ஹோமம்,க்ராம சாந்தி, திச ஹோமம், 26ம் மூர்த்தி ஹோமம்,ப்ரஸன்ன அபிஷேகம்,ஆச்சார்ய வர்ணம், மாலை அங்குரார்ப்பணம், சோம கும்ப பூஜை, ஸ்தல ஆச்சார்யா ரக்சாபந்தனம், யாக சாலை நிர்மாணம் நடைபெற்றது. மேலும், ஒன்றரை அடி முதல் 9 அடி உயரமுள்ள தங்கமுலாம் பூசப்பட்ட 44 கலசங்கள், காவிரி ஆற்றில் இருந்து கலசங்களில் புனித நீர் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து, 10 ஆயிரம் சதுரடி பரப்பளவில், 99 குண்டங்கள் கூடிய யாகசாலை அமைக்கப்பட்டு, நவம்பர் 27ம் தேதி முதல் கால யாகசாலை பூஜையுடன் கும்பாபிஷேக யாகம் துவங்கியது. இதையடுத்து 28ம் தேதி இரண்டு மற்றும் மூன்றாம் கால யாகசாலை பூஜையும், 29ம் தேதி நான்கு மற்றும் ஐந்தாம் கால யாகசாலை பூஜையும், 30ம் தேதி ஆறு மற்றும் ஏழாம் கால யாகசாலை பூஜையும் நடைபெற்றன.

### அமைச்சர்கள் பங்கேற்பு

கும்பாபிஷேகத்தையொட்டி இன்று அதிகாலை 3 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, எட்டாம் கால யாக சாலை பூஜை, புண்யாஹவாசனம், 3:30 மணிக்கு பிம்ப சுத்தி, ரக்சாபந்தனம், 5:00 மணிக்கு பரிவார பூர்ணாஹுதியுடன் கடம்புறப்பாடாகி, சிவச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க, சிவவாத்தியங்கள் இசைக்க, காலை 6:45 மணிக்கு விமான மகா கும்பாபிஷேகம், 7:15 மணிக்கு மூலஸ்தான மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து, மூலவர் அபிஷேகம், விசேஷ அலங்காரம்,மகா தீபாராதனையும் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவில் அமைச்சர்கள் சேகர்பாபு, கோவி. செழியன், காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், மந்திராலயம் ஸ்ரீ ராகவேந்திரர் மடத்தின் பீடாதிபதி சுபுதேந்திர தீர்த்த சுவாமிகள், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகளிர் உரிமைத் தொகை வங்கிக் கணக்கில் ரூ.1 வந்தால் ரூ.1,000 உறுதி





சென்னை, டிச.2:

தமிழ்நாட்டில் திமுக தேர்தல் வாக்குறுதியான மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ், புதிதாக விண்ணப்பித்துத் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த மாதம் டிசம்பர் 15 ஆம் தேதி முதல் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்பட உள்ளது. இதற்கான முன்னோட்டமாக, தற்போது புதிய பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஒரு ரூபாய் செலுத்தி சோதிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

புதிதாக இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு உள்ள பெண்களின் வங்கிக் கணக்குகள் செயல்பாட்டில் உள்ளனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு தற்போது ரூபாய் ஒன்று தொகையை அனுப்பி சோதித்து வருகிறது. விண்ணப்பதாரர்கள் தங்கள் வங்கிக் கணக்கில் ரூபாய் ஒன்று வரவு வைக்கப்பட்டதற்கான குறுஞ்செய்தி அல்லது வங்கி அறிவிப்பைப் பெற்றிருந்தால், அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்குத் தகுதியானவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளனர் என்பதை உறுதி செய்து கொள்ளலாம். இந்தச் சோதனைப் பணிகள் இந்த வாரம் முழுவதும் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதுவரை சுமார் 1.15 கோடிக்கும் அதிக மான பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பய னடைந்து வருகின்றனர். ஆரம்பத்தில் விதிக்கப்பட்ட சில நிபந்தனைகள் காரணமாகப் பல லட்சம் பெண்கள் உரிமைத் தொகை பெற முடியாத நிலை ஏற்பட்டது. இதனை யடுத்து, புதிய குடும்ப அட்டை வைத்திருப் பவர்கள் மற்றும் தளர்வுகளின் கீழ் வந்த வர்கள் எனப் பலரும் மீண்டும் விண்ணப்பிக் கும் வாய்ப்பைப் பெற்றனர். இந்த விண்ணப் பங்கள் மீதான பரிசீலனைப் பணிகள் சமீபத்தில் நிறைவடைந்தன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### மழைக்காலத்தில் பாடாய் படுத்தும் சுவாசப் பிரச்னை: என்னதான் செய்யலாம்?

மழைக்காலம் (RAINY SEASON) வந்துவிட்டாலே கூடவே வந்துவிடும் சுவாச பிரச்சனைகளும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குளிரினால் அல்லது மழையில் நனைந்தால் சளி பிடிப்பதும், இருமல் காய்ச்சல் போன்றவை தாக்குவதும் இயல்பானது.

நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இருந்தால், இவை குறைந்தபட்சம் மூன்று நாட்கள் மட்டும் இருந்து விட்டு சென்றுவிடும். தொடர்ந்து குறையாமல் மூன்று நாட்களுக்கு மேல் இருந்தால் நிச்சயம் மருத்துவரிடம் சென்று ஆன்டிபயாட்டிக் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அலட்சியமாக இருந்து சாதாரண சளியை நெஞ்சு சளியாக மாற்றிக் கொண்டு நீண்ட நாட்கள் அவஸ்தைப் படுவதை விட்டுவிட்டு சாதாரண நிலையில் சளி அல்லது தொண்டை வலி இருமல் போன்றவைகள் இருக்கும்போதே நம் வீட்டில் உள்ள பொருட்களை வைத்து கை வைத்தியம் செய்து நிவாரணம் பெறலாம்.

எத்தனை முறை படித்தாலும் கேட்டாலும் அந்த நேரத்தில் நாம் எதை செய்வது என்ற குழப்பம் பெரும்பாலும் இருக்கும். இதோ மழைக்காலத்தில் ஏற்படும் சுவாச பிரச்சனைகளுக்கான வீட்டில் செய்யும் சில பாதுகாப்பான பின்விளைவுகளற்ற கை வைத்தியங்கள் உங்களுக்காக.

வீட்டில் எளிதாக செய்யக்கூடிய பயனுள்ள கைவைத்தியங்கள்

1. சூடான நீராவி (STEAM INHALATION) பிடிப்பது: ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொதிக்க வைத்து நீராவியை 510 நிமிடங்கள் உள்ளிழுக்கவும். மூக்கடைப்பு, சளி தளர்த்துவதற்கு இது மிகவும் உதவும். இதில் அவரவர் விருப்பம் போல் 12 துளி யூகலிப்டஸ் ஆயில், மஞ்சள், விக்ஸ் சேர்த்தால் கூடுதல் நன்மை. குழந்தைகளுக்கு இது பாதுகாப்பானது அல்ல என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

2. சளி கரைய இயற்கை நமக்களித்த அற்புத மருந்துகள் துளசி, இஞ்சி, மிளகு ஆகியவை. இவற்றை வைத்து செய்யும் கஷாயம் சளியை கரைக்க உதவும். துளசி இலைகள் சிறிது , தோல் சீவிய இஞ்சி 1 அங்குலம், மிளகு 6 எடுத்து ஒரு கப் தண்ணீரில் சில நிமிடங்கள் கொதிக்க வைத்து மூடி போட்டு சிறிது நேரம் கழித்து வடிகட்டி குடிக்கவும். இதில் கருப்பு வெற்றிலை, கற்பூரவல்லி தழைகளும் சேர்க்கலாம்.

3. தொண்டை வலி, இருமல், காய்ச்சலுக்கு நிவாரணம் தருவது சூடான தண்ணீர் குடித்தல். நாள் முழுவதும் வெந்நீர் பருகுவது சளி வெளியேற உதவுவதுடன் தொண்டையில் ஈரப்பதம் பேணி மூச்சு விட எளிதாகும்.

4. குத்திக் குத்தி வரும் இருமலுக்கு தேன் + அத்தி , இஞ்சி சாறு சரியான தேர்வு. 1 டீஸ்பூன் தேனில் ½ டீஸ்பூன் இஞ்சி சாறு கலந்து குடித்தால் இருமல் நிற்கும்.

5. சாதாரண இருமலை குறைக்க இயற்கையான நிவாரணமாக அனைவரும் பின்பற்றும் எளிய வழி மஞ்சள் கலந்த பால் தான். இதில் சிட்டிகை மிளகுத்தூள் சேர்த்தால் நலம். வெந்நீரிலும் ஒரு சிட்டிகை மஞ்சள் சேர்த்து குடிக்கலாம். அழற்சியை குறைத்து சுவாசத்திற்கு ஓரளவு உதவும்.

6. பொதுவாக தொண்டைப் புண்களுக்கு உப்பு நீர் கொப்புளித்தல் (GARGLE) நன்மை தரும். வெதுவெதுப்பான நீரில் சிறிது உப்பு சேர்த்து தொண்டையில் படும்படி வைத்து உமிழலாம். இதனால் தொண்டை வலி, தொண்டை வீக்கம் குறையும்.

7. மார்பு, முதுகு, கால்களில் வெந்நீர் பேக் பயன்படுத்தி சூடுப்படுத்துதல் (HOT COMPRESS). சுவாசம் மட்டுப்பட உதவும். சூடான ஆவி கொண்டு உடல் முழுவதும் வெப்பத்தை உயர்த்தும் செயல் இது.

8. NATURAL BALM எனப்படும் 2 ஸ்பூன் தேங்காய் எண்ணெயில் சிறிது கற்பூரம் (CAMPHOR) கலந்து வெதுவெதுப்பாக நாசி, மார்பு மற்றும் முதுகில் தடவுவது குளிர்ச்சியால் ஏற்படும் மூச்சு சிரமத்தை குறைக்கும் வழியாக உள்ளது.

9. இவைகளுக்கு அவசியமின்றி சுவசத்தை சீராக்கி எதிர்ப்பு சக்தி பெற சில மூச்சு பயிற்சிகளை செய்யலாம். இதனால் நுரையீரல் பலம் பெறும்.

10. மழையில் நனைந்தால் உடனே ஆடை மாற்றுதல், அறை வெப்பநிலையை சூடாக வைத்தல், புகை, துர்நாற்றம், குளிர்ந்த பானங்கள் தவிர்த்தல், நிறைய தண்ணீர் குடித்தல் போன்றவைகள் வரும் முன் காக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகும்.

# சென்னை: ரியல் எஸ்டேட் ஊழியரை கடத்தி ரூ.40 லட்சம் பறிப்பு




சென்னை, டிச.2:

சென்னையில் இருந்து கிளாம்பாக்கத்துக்கு மாநகர பேருந்தில் வந்த ரியல் எஸ்டேட் ஊழியரை, போலீஸார் என கூறி காரில் கடத்திச் சென்று கத்தி காட்டி மிரட்டி ரூ.40 லட்சம் பறித்தது தொடர்பாக போலீஸார், 4 பேர் கொண்ட கும்பலை தேடி வருகின்றனர்.

திருச்சி, முதலியார் சத்திரம், மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் சரவணகுமார் (55), இவர் அதே பகுதியில் உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவரது உரிமையாளர் கூறியபடி சென்னை மண்ணடியில் பில்டிங் காண்ட்ராக்டராக வேலை செய்து வரும் அவரது நண்பரிடம் இருந்து, ரூ.40 லட்சம் பணத்தை வாங்குவதற்காக சரவணகுமார், திருச்சியில் இருந்து நேற்று முன்தினம் சென்னை வந்துள்ளார்.

பின்னர் சென்னை மவுண்ட் ரோடு எல்.ஐ.சி. அருகே உரிமையாளரின் நண்பரை சந்தித்து அவர் கொடுத்த ரூ.40 லட்சம் பணத்தை ஒரு பையில் பெற்றுக்கொண்டு அங்கிருந்து மாநகர பஸ்சில் ஏறி கிளாம்பாக்கம் நோக்கி நேற்று முன்தினம் இரவு வந்து கொண்டிருந்தார்.

வண்டலூர் அருகே வரும்போது பேருந்தில் சரவணகுமாரின் இருக்கை அருகே அமர்ந்திருந்த 2 பேர் திடீரென சரவணகுமார் கையில் வைத்திருந்த பணப்பையை பறிக்க முயற்சி செய்தனர். இதனைப் பார்த்த மாநகர பேருந்து நடத்துநர், "நீங்கள் யார் ஏன் அவரிடம் இருந்து பையை பறிக்கின்றனர் என்று கேட்டதற்கு, பையை பறித்த 2 பேரும் நாங்கள் போலீஸ்.

இந்த நபர் வைத்திருக்கும் பையில் கஞ்சா உள்ளது. உடனடியாக பேருந்தை நிறுத்துங்கள். நாங்கள் இவரை அழைத்து செல்கிறோம்" என்று கூறியுள்ளனர்.

இதனை நம்பி நடத்துநர் உடனடியாக பேருந்தை நிறுத்தி 3 பேரையும் கீழே இறக்கி விட்டார். கீழே இறங்கியவுடன் பின்னால் வந்த ஒரு காரில் சரவணகுமாரை ஏற்றினர். ஏற்கெனவே காரில் 2 பேர் இருந்தனர். காரில் செல்லும் போது 4 பேரும் சேர்ந்து கத்தியைக் காட்டி, மிரட்டி அவரிடம் இருந்து ரூ.40 லட்சத்தை பறித்துக் கொண்டு கூடுவாஞ்சேரியை அடுத்த பொத்தேரி அருகே அவரை காரில் இருந்து கீழே தள்ளிவிட்டு அங்கிருந்து 4 பேரும் தப்பி ஓடிவிட்டனர். நடந்த சம்பவங்கள் பற்றி சரவணகுமார் கிளாம்பாக்கம் போலீஸில் புகார் செய்தார்.

இது சம்பந்தமாக கிளாம்பாக்கம் போலீஸார் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர். இதுதொடர்பாக மறைமலை நகர் போலீஸாரும் விசாரித்து வருகின்றனர்.

# பொள்ளாச்சியில் பாஸ்போர்ட் அலுவலகம் திறப்பு



**பொள்ளாச்சி, டிச.2**

பொள்ளாச்சியில் கடவுச்சீட்டு அலுவலகத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டது.

பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை, ஆனைமலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) பெற கோவை முதன்மை அலுவலகத்தை அணுக வேண்டிய நிலை இருந்தது.

இதனால் பொள் ளாச்சியில் கடவுச்சீட்டு அலுவலகத் தை துவக்கி, செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பது பொள்ளாச்சியில் வசிக்கும் பொது மக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில், ஞாயிறன்று பொள்ளாச்சி தபால் நிலையத்தில் ஒரு பகுதியில் புதிய கடவுச்சீட்டு அலுவல கம் திறந்து வைக்கப்பட்டது.

பொள் ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கலந்துகொண்டு, அலுவலகத்தை திறந்து வைத்தார். தமிழ கத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதி களில் 38 ஆவது கடவுச்சீட்டு அலுவல கம் கோவை மண்டலத்தில் தற்போது பொள்ளாச்சியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தில் புதிய கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தல், கடவுச்சீட்டு புதுப்பித்தல், கடவுச்சீட்டு பிழை திருத்து தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் செய்து கொள்ளலாம். மேலும் வால் பாறை, டாப்ஸ்லிப் போன்ற பகுதிக ளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகை யில் நடமாடும் சேவை முகாம் மூலம் உடனடியாக கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள ஏதுவாக சேவைகள் நடை பெற்று வருவதாகவும், கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் கட வுச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டிட்வா புயல்: பயிர் சேதம் கணக்கெடுப்பு பணிகளை முடுக்கிவிட முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, டிச.2:**

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (1.12.2025) தலைமைச் செயலகத்தில், டிட்வா புயல் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதங்கள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

டிட்வா புயல் நேற்று பின்னிரவு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலு குறைந்து சென்னைக்கு தென்கிழக்கே 90 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. தொடர்ந்து இன்று மாலைக்குள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலு குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் காரணமாக இன்று சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



டிட்வா புயல் காரணமாக மாநிலத்தில் 27.11.2025-லிருந்து 01.12.2025 வரை நாகப்பட்டினம் (22.2 செ.மீ), மயிலாடுதுறை (13.2 செ.மீ), திருவாரூர் (10.2 செ.மீ), இராமநாதபுரம் (8.7 செ.மீ). தஞ்சாவூர் (8.6 செ.மீ) ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழைப்பொழிவு பதிவாகியுள்ளது. பேரிடர் மற்றும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக ஏற்கனவே முதல்வர் தலைமையில் 27.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், 28.11.2025 அன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் முதல்வர் தலைமையில், வடகிழக்கு பருவமழையால், குறிப்பாக டிட்வா புயல் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை மற்றும் பிற மாவட்டங்களில் பரவலாக மழையும் பெய்து வருவதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தற்போது பெய்துவரும் மழையினால், வேளாண் பயிர்கள் குறிப்பாக நெற்பயிர் சேதம், இதர பயிர்கள் சேதம் குறித்தும், தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் குறித்தும் கணக்கெடுப்பு பணிகளை தொடங்கி, அதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முதல்வர், அலுவலர்களை அறிவுறுத்தினார்.

# போலீஸ் மீதான பொதுமக்கள் இளைஞர்களின் பார்வையை மாற்ற வேண்டும்: டி.ஜி.பி.க்கள் மாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு

**புதுடெல்லி, டிச.2:**

போலீஸ் மீதான பொதுமக்கள் இளைஞர்களின் பார்வையை மாற்ற வேண்டியது உடனடி தேவை என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் போலீஸ் டி.ஜி. பி.க்கள் மற்றும் ஐ.ஜி.க்கள், மத்திய ஆயுதப்படைகள், மத்திய போலீஸ் அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்ற 60-வது மாநாடு சத்தீஷ்காரின் தலைநகர் ராய்ப்பூரில் நடந்தது.

'வளர்ந்த பாரதம்: பாதுகாப்பு பரிமாணங்கள்' என்ற தலைப்பில் நடந்த இந்த 3 நாள் மாநாட்டின் நிறைவு நாளான நேற்று பிரதமர் மோடி சிறப்புரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தொழில்முறை, உணர்திறன் மற்றும் எதிர்வினையாற்றும் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் போலீஸ் மீதான பொதுமக்களின் குறிப்பாக இளைஞர்களின் பார்வையை மாற்ற வேண்டியது உடனடி தேவையாக இருக்கிறது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கான நெறிமுறைகள், இடதுசாரி பயங்கரவாதத்தில் இருந்து விடுபட்ட பகுதிகளுக்கு வளர்ச்சிக்கான வழிமுறைகள், கடலோர பாதுகாப்பை மேம்படுத்த புத்தாக்க மாதிரிகள் ஆகியவற்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் வசிக்காத தீவுகளை ஒருங்கிணைப்பதற்கான புதுமை யான யுக்திகளைப் பின்பற்றுதல், தேசிய கட்டகத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுத்தளங்களை திறம்பட பயன்படுத்துதல் மற்றும் இந்த அமைப்புகளை செயற்கை நுண்ணறிவு மூலம் இணைத்து செயல்படக்கூடிய நுண்ணறிவை உருவாக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

முன்னதாக போலீஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் பதக்கங்கள் வழங்கினார். மேலும் நகர்ப்புற காவல் பணியில் சிறப்பாகச் செயல்படும் மூன்று நகரங்களுக்கான விருதுகளையும் அவர் வழங்கினார்.

இந்த மாநாட்டில் உள்துறை மந்திரி அமித்ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




# ஆளுநர் இல்லம் பெயர் மாற்றம்: முதலமைச்சர் விமர்சனம்



**சென்னை, டிச.2:**

தமிழ்நாடு ஆளுநர் இல்லத் தின் பெயர் 'ராஜ் பவன்' என்பதிலிருந்து 'லோக் பவன்' அதாவது "மக்கள் பவன்" என மாற்றப்படுவதாக ஒன்றிய உள் துறை அமைச்சகம் அறிவித்து உள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஆளுநர் மாளிகைகளின் பெயர்களை மாற்ற 2024 ஆளுநர் மாநாட்டில் தமிழக ஆளு நர் ஆர்.என்.ரவி கோரிக்கை விடுத்திருந் தார். இந்த கோரிக்கையை ஏற்று ஒன்றிய அரசு இந்த முடிவை எடுத்து உள்ளது. யூனியன் பிரதேசங்களில் ஆளுநர் மாளிகை "லோக் நிவாஸ்" என அழைக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. சிந்தனை மாற்றமே தேவை: முதலமைச்சர் மாநிலங்களில் உள்ள ராஜ் பவன் கள் இனி 'லோக் பவன்' என்று அழைக்கப் படும் என ஒன்றிய அரசு அறிவித்து உள்ளதை எதிர்த்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதி விட்டுள்ளார். "சட்டமன்றத்தை மதிக்கா தவர்கள் மக்கள் மாளிகை எனப் பெயர் மாற்றுவது கண் துடைப்பு என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு களையும் இறையாண்மையுள்ள சட்ட மன்றத்தையும் மதிப்பதுதான் தற்போ தைய தேவை" என்றும் அவர் தெரி வித்துள்ளார். "சிந்தனையிலும் செயலி லும் மாற்றம் இல்லாவிட்டால் பெயர் மாற்றமும் தேவையற்றது" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கார்த்திகை தீபத் திருவிழா.. நாளை மகா தீபம்: திருவண்ணாமலையில் 5 அடுக்கு பாதுகாப்பு!



எட்டாம் நாள் விழாவில் குதிரை வாகனத்தில் விநாயகர் மற்றும் சந்திரசேகரர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்

**திருவண்ணாமலை, டிச.2:**

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழா மகத்தான உற்சவமாக நடைபெறவிருக்கிறது. 1,060 சிசிடிவி கேமிராக்கள், 24 மணி நேர மருத்துவ முகாம்கள் நகரின் அமைக்கப்பட்டு உள்ளன. அன்னதானத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற ஸ்தலமாக விளங்கக் கூடிய திருவண்ணாமலை மாநகரில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர் கோவிலில் கடந்த மாதம் 24 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய கார்த்திகை தீபத் திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

## மகா தீபம்

நாளை (டிசம்பர் 3 ஆம் தேதி) அதிகாலை திருக்கோவில் கருவறையில் முன்பு 4 மணிக்கு பரணி தீபமும், அதனைத் தொடர்ந்து அன்று மாலை திருக்கோவில் பின்புறம் உள்ள 2,668 அடி உயரம் கொண்ட தீப மலையின் மீது மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது.

## 15,000 போலீசார்

இதற்காக கோவில் நிர்வாகம், மாவட்ட நிர்வாகம் சார்பில், மும்மரமாக ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில், பக்தர்களின் பாதுகாப்பிற்காக வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில், 5 டிஐஜி, 43 எஸ்பி உள்ளிட்ட 15 ஆயிரம் போலீசார் திருக்கோவில், மாடவீதி, கிரிவலப் பாதை உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 24 மணி நேரமும் குடிநீர்

நெடுஞ்சாலைத்துறை சார்பில், கிரிவலப் பாதை முழுக்க சுமார் 2 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில், 15 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், 24 மணி நேரமும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வரும் பக்தர்களுக்கு தங்கு தடை இன்றி குடிநீர் கிடைப்பதற்காக சுழற்சி முறையில் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 1,060 சிசிடிவி கேமிராக்கள்

அருணாசலேஸ்வரர் திருக்கோவிலுக்குள் இலவச தரிசன க்யூ லைன், சிறப்பு தரிசன க்யூ லைன் உள்ளிட்ட 114 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் திருவண்ணாமலை மாநகரம் கிரிவலப் பாதை உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் 1,060 சிசிடிவி கேமிராக்கள் பொருத்தப்பட்டு பக்தர்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

## 24 தற்காலிக பேருந்து நிலையங்கள்

ஆன்மீக பக்தர்களின் வசதிக்காக நகரங்களை இணைக்கக்கூடிய 9 சாலைகளிலும், 24 தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதோடு, அனைத்து தற்காலிக பேருந்து நிலையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் துரிதமாக செய்து வருகின்றது.

சுமார் 130 இடங்களில் கார் பார்க்கிங் வசதிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அருணாசலேஸ்வரர் திருக்கோவில் சுற்றி, மாட வீதி கிரிவலப்பாதை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 26 இடங்களில் எல்இடி திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கிரிவல பாதை, அருணாசலேஸ்வரர் கோவில் வளாகம், மாட வீதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுகாதாரத்துறை சார்பில் மக்களுக்காக 24 மணி நேரமும் பயன்படும் வகையில் அவசர சிகிச்சை முகாம்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

## 61 உதவி முகாம்கள்

அதுமட்டுமின்றி, காவல்துறையின் சார்பில் சுமார் 61 இடங்களில் 'May I Help you' முகாம்களும் அமைக்கப்பட்டு உள்ளன.

உணவு பாதுகாப்புதுறை சார்பில் 252 இடங்களில் அன்னதானம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், பாக்கு மட்டைகளை பயன்படுத்தி, சுத்தமான முறையிலும், சுகாதாரமான முறையிலும் உணவு தயார் செய்யப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.


## 129 இடங்களில் கழிப்பிட வசதி

24 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்களும் அமைக்கப்பட்டு, பக்தர்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட உள்ளனர்.

129 இடங்களில் தேவையான கழிப்பிட வசதிகளும் முழுமையாக செய்து தரப்பட்டுள்ளன.

நாளை திரு க்கார்த்திகை தீபத் திருவிழா தொடங்கும் நிலையில் திருவண்ணாமலை தற்போது காவல்துறையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# உள்ளூரிலே பொக்கிஷம்



நாகநாதன் கிராமத்தில் மூதாதையர் சம்பாதித்த நிலத்தை மேற்பார்வை பார்த்து வந்தார். இதுவே இவருக்கு பிரதான தொழில் ஆகும். இதன் மூலம் வரும் வருமானத்தால் இவர் வாழ்க்கை நல்ல விதமாகவே சென்றது. இவர் மகன் துரைராஜ் நன்கு படித்து கிராமத்தை விட்டே செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார். ஒரு சிலரே இவருக்கு நண்பர்கள். பள்ளி இறுதியாண்டு படிப்பு வந்ததும் அப்பாவிடம் மாடியில் சகல வசதியுடன் கூடிய ஒரு போர்ஷன் கட்டிக்கொண்டு மேலேயே வாசம் செய்தார். தேர்வு முடிவு வந்ததில் துரைராஜ் மாநிலத்தில் இரண்டாவது மதிப்பெண் பெற்றதால் மருத்துவ துறையில் அரசாங்க ஒதுக்கீட்டில் சென்னையில் அரசாங்க மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார்.
துரைராஜ் சென்னை வந்த பிறகு ஊர் பக்கமே செல்ல மனமில்லால் இங்கிருந்து வெளி நாடு செல்லும் நோக்கத்தில் இருந்தார். இந்தப் படிப்பிலும் தனது திறமையைக் காட்டி முதல் மாணவராக தேர்வானார் துரைராஜ்.
விடுமுறையில் வந்த துரைராஜ் வெளிநாட்டில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்தார்.
அமெரிக்காவில் உள்ள ஒரு மருத்துவ பல்கலைக்கழகம் மேற் படிப்பு படிக்க இவருக்கு அனுமதி தந்தது. அப்பாவிடம் ஆகும் படிப்புச் செலவைச் சொன்னதும் அவர் யோசித்தார். அப்போது அங்கு வந்த துரைராஜ் மாமா, மருமகனே ஆகும் செலவில் நான் பாதி தருகிறேன் என்றதும் நாகநாதனுக்கு என்ன சொல்வது என்று அறியாமல் திகைத்து நிற்க, துரைராஜ் மாமா, மருமகனே மற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றார். நாகநாதன் இவர் அமெரிக்கா சென்றால் எங்கே ஊர் பக்கம் வருவார் என்றதும் , துரைராஜ் மாமா முருகேசன் நாம் செல்லுவோம் என்றார். மாமாவின் ஏற்பட்டால் துரைராஜ் பணம் எல்லாம் கட்டி பிரயாணத்திற்கு தயாரானார். நாகநாதன் இப்படி மகன் செல்லுகிறானே என்று வருத்தப்படாமல் முருகேசன் மகளிடம் மட்டும் அவன் தன்னை நிலைப் படுத்திக் கொண்டாலே போதும் என்றார். முருகேசன் மகள் அப்பா இதுவரை அவர் படிப்பிற்கு எவ்வளவு செலவாகி இருக்கும் என்றதும், நோட்டில் தான் பார்க்க வேண்டும் என்றார். முருகேசன் மகள் துர்கா மருத்துவ துறைக்கு பயன்படும் செடிகளை பயிரிட்டு அதன் வேர், பூக்கள், காய்கள், கனிகள் இவற்றை வியாபாரம் செய்து வருகிறார். நிறைய வாடிக்கையாளர்கள் இவர் சம்பாதித்து வைத்து உள்ளார். வரும் வருமானத்தில் இவர் நிறைய நல்ல தொண்டுகள் செய்கிறார். நாகநாதன் ஆலோசனைப்படி தான் இவர் விவசாயம் செய்கிறார். துரைராஜ் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரம் இருக்கும் நிலையில் தனது அப்பாவிடம் தானும் வயல்வெளிக்கு வருகிறேன் என்றார். நாகநாதன் வா போகலாம் என்றார். வயலுக்கு வந்த துரைராஜ் நிறைய கேள்விகள் கேட்டார்.
அப்போது நாகநாதன் இருக்கும் போது எல்லாம் நீ அறியாமல் விட்டு விட்டு இப்போது ஒரே நேரத்தில் அறிந்து கொள்ள நினைப்பது கொஞ்சம் கடினம் தான் என்றார். துரைராஜ் பதிலேதும் கூறாமல் , சுற்றி வலம் வந்தார். என்ன இவ்வளவு பெரிய வயல்கள் நமக்கு உள்ளதா என்று நினைத்தார். அப்பா எப்படி நிர்வகிக்கிறார் என்று நினைத்தார் துரைராஜ். சற்று தள்ளி வந்து பூச்செடிகள் , காய்கறிகள் வளர்ந்துள்ளதைக் கண்டு ஏதும் பேசாமல் நகர்ந்தார் துரைராஜ்.
அடுத்த நாளும் அப்பாவிடம் வயலுக்கு வந்த துரைராஜ், இயற்கை உரங்கள் தாராளமாக கிடைக்கிறதா என்றதும், நாகநாதன் பக்கத்துக்கு வயலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடந்துகொண்டிருந்தது. துரைராஜ் இந்த கருவிகள் எல்லாம் எப்போது வாங்கினீர்கள் என்றதும், நாகநாதன் துர்காவிடம் கேள் என்றதும், துரைராஜ் துர்காவுமா இதில் உள்ளார் என்றார். அதோடு அந்த பேச்சு நின்றது. நாகநாதனும் மேற்கொண்டு துர்கா செய்யும் பயிர்கள் பற்றி பேசவில்லை. துரைராஜ் வேறு எந்த தானியங்கள் விவசாயம் செய்கிறீர்கள் என்றார். நாகநாதன் சமயம் பார்த்து பயிரிடுவோம் என்றார். பூச்சி தாக்குதலுக்கு எப்படி கையாளுகிறீர்கள் என்றார் துரைராஜ். இயற்கையில் பூச்சிக் கொல்லி மருந்து தயாரித்து அதனை உபயோகிக்கிறோம் என்றார்.
துரைராஜுடன் ஒரு பட்டாளமே அவரை வழி அனுப்ப தயாரானது. துரைராஜ் ஏதும் சொல்லவில்லை. விமானநிலையம் வந்ததும் துரைராஜ் எல்லோரிடமும் வருகிறேன் என்று கூறி விட்டு, துர்காவிடம் வயல் வெளிகளில் அப்பாவுக்கு துணையாக இரு என்றார். துர்கா துரைராஜ் தவிர அனைவர் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து ஓடியது. துரைராஜ் உள்ளே சென்றதும் அனைவரையும் ஊர் திரும்ப ஆயத்தம் ஆன போது துர்கா சில இடங்களை பார்த்துவிட்டு செல்லலாம் எனக் கூறி அழைத்து சென்றார். நாடு இரவில் எல்லோரும் ஊர் திரும்பினார்கள். ஊர் போய் சேர்ந்ததும் துர்காவிற்கு நலமா வந்ததாக செய்தி அனுப்பினார் துரைராஜ்.
மேற்படிப்பை முடித்த துரைராஜ் புற்று நோய் சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்தார். பல கட்டுரைகள் எழுதினார் துரைராஜ். அவரது சில கண்டுபிடிப்புகள் அவருக்கு நல்ல பெயரை வாங்கித் தந்தது. இன்றுடன் துரைராஜ் ஊரிலிருந்து வந்து நான்கு வருடங்கள் கடந்தன. ஊருக்கு பணம் அனுப்புவதில் தவறியதில்லை துரைராஜ். அமெரிக்காவிலேயே நிறைய வெகுமதிகள் வாங்கி தலை சிறந்த மருத்துவர்களில் ஒருவர் என்ற பெயர் பெற்றார் துரைராஜ்.
நாகநாதன் துர்காவிடம் என்ன என் மகனுக்கு நாம் இருப்பது ஞாபகம் இருக்குமா என்றதும், துர்கா மேலும் மேலும் பதவிகள் வரும் போது எப்படி நம் ஞாபகம் வரும் என்று சோகத்துடன் கூற, நாகநாதன் நீயும் ஏன் திருமணம் வேண்டாம் என்கிறாய் என்றார். துர்கா பதில் ஏதும் கூறாமல் நகர்ந்தார்.
துரைராஜ் தனது பணியில் முழு கவனமும் செலுத்தினாலும் சமீப காலமாக அவருக்கு ஊர் ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. துர்காவை தொடர்பு கொண்டு ஊர் நிலவரம் பற்றி கேட்டார். கடைசியில் துர்கா நாங்கள் கிளம்பி வரலாமென யோசிக்கிறோம் என்றதும் துரைராஜ் ஏதும் சொல்லாமல், அப்புறம் பேசுகிறேன் என்று கூறி தொடர்பை துண்டித்தார். இதற்கு பிறகு ஒரு மாதத்தில் துர்காவை தொடர்பு கொண்ட துரைராஜ் நான் அடுத்த வாரம் கிளம்பி ஊருக்கு வருகிறேன் என்றார். துர்கா நேரில் பேசலாம் என்று கூறி தொடர்பில் இருந்து வெளியே வந்தார்.
துரைராஜ் ஊருக்கு வந்ததும் நாகநாதன் உட்பட எல்லோரும் மகிழ்ந்தார்கள். அப்பாவிடம் துரைராஜ் துர்கா இன்று எப்போது வயலுக்கு வருவார் என்றதும், நாகநாதன் அவரிடமே கேளு என்றார். நாகநாதன் கிளம்பும் போதே துரைராஜும் கிளம்பினார் வயலுக்கு. சிறிது நேரத்திற்குப் பிறகு வந்த துர்காவிடம் என்னென்ன பயிரிடுகிறாய் என்று துரைராஜ் கேட்க, துர்கா நித்ய கல்யாணி பூவைக் காட்டி இது புற்றுநோய் மலர் என்றார். புற்று நோய்க்கு இந்த மலருடன் கருஞ்சீரகம் சேர்த்து தயாரிக்கும் மருந்து நல்ல பலனை அளிக்கிறது என்றார். எனக்கு நல்ல வியாபாரமே இது தான் என்றார். இது, வெள்ளை மற்றும் இளம் சிகப்பு நிறங்களில் காணப்படும். இந்த மலர் முகப்பரு போக்கவும் உதவும் என்றார். துரைராஜ் எப்படி என்று கேட்க, துர்கா இந்த மலரில் நான்குவிதமான ஆல்கலாய்டு இருக்கிறது என்றார். முக்கியமான ஆல்கலாய்டான வெண்க்ரீஸ்ட்டின், விண்பலஸ்டின் இரண்டும் இம்மலரில் உள்ளது. இது புற்று நோய்க்கு மருந்தாக அமைகிறது என்றார். சக்கரைநோய் , மூலவியாதி இரண்டுக்கும் இது மருந்தாக அமைகிறது என்றார். இது காக்கைப்பூ, கல்லறைப்பூ ஆகிய மாற்றுப் பெயர்களாலும் இது அழைக்கப்படும் என்றார். இந்த மலர் வாங்குபவர்கள் இதனை காயவைத்து பொடியாக்கி உபயோகிப்பார்கள் என்றார். இதையெல்லாம் கேட்ட துரைராஜ் துர்காவை பாராட்டிவிட்டு மாலை வீட்டிற்கு வர முடியுமா என்றார். மாலை வீட்டிற்கு வந்த துர்காவிடம் தனது கணினியில் புற்றுநோய் பற்றி தான் செய்த ஆராய்ச்சிகளை காண்பித்தார். பொறுமையாக பார்த்த துர்கா கடைசியில் அங்கு நித்யகல்யாணி பூ உபயோகம் ஆகிறதே என்றார். ஒரு சிரிப்பை உதிர்த்த துரைராஜ் இன்னும் பல செய்திகளைக் கூறினார்.
அடுத்த நாள் முதல் நித்யகல்யாணப்பூ கொணர்ந்து துரைராஜ் மாடியில் ஒரு ஆராய்ச்சி கூடமே துவங்கினார். அடிக்கடி துர்காவை உதவிக்கு அழைத்தார் துரைராஜ். சில பரிசோதனைகள் துரைராஜ் மனதிற்கு திருப்தியாக அமைய , துரைராஜ் ஆனந்தமடைந்தார். அன்று வீட்டிற்கு தன்னுடன் படித்த இரண்டு மருத்துவ தோழர்கள், தனது அபிமான ஆசிரியர், துர்கா, மாமா, மாமி, அமெரிக்காவில் ஆராய்ச்சிக்கூடத்தில் தன்னுடன் இருந்த மருத்துவர் என்று பல பேர்களை அழைத்திருந்தார் துரைராஜ் . வந்திருந்தவர்களை துர்கா வரவேற்று அவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த இடங்களில் தங்க வைத்தார். மதியம் உணவுக்கு பின் எல்லோரும் ஏற்பாடு செய்திருந்த இடத்தில் கூடினார்கள். துரைராஜ் எல்லோரையும் வரவேற்று அமரச் செய்தார். பிறகு தனது திட்டத்தை கூறினார்.
இந்த ஊரில் துர்கா புற்று நோய் ஆராய்ச்சி மையம் கட்டி அதில் ஒரு பகுதியில் மிகவும் குறைவான பணத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும் எனறார். மற்ற பிரிவுகள் ஏற்படத்தப்பட்டு மிகவும் குறைவான பணத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை செய்யப்படும் என்றார். வந்திருந்தவர்கள் இந்த திட்டத்தை வரவேற்று தாங்களும் இதில் இணைக்கிறோம் என்றார்கள். துரைராஜ் துர்கா செய்யும் வியாபாரம் பற்றி கூறி விட்டு இனிமேல் நித்ய கல்யாணி பூவில் எழுபத்தி ஐந்து சதவீதம் நாமே வாங்குவோம் என்றார். நாமே மருந்து தயாரிப்போம். மருந்து ஆணையம் கிட்டே தயாரிப்பு அனுமதி பெற்று தொடங்குவோம் என்றார். நாகநாதன் மற்றும் முருகேசன் ஆனந்தம் அடைந்தார்கள். மக்களால் தற்போது அதிக பணம் கொடுத்து வாங்கும் மருந்துகளை நாம் ஒரு அறக்கட்டளை மூலம் கொடுப்போம் என்றார். வந்திருந்த மருத்துவர்கள் நாங்களும் இதில் இணைந்து பண உதவி மட்டுமல்ல , உழைப்பையும் தருகிறோம் என்றார்கள். துரைராஜ் இந்த உள்ளூரிலேயே பொக்கிஷம் ஆன மருந்து உள்ளது. அதை பயன்படுத்தவே இந்த திட்டம் என்றார்.
இடம் தர நாகநாதன் முன் வர, முருகேசன் தன் பங்குக்கு மருத்துவமனை கீழ் கட்டிடத்திற்கு பணம் அளிக்கிறேன் என்றார். துரைராஜ் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை எனலாம். துர்கா நாகநாதனிடம் இவர் பேர் வாங்கியதும் நிறைய மதிப்பு எதிர்பார்த்திருப்பார், அவருக்கு அது கிடைத்திருக்காது போலிருக்கிறது , அதனால் இப்படி மாறிவிட்டார் என்று சொல்ல , நாகநாதன் இருக்கலாம் என்றார். இவர் ஒரு தனிப்பட்ட மனிதன் ஆயிற்றே என்றார். வேறு என்ன திட்டம் மனதில் உள்ளதோ என்று துர்கா நினைத்தார்.

அப்போது முருகேசன் நாகநாதனிடம் எப்போது என் பெண் துர்கா கழுத்தில் துரைராஜ் தாலி கட்டப் போகிறார் என்றதும், நாகநாதன் துரைராஜை நோக்க , துரைராஜ் துர்காவை நோக்க, சற்று நிலவிய அமைதியை விலக்கி நாகநாதன் மனைவி மௌனம் சம்மதித்திற்கு அறிகுறி என்றதும், வந்திருந்த துரைராஜ் அபிமான ஆசிரியர் துர்கா கூட பொக்கிஷம் தானே என்றார். அப்போது அங்கே இருந்த துரைராஜுடன் படித்த தோழர் நல்ல நாள் பார்க்கவோ, என்று கூற துரைராஜ் உள்ளூரிலேயே பொக்கிஷங்கள் என்று மனதிற்குள் எண்ணினார்.

-மு.வெ.சம்பத்


# காக்கா கடி !

"வாடா பேராண்டி !" கல்லூரி யிலிருந்து வந்த முருகனை வரவேற்றார் பாட்டி கனகா.
" என்ன பாட்டி , எப்படி இருக்கீங்க ?" ஷூக்களை அவிழ்த்த முருகன் பையை மேஜைமேல் வைத்தான்.

" என்னடா இது ! காலையில காலேஜ் போனபோதுதானே விசாரிச்சே. இப்போசாயந்திரமும் விசாரிக்குறே ?" முருகன் புன்சிரிப்பொன்றை உதிர்த் தான். " பாட்டி , பெரியவங்கள பார்த் தால் உடனே நலம் விசாரிக்கணும் பாங்க. அதுதான்..."

" ஓஹோ...அப்படின்னா நீ ' பாட்டி டிஃபன் சாப்பிட்டீங்களா. காஃபி குடிச்சீங்களா. அப்புறம் சாப்பாடு சாப்பிட்டீங்களா ' அப்படின்னு கேட்டிருக்க வேண்டியதுதானே?"
" பாட்டி , நான் கேட்ட கேள்வியில இதெல்லாம் அடக்கம் !"
" அப்படியா சரி. நீ ஒண்ணு பண்ணு. இனிமேல் சாதத்துல சாம்பார், ரஸம், மோர், காய், ஊறுகாய் எல்லாத்தை யும் ஒண்ணா கலந்து சாப்பிடு ."
" ஏன் ?"
" உன் கேள்வி மாதிரியே சாப்பாடும் இருக்கும்."
" பாட்டி , உங்களுக்கு குசும்பு ரொம் பவே ஜாஸ்தி. உங்களோட ரவுசு தாங்காமல்தான் தாத்தா இந்த உலக த்தைவிட்டே போயிட்டாரு ."
" ஆமா..ரொம்ப சின்ன வயசு பாரு. எண்பத்திரெண்டு வயசில போய் சேர்ந்தாரு. ஆனா உங்க தாத்தா சின்ன வயசில பண்ண ரவுசு இருக்கே...அப்பப்பா !" என்றதும் " பாட்டி ..பாட்டி ப்ளீஸ் அது என்ன சொல்லுங்களேன்." கெஞ்சியபடி கட்டிலில் பாட்டி பக்கத்தில் அமர்ந் தான் முருகன்.
" அப்போ நானும் உங்க தாத்தாவும் ஒரே பள்ளிக்கூடத்தில படிச்சிக் கிட்டிருந்தோம்.
" கோ எஜுகேஷனா ?"

" ஆமாம். நான் அஞ்சாம் க்ளாஸ். உங்க தாத்தா ஏழாம் க்ளாஸ். பார்க்க ஜோராயிருப்பார். நானும் சுமாரா யிருப்பேன்.தாத்தா எல்லா பாடத் துலயும் அதிக மார்க் எடுத்து முதல் ரேங்க் எடுப்பார். நானும்முதல் ரேங்க்.



" இருவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து புன்னகை செய்வோம். சில நாள் கழிச்சி பேச ஆரம்பிச்சோம். அப்புறம் ஒருநாள்வெட்கத்தை விட்டு தாத்தாவை நேசிப்பதாக நான் சொன்னேன். உடனே அவர்என்ன செஞ்சார் தெரியுமா ? தன் டிரவு சர்லேர்ந்து ஒரு கம்மர்கட் எடுத்து பாதி கடிச்சிட்டு மீதியை என்னிடம் நீட்டினார்.
" நான் ஒண்ணும் புரியாமல் தெகைச்சுப் போய் நின்னேன். ' ம். இந்தா. காக்காக்கடி கம்மர்கட். இதை வாங்கி நீ சாப்பிட்டால் உன் காதலை நான் ஏத்துக்கறேன். இல்லேன்னா நடையைக்கட்டு ' அப்படின்னார்.

" தர்மசங்கடமான நிலைமை. எச்சில் பட்ட கம்மர்கட்டை எப்படி வாயில் போடறது... நேசிக்குறேன்னு சொன் னதுக்கு இந்த தண்டனையா..நான் குழம்பினேன்.
" அவர் விடவில்லை..' என்ன யோ சிக்கிறே. இன்னும் அஞ்சு வினாடி தான். அதுக்குள்ள நீ இதை எடுத்து சாப்பிடல்லேன்னா நான் போய்க் கிட்டே இருப்பேன்.ஒண்ணு , ரெண்டு, மூணு, நாலு , ' அவர் அஞ்சு என்பத ற்குள் நான் சட்டென கம்மர்கட்டை எடுத்து வாயில் போட்டுக்கிட்டேன்.
" ஆனால் பேராண்டி , சத்தியமா சொல்றேன். அன்னிக்குவெறுப்போடு நான் சாப்பிட்ட கம்மர்கட் இனிக்க வில்லை. கசந்தது. மனுஷனின் மிரட்டலுக்கு அடி பணிய வேண்டி யதாப் போச்சு.!"
" பாட்டி , ஆரம்பமே ரொமான்ஸா இரு க்கே !" என்றான் முருகன். " மேற்கொ ண்டு சொல்லுங்க ."
" ஆனால் ஆரம்பத்திலே எனக்கு பிடிக்காமல் போனாலும் அதன்பிறகு எனக்கு காக்கா கடி ரொம்பவே பிடிச்சுப் போயிருந்தது. பிஸ்கட் , ரொட்டி இதெல்லாம்கூட காக்கா கடி யாகத்தான் நான்சாப் பிட்டேன்.

அதுக்கப்புறம் நாஎஸ். எஸ்.எல்.ஸி.முடி ச்சிட்டு வீட்டிலயே இருந்திட்டேன். தாத்தா காலேஜ்ல சேர்ந்து டிகிரி முடிச்சு ஒருவேலையில் சேர்ந்தார்.

எங்க ரெண்டுபேர் வீட்டிலேயும் சம்மதி ச்சு நாங்க கல்யாணம் செய்துகிட் டோம்."

" பாட்டி வெரி இன்ட்ரஸ்டிங் ஸ்டோரி ! சரி. காக்கா கடி விஷயம் தொடர்ந் ததா.?" ஆர்வம் தாளாமல் முருகன் கேட்க " முருகா , இது ஒன்ஸைடு காக்கா கடி " வேதனையுடன் கூறினார் கனகா.
" அப்படின்னா?"

" கிட்டத்தட்ட நிறைய தடவை தாத்தா வோட காக்கா கடியைதான் நான் சாப்பிட்டிருக்கேன். ஒருநாள் நான் சாப்பிட்டவடையில் பாதியை அவரிடம் நீட்டினேன்.என்ன செய்யப்போகிறார் ன்னு ஆவல் !மனுஷன் ஏதோ வேண்டாத பொருளைப் பார்ப்பது போல் பார்த்துட்டு இடத்தை காலி செய்தார். நான் வடையை தூக்கி கடாசினேன். அன்னிக்கே காக்கா கடி சமாதிக்குப் போனது !" பாட்டி வேதனையோடு கூறி முடித்தார் .!



-வி.கே.லக்ஷ்மிநாராயணன்

ராமகிருஷ்ணா நகர், போரூர், சென்னை 600 116

# தவறிய ஒரு வினாடி




அறையின் ஒரு மூலையில், பதற்றம் மட்டுமே தனது கடிகாரமாகச் செயல்பட, தருண் அவசரமாகத் தனது சாக்ஸை மாட்டிக்கொண்டிருந்தான். புதிய வெள்ளைச் சட்டை அவனது சுறுசுறுப்பைக் காட்டினாலும், இன்று எப்படியாவது கிளம்பிச் செல்ல வேண்டும் என்ற ஒரு அசாத்திய உந்துதலின் சூடு அவன் முகத்தில் தெரிந்தது. ஒவ்வொரு நொடியும், பேருந்துக்காகத் துடித்துக்கொண்டிருந்தது அவன் மனம்.

தருண் பரபரப்புடன் கதவை நோக்கி நடந்தான். "என்ன, தருண்! பள்ளிக்குக் கிளம்பிட்டியா? இல்லைன்னா சாப்பிட்டு விட்டு போ," என்று தன் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டே கேட்டார் பழனி. அவரது குரலில் அன்றாட அக்கறை இருந்தது.

தருணுக்குக் கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. அந்தப் பிடிவாதத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்கு எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது.

"போதும்ப்பா! எத்தனை தடவை சொல்றது? 'சும்மா டெய்லி இந்தத் தொல்லையைத் தாங்க முடியல! வாய்மூடிட்டு இரு!'" வார்த்தைகள் வெடித்துச் சிதறின. எரிச்சலுடன் உதட்டைப் பிதுக்கிவிட்டுத் திரும்பினான்.

அவனது கோபத்தின் வேகத்தில், முன்னால் இருந்த மர வாசக்காலின் விளிம்பைக் கவனிக்கவில்லை. "டொம்!" அவன் நெற்றியின் மையத்தில் வாசக்காலின் கடினமான முனையில் பலமாகக் மோதியது. ஒரு சில்லிடும் வலி ஐஸ் கட்டியைப் போலப் பரவ, அவன் கண்களில் கணம் மின்னியது. வாசக்காலில் சிந்திய ஒரு சொட்டு இரத்தம், தரையில் ஒரு சிறிய, செந்நிறப் புள்ளியை உருவாக்கியது. அது, அன்றைய நாளின் கொடூரமான விபத்துக்கான முதல் எச்சரிக்கைச் சத்தம்.

பழனி சோபாவைத் தாண்டித் துள்ளினார். "டேய்! என் பேச்சைக் கேட்காம நீ போன, அதான் இடிச்சுக்கிட்ட! இப்பவாவது என் பேச்சைக் கேளு! இன்னைக்கு வேண்டாம்!"

தந்தையின் கண்களில் இருந்த உண்மையான பயம், தருணின் வேகத்தை ஒரு வினாடி தயங்க வைத்தது. ஆனால், பேருந்து வந்து விடுமே என்ற எண்ணம் அவனைத் தின்ன, அந்தத் தயக்கத்தை மறந்தான். வலி தாங்க முடியாமல் தண்ணீரை விழுங்கி, சோபாவில் அமர்ந்தான். நெற்றியில் ஏற்பட்ட வீக்கம், அவன் கவனத்தைச் சிதைத்தது.

வீடு முழுவதும் பயங்கர அமைதி சூழ்ந்திருந்தது. தூரத்தில் இருந்து ஒரு கனமான டீசல் எஞ்சினின் இரைச்சல் மெல்ல மெல்ல நெருங்கியது.

"பீ...ப்! பீ...ப்!" அதுதான் அவனது பேருந்து!

அது ஒருமுறை ஹாரன் அடித்து, சத்தம் அடங்குவதற்குள், பேருந்து மெல்லச் சாலையில் நகரும் சத்தம் தெளிவாகக் கேட்டது. தருண் அலறி அடித்தான். அவன் சோபாவில் இருந்து எழுந்த வேகத்தில் கால்கள் தடுமாறின. புத்தகப்பை தோளில் குலுங்க, பதற்றத்துடன் ஓடினான்.

சாலையில், மஞ்சள் நிறப் பேருந்து வேகம் எடுத்திருந்தது. தருண் ஒரு மின்னல் போல அதன் பின்னால் ஓடினான். கடைசி முயற்சியாக, நகர்ந்து கொண்டிருந்த பேருந்தின் பின் கம்பியை நோக்கித் தன் கையை நீட்டினான்.

அப்போது, அவனது ஓட்டத்தின் வேகமும், நெற்றியில் இடித்த வலியின் சோர்வும் சேர்ந்து, அவன் கால்களைப் பலவீனப்படுத்தின. அவன் கால் வழுக்கிற்று.

தருண், ஒரு பலவீனமான காகிதப் பொம்மை போல, சாலையின் கடினமான, சூடான கான்கிரீட் தரையில் தலைகீழாக விழுந்தான். டிரைவர் பதறியடித்து பிரேக் போட்டார்.

வீட்டிற்குள் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த பழனி, ஒரு சிலை போல உறைந்து போனார். "என் கண்ணே...!" என்று நெஞ்சில் அறைந்து அழுதார்.

சாலையில் கிடந்த தருணின் வெள்ளைச் சட்டை, ரத்தத்தாலும், கூர்மையான சிறு கற்களாலும் கிழிக்கப்பட்டு, மஞ்சள் நிற மண்ணில் கிடந்தது.

ஆம்புலன்ஸ் சைரனின் ஒலியும், சாலையில் கிடந்த அவனது காயமும், அங்கே பழனி மனதில் ஒரு கேள்வியைப் புதைத்தது: "வீணாகத் தனது மகனைத் தடுத்து, அவனது அவசர விபத்துக்கு நானே வழி வகுத்து விட்டேனே," என்று அவர் கதறி அழுதார்.

ஆம்புலன்ஸின் படுக்கையில், நெற்றியில் ஒட்டப்பட்டிருந்த சின்னக் கட்டோடும், முழங்கையில் வழிந்த ரத்தத்தோடும் தருண் கண்களை மூடியிருந்தான். பழனி மெதுவாக அவனது கைகளைப் பற்றினார். "தருண்... என் கண்ணே..."

தருண் மெல்லக் கண்களைத் திறந்தான். தன் தந்தையின் கண்களில் நிறைந்திருந்த உண்மையான கண்ணீரைக் கண்ட தருண், எந்தக் கோபமும் இல்லாமல், அமைதியாகத் தனது கைவிரல்களால் தந்தையின் கையை இறுக்கினான்.



**-டாக்டர் ப.பாண்டியராஜன்**
மதுராந்தகம்

# புண்ணியம் தேடுவோம்



டிசம்பர் மாதம் முதல் நாள்,தமிழ் மாதம் கார்த்திகை 16 ம் நாள் விருச்சிக மாதம் 15 ம் நாள் குருவாயூர் ஏகாதசி கைசிக ஏகாதசி ,மோக்ஷ ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி என பல பெயர்களில பக்தர்களால் அனுசரிக்கப் படும் தினம்.

பக்தர்கள் ஆராதிக்கும் , பகவானின் அருள் கொண்ட குருவாயூர் கேசவன் என்னும் யானை பகவானை அடைந்த தினம்.

மேல்பத்தூர் பட்டத்திரிப்பாடு தான் எழுதிய நாராயணீயம் என்னும் கிரந்தத்தை பகவானுடைய சன்னதியில் சமர்ப்பணம் செய்த மகா புண்ணிய தினம்.

ஏகாதசி என்று அழைக்கப்படும் நாளானது, பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களுக்கு இடையிலே பதினொன்றாம் நாளைக் குறிப்பதாகும். இது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும், முக்கியமான விரத நாளாகும். வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் நிகழ்கின்றன.

குருவாயூர் ஏகாதசி நாள் கார்த்திகை/விருச்சிக மண்டல காலத்தில் வரும் ஏகாதசியாகும்.

இந்த புண்ணிய தினத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம்.

க்ஷீரசாகரத்தில் அனந்தசயனனாக பள்ளி கொள்ளும் பகவான் யோகநித்திரையிலிருந்து எழுந்து லஷ்மி தேவியோடு நம்மை அனுக்கிரகிக்கும் மகா புண்ணிய தினம்.

அறநெறியையும், அறநெறியில் உள்ளவர்களையும் காக்கவும்,அதர்மத்தையும், அதர்ம வழியில் உள்ளவர்களையும் அழிக்கவும் பகவான் அவதாரம் செய்கிறார்.

அவ்வண்ணமே பூரண அவதாரம் எடுத்த ஶ்ரீ கிருஷ்ண பகவான் பல அவதார லீலைகள் செய்த புண்ணிய தினம்.

பகவத்கீதையை அருச்சுனனுக்கு பகவான் உபதேசம் செய்த புண்ணிய தினம்.

தேவேந்திரன் சுரபியாகிய காமதேனுவுடன் பிருந்தாவனத்தை அடைந்து பகவானை துதித்தும், காமதேனு பால் சுரந்து கோவிந்தாபிஷேகம் நடத்திய மகா புண்ணிய தினம்.

குருவாயூர்க்ஷேத்திரப் பிரதிஷ்டா தினம். அத்வைதத்தின் குருவும், சைவ அவதாரமுமான ஆதிசங்கரர் குருவாயூர் கோவிலில் வந்து, இன்று நடைபெறும் பூஜா நிஷ்டைகளை உருவாக்கிக் கொடுத்த மகா புண்ணிய தினம்

குருவாயூர் கோவிலில் தாந்த்ரீக சடங்குகள் ஒன்றும் இல்லாமல் பகவான் பக்த ஜனங்களை நேரில் வந்து அனுக்கிரகம் செய்ய வெளியே வரும் புண்ணிய தினம்.

பக்தரில் உத்தமர்களாகிய மேல்பத்தூர், பூந்தானம், ஆதிசங்கரர், குரூரம்மா, வில்வமங்கலம் சுவாமிகள் போன்றவர்களுக்கு பகவத் தரிசனம் கொடுத்த மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இழந்த குரலை மீண்டும் பகவான் அருளிய மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதர் தனது சீடர்களுடன் குருவாயூரில் வந்த சங்கீத ஆராதனை நடத்திய மகா புண்ணிய தினம். இன்றும் ஆராதனை நடந்து வருகிறது.

குருவாயூர் ஶ்ரீகோவில் இன்று முழுவதும் தரிசனத்துக்காக திறந்திருக்கும் புண்ணிய தினம்.

கார்த்திகை — வளர்பிறை ஏகாதசி — பிரபோதின ஏகாதசி-- கைசிக ஏகாதசி — அனைத்துப் பழங்களையும் பகவானுக்கு நிவேதனம் செய்து நவ வித பக்தியால் இறைவனை வேண்டிக் கொண்டால் இறையருளடன் மங்கல வாழ்வு மலரும்.

ஏகாதசி விளக்கு என பதினைந்து நாட்கள் குருவாயூர் கோவிலில் கோலாகலமாக நடக்கும் இந்த குருவாயூர் ஏகாதசி மகத்துவம் அறிந்து, விரத விதிகளை பாராட்டி அனுசரித்து 'நான்''எனது'என்ற அகந்தை இல்லாமல் 'சர்வம் கிருஷ்ணார்ப்பணம்' என்ற கோவிந்த நாமத்தை வணங்கி நற்கதி பெறுவோம்.



**சோபனா விச்வநாதன்.**

# தினம் ஒரு தலைவர்கள் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் வரலாறு

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (6 சூன் 1829 31 சூலை 1912), இங்கிலாந்தின் கெண்ட் நகரில் ஜோசப் - மரியா தம்பதியின் எட்டாவது குழந்தையாக ஆலன் ஆக்டேவியன் ஹியூம் பிறந்தார். தந்தை ஜோசப் ஹியூம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஒரு தீவிர உறுப்பினராக இருந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்ததும் ஆலன் ஓர் ஐ.சி.எஸ். அதிகாரியாகத் தேர்வு பெற்று இந்தியாவில் 1850-ல் உத்தரப் பிரதேசத்தில் பணியைத் தொடங்கினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியைத் துவக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். எட்டாவா நகரில் 1856-ல் ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஆலன் தொடங்கினார். ஆலன் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் பிற்காலத்தில் அந்தப்பகுதி "ஹியூம் கஞ்ஜ்' என்று வழங்கப்பட்டு அது மருவி தற்பொழுது "ஹோம் கஞ்ஜ்' என அழைக்கப்படுகிறது.

1857-ல் சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு ஆங்கில மேலதிகாரிகளின் 1859 ஜனவரி சுற்றறிக்கையின்படி இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அந்தச் சுற்றறிக்கைக்குப் பதிலாக 1859 மார்ச் 30-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலன் பின்வரும் கருத்தை வலியுறுத்தினார்: ""இந்திய மாணவர்களுக்குக் கல்வி தரும் முயற்சி அதிகமாக வேண்டும் என்று இதற்கு முன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் போட்ட உத்தரவு உள்ளது.

அதன்படி தொடர்ந்து கல்வி அறிவைப் பரப்புவது நல்லது. கல்வி அறிவு மூலம் மக்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டால்தான் அது அரசுக்கு நன்மை பயக்கும். அறியாமையில் மக்களை அடக்கி வைப்பதால் கடைசியில் எதற்கும் அடங்காத ஆவேசம் மக்களுக்கு ஏற்பட்டு எதிர்ப்படும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் உடைத்தெறிந்துவிடுவார்கள் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் இருக்கின்றன.

மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்டி அவர்களுடைய மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில்தான் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

ஆங்கில அரசாங்கம் மேற்கொண்ட பற்பல சீர்கேடான நடவடிக்கைகளை ஆலன் வலுவாக எதிர்த்தார். எடுத்துக்காட்டாக, மதுக்கடைகளை ஆங்காங்கு விரிவுபடுத்தி அதனால் கிடைக்கும் ஏராளமான வருவாயை அரசாங்கம் ஆண்டுதோறும் பெருக்கிக் கொள்வதை ஆலன் கண்டித்தார். அதனால், குடிப்பழக்கத்துக்கு அடிமையான ஏழைகளின் குடும்பங்கள் படும் துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் தனது வரி வசூலை மட்டும் கவனித்துக் கொண்டிராமல் மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்று 1860 மே மாதத்தில் ஆலன் எழுதிய அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.



ஆலன் தந்த ஆலோசனைகளையும், முற்போக்கான திட்டங்களையும் அப்பொழுது இருந்த ஆங்கில மேலதிகாரிகள் பலர் புறக்கணித்தாலும், வைஸ்ராய் பதவிக்கு வந்த மேயோ பிரபு, ரிப்பன் பிரபு போன்றோர் ஆலனின் ஆலோசனைகளை வரவேற்றார்கள். விவசாயத் துறையை மேம்படுத்த ஆலன் அளித்த ஆய்வறிக்கைகளைப் பார்த்த மேயோ பிரபு, அவற்றை நிறைவேற்ற ஆலன்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுத்து 1870-ல் ஆங்கில அரசின் வைஸ்ராய் தலைமையகத்தில் விவசாயம், வருவாய், வணிகம் உள்ளிட்ட துறையில் செயலாளராக ஆலன் நியமிக்கப்பட்டார்.

1876-ல் வைஸ்ராயாக வந்த லிட்டன் பிரபுவுடன் ஆலனால் பல பிரச்னைகளில் ஒத்துப்போக இயலவில்லை. குறிப்பாக, வெளிநாட்டு வணிக ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்புகளை ஆலன் சுட்டிக்காட்டினார்.

மேலும், 1876-78-ல் பெரும் பஞ்சம் ஏற்பட்டு ஒரு கோடி மக்கள் மாண்டனர். அதற்கான தீர்வு ஆலன் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவை லிட்டன் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. உடனே, ஆலன் செயலாளர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டு அப்பொழுது இருந்த வடமேற்கு மாகாணத்தின் (தற்கால உத்தரப்பிரதேசம்) வருவாய்த் துறை வாரியத்தின் இளநிலை உறுப்பினராக அனுப்பப்பட்டார். அப்பொழுது இருந்த பத்திரிகைகள் அனைத்தும் கடுமையான முறையில் மிக நேர்மையான ஓர் அதிகாரி ஆட்சியாளர்களால் மிக மோசமாக நடத்தப்பட்டார் என்று கண்டித்தன.

1882 ஜனவரி முதல் நாளில் தமது அரசாங்கப் பதவியை ஆலன் துறந்துவிட்டார். அதன் பிறகு இந்திய மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்று அவருக்கு இருந்தது. அது, ஆங்கில அரசாங்கம் இந்தியர்களுக்குச் செய்து வரும் அநீதிகளை வெளிப்படுத்தித் தக்க முன்னேற்றத்தைத் தர வேண்டும் என்பதை வலியுறுத்த இங்கிலாந்து சென்று, அங்கு இந்தியா பற்றிய ஓர் அமைப்பை உண்டாக்க அவர் திட்டமிட்டார். ஆனால், வில்லியம் வெட்டர்பர்ன் போன்று இருந்த நண்பர்கள் இங்கிலாந்துக்குச் செல்வதைவிட இந்தியாவிலேயே இந்திய மக்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது என்று ஆலோசனை கூறினார்கள். இந்தியாவின் உரிமைகளை நிலைநாட்டவும், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவும் தக்கதொரு அமைப்பை உருவாக்க ஆலன் எடுத்த முதல் முயற்சி, கோல்கத்தா பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளுக்கு 1883, மார்ச் 1-ல் சிறந்ததொரு வெளிப்படையான வேண்டுகோளை வெளியிட்டார்.

# 3 நாட்களில் பல கோடி ரூபாய் வசூலை குவித்த தனுஷின் பாலிவுட் திரைப்படம்




பாலிவுட்டில் இயக்குனர் ஆனந்த் எல் ராய் இயக்கத்தில் தனுஷ், சோனம் கபூர் நடிப்பில் கடந்த 2013 இல் வெளியாகி வரவேற்பை பெட்ரா படம் 'ராஞ்சனா'. தமிழில் அம்பிகாபதி என்ற பெயரில் வெளியானது. படத்தில் ஏஆர் ரகுமான் இசையில் இடம்பெற்ற ஒவ்வொரு பாடலும் ஒரு கிளாசிக்.

இந்நிலையில் தனுஷ் - ஆனந்த் எல் ராய் - ஏஆர் ரகுமான் கூட்டணியில் புதிதாக உருவாகி உள்ள படம் "தேரே இஸ்க் மேன்" (Tere Ishk Mein).

இதுவும் ராஞ்சனா போலவே காதல் படமாக அமைந்துள்ளது. இந்த படத்தில் தனுஷுக்கு ஜோடியாக பிரபல பாலிவுட் நடிகை கிரித்தி சனோன் நடித்துள்ளார். கடந்த வாரம் வெளியான இப்படம் பாலிவுட்டில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்நிலையில், தேரே இஸ்க் மேன் இந்தி திரைப்படம் வெளியான முதல் 3 நாட்களில் ரூ. 50.95 கோடி வசூல் செய்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. இந்தி மொழியில் மட்டும் தான் இந்த வசூல் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிறகடிக்க ஆசை சீரியலில் மீனாவின் தங்கையாக சீதா என்கிற ரோலில் நடித்து வருபவர் நடிகை சங்கீதா லியோனிஸ். இவருக்கு இந்த சீரியல்தான் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை ஏற்படுத்தி தந்தது. மேலும் இவர் மருத்துவ படிப்பை முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சங்கீதா அவ்வப்போது தனது போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்வார். அந்த வகையில் அவருடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் வெளியாகியுள்ளது.

# கொம்புசீவி' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



தமிழ் சினிமாவில் நகைச்சுவை திரைப்படம் இயக்குவதில் திறமை மிக்க இயக்குநர் பொன்ராம். 2013 ஆம் ஆண்டு இவர் இயக்கிய 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' மிகப்பெரிய வெற்றித் திரைப்படமாக அமைந்தது.

அதைத்தொடர்ந்து ரஜினி முருகன், சீமராஜா, எம்.ஜி.ஆர் மகன் மற்றும் டி.எஸ்.பி போன்ற திரைப்படங்களை இயக்கினார். இதனை தொடர்ந்து, பொன்ராம் இயக்கத்தில் மறைந்த விஜயகாந்தின் இளைய மகனான சண்முக பாண்டியன் நடிப்பில் வெளியாக உள்ள படம் 'கொம்புசீவி'. இப்படத்தில் சரத்குமார், காளி வெங்கட் மற்றும் கல்கி ராஜா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்படத்தை பால சுப்ரமணியன் ஒளிப்பதிவு மேற்கொண்டுள்ளார்.

இப்படம் 1996 வாக்கில் உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, வைகை அணை பகுதியில் நடந்த கதைகளை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சில நாட்களுக்கு முன்பு இப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ, முதல் பாடல் என வெளியானது. இருப்பினும் இப்படம் வெளியாவது குறித்த தகவல்கள் தெரிவிக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில், 'கொம்புசீவி' படம் கிறிஸ்துமஸ் தினத்தன்று வெளியாகும் என போஸ்டர் வெளியிட்டு படக்குழு தெரிவித்துள்ளது. கிறிஸ்துமஸ் தினத்தன்று அருண் விஜயின் 'ரெட்ட தல' படமும் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'தி பேமிலி மேன்' இயக்குநரை திருமணம் செய்தார் நடிகை சமந்தா



சோபிதா துலிபாலவை, நாகசைதன்யா 2-வது திருமணம் செய்தார்.

தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவை காதலித்து திருமணம் செய்து பின்னர் விவாகரத்து பெற்று பிரிந்த சமந்தா, தற்போது படங்களில் பிசியாக நடித்து வருகிறார். 'பொன்னியின் செல்வன்' படத்தில் நடித்து பிரபலமான சோபிதா துலிபாலவை, நாகசைதன்யா 2-வது திருமணம் செய்தார்.

இந்த நிலையில் சமந்தாவுக்கும், தி பேமிலி மேன் 2 இயக்குநர் ராஜ் நிடிமொருக்கும் காதல் மலர்ந்துள்ளதாக தகவல் வெளியானது.

தி பேமிலி மேன் 2' மற்றும் 'சிட்டாடெல்: ஹனி பன்னி திரைப்படதில் நடித்த சமந்தா அந்த சமயத்தில் அந்த படங்களின் இயக்குநரான ராஜ் நிடிமொருவுடன் காதல் வயப்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில், நடிகை சமந்தாவும் இயக்குநர் ராஜ் நிடிமொருவும் திருமணம் செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் இருவரும் திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது.



பிக் பாஸ் புகழ் நடிகை சனம் ஷெட்டியின் லேட்டஸ்ட் ஹாட் போட்டோஷூட். இணையத்தில் பரவி வரும் படுகவர்ச்சியான புகைப்படங்கள் இதோ.

# ரியோ ராஜ் நடிக்கும் ராம் லீலா படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு

ராம் லீலா படத்தின் மூலம் வர்திகா கதாநாயகியாக அறிமுகமாகிறார்

2023-ஆம் ஆண்டு அறிமுக இயக்குநரான ஹரிஹரன் ராம் இயக்கத்தில் ரியோ ராஜ் மற்றும் மாளவிகா மனோஜ் இணைந்து நடித்த "ஜோ" திரைப்படம் வெளியாகி மக்களிடையே விமர்சனம் ரீதியாகவும் வசூல் ரீதியாகும் நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து "ஜோ" பட ஜோடி அடுத்து மீண்டும் ஒன்றாக இணைந்து நடித்த 'ஆண் பாவம் பொல்லாதது' படம் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், நடிகர் ரியோ ராஜ் அடுத்ததாக நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் மற்றும் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இன்று காலை விஜய் சேதுபதி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டார்.

இந்த படத்திற்கு "ராம் லீலா" என பெயரிடப்பட்டுள்ளது. இயக்குநர் ராமசந்திரன் கண்ணன் இயக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு இன்று தொடங்கியுள்ளது. இந்தப் படத்தின் மூலம் வர்திகா கதாநாயகியாக அறிமுகமாகிறார்




# நாகூர் தர்காவின் சந்தனம் பூசும் விழாவுக்கு ஆட்டோவில் வந்த ஏ.ஆர்.ரஹ்மான்



நாகை மாவட்டம் நாகூரில் உலக பிரசித்தி பெற்ற ஆண்டவர் தர்கா உள்ளது. உலகம் முழுவதிலும் இருந்து இந்த தர்காவுக்கு மக்கள் வந்து பிரார்த்தனை செய்கிறார்கள்.

மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த தர்காவில் ஆண்டுதோறும் கந்தூரி விழா விமர்சையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி 469-வது ஆண்டாக கந்தூரி விழா கடந்த 21-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. கந்தூரி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் நேற்று இரவு 7.30 மணியளவில் நாகை யாஹூசைன் பள்ளிவாசல் தெருவில் இருந்து புறப்பட்டது. முன்னதாக சிறப்பு துவா ஓதப்பட்டு புறப்பட்ட சந்தனக்கூடு, அலங்கரிக்கப்பட்ட கப்பல்கள், செட்டிபல்லக்கு, சாம்பிராணி சட்டி, பெரிய ரதம், சின்னரதம் உள்ளிட்ட அலங்கார ரதங்களுடன் நாகையின் முக்கிய வீதிகள் வழியாக சென்றது.

ஊர்வலத்திற்கு முன்பாக பலர் பாரம்பரிய நடனம் ஆடியபடி சென்றனர். வழிநெடுகிலும் உள்ளூர், வெளியூர், பல்வேறு மாநிலங்களில் இருந்து திரளானோர் நின்று சந்தனக்கூடு ஊர்வலத்தை கண்டு களித்தனர். இன்று அதிகாலை ஆண்டவர் சமாதியில் சந்தனம் பூசுவதற்காக நாகூர் தர்கா அலங்கார வாசலை வந்தடைந்தது. இந்நிகழ்வில் பக்தர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

இதனிடையே, உலகப் புகழ்பெற்ற நாகூர் தர்காவின் சந்தனம் பூசும் வைபவம் விழாவுக்கு இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் ஆட்டோவில் வந்தார். அதனை தொடர்ந்து நாகூர் ஆண்டவர் சமாதியில் நீண்ட நேரம் காத்திருந்து வழிபட்டார்.

இதுதொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
• PREDICTION & SOLUTIONS
• MONEY • LOVE
• HEALTH • FAMILY
• BUSINESS • CAREER
• MARRIAGE




**OFFICE/RESIDENCE FOR SALE**
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

**இடம் விற்பனைக்கு**
இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile
Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile
Call : 9337501889

**வாடகைக்கு இடம் தேவை**
Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.
தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

**இடம் விற்பனைக்கு**
காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
Contact: 08220426606

**COMMERCIAL SPACE FOR RENT**
5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45
Brokers Contact :
98422 65900

**DTCP Sites For Sale**
@ KALAPATTY
East Facing Site
6 Cents
Direct Sale !!!
90471 87197

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

**குடோன் வாடகைக்கு விடப்படும்**
கோவை வடவள்ளி IOB காலனியில்
3614 sq.ft with EB Service 150HP
CT: 88708 68595

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர் 100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889




ஒரு மழை நாளில் உன்னை
நினைக்க வைத்து விடுகிறது,

படர்ந்திருக்கும்
சாலையும்..
காலியாய்
இருந்த
பின்னிருக்கை
யும்!

**ரிஷபன்**

### பகிர்தல்

பகிர்தலில் எப்போதும்
பதற்றம்!

பாத்திரம் அறிந்துதான்
பகிர்கிறேனா?

பகிர்ந்தவர் பெற்றதை
நிறைவாக நினைக்கிறாரா!

தேவை அறிந்துதான்
பகிர்ந்துள்ளேனா?

என்னை எவராவது
கண்காணிக்கிறார்களா?

என் மதிப்பு உயர்கிறதா?

இதை எல்லாம் மீறி
இன்னொன்றும் உள்ளதே!

அடுத்த நொடி... அடுத்த
நாள்..அடுத்த தலைமுறைக்கு
எனக்கு ஏதும் எஞ்சுதல்
வேணும்!

என;
அடுக்கடுக்காய் கவலைகள்
பதற்றத்தின் முளைகள்!
முளைக்க; முளைக்க;
பகிர வந்த முன்கை தானே
பின்னுக்குப் போக

விரிந்த கை
கூம்புகிறது!
பரந்த மனம்
சுருங்குகிறது!

**சசிகலா விஸ்வநாதன்**



### அவள் மனது

" அவள் மனது கண்ணாடி
போன்றது நொருக்கி
விடாதே ..."

அவள் மனது பூக்கள்
போன்றது கசக்கிவிடாதே..."

அவள் மனது பசுமையானது
பாலைவனம்
ஆக்கிவிடாதே .... "

அவள் மனது மௌனமானது
பத்ரகாளி ஆக்கிவிடாதே ..."

அவள் மனது
தூய்மையானது
மாசு படுத்திவிடாதே .... "

அவள் மனம் தெளிவானது
குழப்பி விட்டுவிடாதே..."
அவள் மனம் நீர் போன்றது
உறையச் செய்துவிடாதே...."

அவள் மனது கடல்
போன்றது ஆழம் பார்த்து
விடாதே .... "

அவள் மனது
வெளிச்சமானது
இருளாக்கி விடாதே ..."


அவள் மனது
பண்பட்டது
புண்ணாக்கி
விடாதே .... "

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.



### இமையத்தில் இருக்கும் இனிய மொழி தமிழ்!

இமையத்தில் இருக்கும் இனிய மொழி தமிழ்!
எந்த மொழியும் எம் தமிழுக்கு ஈடு இணை இல்லை!



எல்லா மொழிகளுக்கும் சொற்கள் தந்தது தமிழ்!
எல்லா மொழிகளின் தாய்மொழி நம் தமிழ்!

அமெரிக்கா ஆய்வாளர் ஆய்வின் முடிவு!
அகிலத்தின் முதல்மொழி அன்னைத் தமிழே!

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் உரைத்தார்!
மொழி ஆய்வாளர்கள் வழிமொழிந்தனர் அவர் கூற்றை!

இலக்கண இலக்கியங்களின் இமையம் தமிழ்!
இவ்வளவு இலக்கியங்கள் வேறுமொழிகளில் இல்லை!

தமிழ் என்று தொடங்கும் பெயர்கள் ஆயிரம் உண்டு!
தமிழ் தவிர வேறு மொழிகளுக்கு இவை இல்லை!

மொழியின் பெயரில் நாடு உள்ள நாடு தமிழ்நாடு!
மொழியாக பன்னாடுகளில் ஒலிக்கும் நம் தமிழ்!

தமிழகம் இலங்கை சிங்கப்பூர் மலேசியா ஆட்சிமொழி!
தமிழ்மொழி தவிர வேறு இந்திய மொழி பன்னாட்டில் இல்லை!

உலகம் முழுவதும் தமிழன் இல்லாத நாடே இல்லை!
உலகம் முழுவதும் தமிழ் ஒலிக்காத நாடே இல்லை!

திருக்குறள் ஒன்றுபோதும் தமிழ்மொழிக்கு மகுடம்!
திருக்குறளை மொழி பெயர்க்காத மொழியே இல்லை!

ஒன்றிய அரசசே தமிழ்மொழிக்கு கோடிகள் கொடு !
ஒழிந்து போன சமஸ்கிருதத்திற்கு தந்தவை போதும் !

தமிழ்மொழியில் சென்ற இடமெல்லாம் புகழ்ந்தது போதும் !
தமிழ் மொழியை ஒன்றிய ஆட்சிமொழியாக அறிவியுங்கள்.!

**கவிஞர் இரா. இரவி**



### கணினியைப் பாதுகாப்போம்!


நேரிசை வெண்பா!

கணினிப்பயன்பாடு
கண்ணியமாக
மணக்கும் வகையிலே
மாண்பாய்...
இனிக்கவே
காணவேண்டும்
கற்கண்டாய்க்காலமும்
வைக்கவேண்டும்!
பேணவேண்டும்
என்றுமே பீடு!

தரவுகளைக்காத்தேதான்
தக்க முறையில் உரிமையை
வாழ்த்திப்..

பரிமாற்றம் எல்லாமே
மந்தனமாய் என்றுமே
வைக்கவேண்டும்
வெல்வோம்
கணினியை வீறு!

**முனைவர் இராம.வேதநாயகம்**





### டைரி குறிப்பு !

கீர்த்தி சுரேஷ் டிசம்பர் –12 ,
சோனாக்ஷி சின்கா–ஜூலை 23,
சித்தார்த் –செப்டம்பர் 16,
வரலட்சுமி– ஜூலை 2,
ரகுல் ப்ரீத் சிங்– பிப்ரவரி – 5
ரம்யா பாண்டியன்– நவம்பர் –8,
மேகா ஆகாஷ், செப்டம்பர்– 24



"என்னங்க... சினிமா நடிகையரோட
திருமண நாளெல்லாம் டைரியில் எழுதி
வச்சிருக்கீங்களே, நம்ம திருமணமான நாள்
எங்கே எழுதியிருக்கீங்க... !
மனைவி கேட்டபோது...
"அது மட்டும் தான் நினைவுக்கு வரலை !"
என்றேன்......என் டைரி பறந்து வந்து என்
தலையை பதம் பார்த்தது !

**எம்.பி.தினேஷ்.** கோவை – 25

### மௌனம் !

வாழ்வில் நாம் மௌனம் கடைபிடிக்க வேண்டிய சிறந்த
தருணங்கள்....

மனைவியிடம் சண்டையிடும் போது...
நீங்கள் வாய் திறக்க நேரிட்டால்...
இறந்த பாட்டன் , முப்பாட்டன் வரை பிரச்சனையை
இழுத்துச் செல்லும் நிலையை அடைய நேரிடும்...
எனவே அங்கு மவுனம் காப்பது தலை சிறந்த கடமை !

கோபம் வரும்போது பல்லை கடித்து மௌனத்தை
கடைபிடியுங்கள்...கோபத்தை அடக்க சிறந்த தருணம் இதுவும்
ஒன்றே...

மது கூடத்தில் மது அருந்திவிட்டு மௌனமாய் இருப்பது சாலச்
சிறந்தது....ஏனெனில் மது... நம் மனதில் புதைத்து வைத்திருந்த
உண்மைகளை வெளிக்கொண்டு வரும் மாயாஜால மருந்து....

வாட்ஸப்பில்... உண்மை கதைகளை சொல்கிறேன் என்று
உங்கள் சோகக் கதைகளை சொல்லப்போனால் அது பலரும்
சிரிப்பதற்கே வாய்ப்பளிக்கும்...
எனவே எங்கும் மௌனமே சிறந்த மொழி !

**எம்.பி.தினேஷ்.** கோவை – 25

### இயற்க்கை இல்லாமல் நீ இல்லை

பட்டாம்பூச்சி அமராத பூ
காய்க்காது... காய்க்காத
செடி இருந்தால் மனிதன்
உயிர் வாழாது...!

பூமிக்கு அடியில் உள்ள நீர்
உன்னை காக்கும்....
அந்த நீ தானா மேலே
வந்துவிட்டால் உன்னை
தாக்கும்....!


இயற்க்கையை சீண்டாதே..
உன் இன்ப வாழ்க்கையை
தொலைக்காதே....!

பணம் பொருள் கொஞ்சம்
சேர்க்கத்தான் வேண்டும்...
பகைமையை அறவே
ஒழிக்கத்தான் வேண்டும்...!

அனைத்து
உயிரினங்களையும் வாழ
விடு...

இதற்க்கை
உன்னை
அழகா வாழ
விடும்....!!

**பொன். கருணா**
நவி மும்பை



### தேவையற்ற பதற்றம்

பூ வாளி போல் பெய்யட்டும்
சாரல் திறன் பக்குவமானால்
சான்றோன்

அரைத்த மாவையே
அரைக்காதீர் புதுப் புது
திட்டங்களில் ஈடுபடுவீர்
அடுத்த கட்டத்திற்கு தாவிட
உதவும்

பெண்களுக்கு துணிச்சல்
வேண்டும் தயக்கத்தையும்
சமமாய் கொள்வீர்

ஆற்றில் ஒரு கால் சேற்றில்
ஒரு கால் என்ற கணக்கில்
எச்சரிக்கை தேவை

அருவி நீர் ஆர்ப்பரித்துக்
கொட்டிட சுற்றுலா
வாசிகளுக்கு குஷியாகும்

ஒட்டுநர் விழிப்பாய் இயக்க

வேண்டும்
பயணிகளின்
மூச்சு உமது
கரங்களில்


**பி. பழனி,**
சென்னை.

### கேள்வி

சாக்கடையில்
முளைத்திருக்கும்
செடியில் பூத்திருக்கும்
மலர் ஒரு புன்னகையுடன்
என்னைக் கேட்டது,
என்ன இப்படி சோகமாய்
நடந்து போகிறாய் என்று.

**கே. பி. ஜனார்த்தனன்**

### அன்பே !!!

உன் நினைவுகள் என்னுள்

மழையாகப்
பொழிவதால்
நான் தொப்பற
நனைந்து
விட்டேன்

**சுபஸ்ரீ ஸ்ரீராம்**
சென்னை

புயலுக்குப் பின் அமைதி?
ஒரு போதும் இல்லை

அடைப்பட்ட சாக்கடைகள்
பொங்கும்
கழிவுநீர்த்தொட்டிகள்

கரையும் குடிசைகள் அழுகும்
பயிர்கள் மூழ்கிய கார்கள்
இல்லாத இன்சூரன்ஸ்

வீழ்ந்த மரங்கள்
உடைந்த சுவர்கள்
நூறடி சாலைகளில்
ஒத்தையடிப் பாதைகள்

போட்டிப் போட்டுப் பேட்டிக்
கொடுக்கும் அரசியல்
வாதிகள் சமூக ஆர்வலர்கள்

தொலைக்காட்சியில் தவிர
பார்த்திராத மக்கள்
உயிரழப்பு, தொலைந்து
போவது மட்டுமே


மக்கள் கண்டதாக
அறியப்படுவது வாடிக்கை
உணவுப் பொட்டலம்
துணிமணி பாதியும்

வீடியோவில் மட்டுமே என்பர்
பாதிக்கப்பட்டவர்
உதவிகளில் விளம்பரம்

தேடும்
உன்னதம்

இன்னும்
என்னென்ன
சொல்ல?

**வி.பிரபாவதி**



### இறுதி வேண்டுதல்..!

சூது கவ்வும் தர்மம்
இறுதியில் வெல்லும்
அதுவரை அதர்மம்
கொல்கிறது. தீமைகளை
சகித்தபடி எல்லாம்
நன்மைக்கே கடைபிடித்து
வாழ்கிறோம். எல்லோர்க்கும்
கிடைக்கும் கடவுளின்
தரிசனம் கொஞ்சம்

நல்லோர்க்கும்
கிடைக்க
வேண்டும்
கரிசனமளவாவது
என்பதே என்
இறுதி
வேண்டுதல்..!

**ஈ.கார்த்திகேயன்,**
அறமத்தாபாளையம்.



### நெஞ்சில் தவிப்பு....

இத்தனை நாள்
நீண்டதில்லை....
இருவருக்கும்
இடையேயான... ஊடல்...

முகவரி தேடி வந்து
விடும்.... உன்
நலன் விசாரணை...
அலைபேசியில்
அலையடிக்கும்.... உன்
பேரன்பு....

மணிக்கு ஒருமுறை எட்டிப்
பார்த்து விடுவாய்.... என்
இணையப் பக்கத்தை....

நானும் கூட...

விலகல் முடிவை
உறுதிபடுத்திக் கொண்டது
போல் தான் இருக்கிறது ..

நீண்ட இடைவெளியும்....
அடர்த்தியானமௌனமும்...
ஏந்திச் செல்ல


எவருமின்றி...

பதைபதைத்துக்
கொண்டு...
திகைப்பது...
காதல்
தான்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## நூல் விமர்சனம்

ஹைக்கூ தோப்பு !
நூல் ஆசிரியர்
கவிஞர் ஏகாதசி !
நூல்விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
தாய் வெளியீடு 42/45,
இராஜாங்கம் மத்திய வீதி ,
வடபழனி ,சென்னை ,26.
விற்பனை உரிமை நூலாக்கம்
.பாரதி புத்தகாலயம்
421,அண்ணா சாலை ,
தேனாம் பேட்டை .
சென்னை ,18,விலை 60




ஹைக்கூ கவிதை என்பது வாசகர்களுக்கு கனி போன்றது. ஒரு கனியே இனிக்கும் சுவைக்கும் .இந்த நூல் கனிகளின் தோப்பாக ஹைக்கூ தோப்பாக வந்துள்ளது .நூல் ஆசிரியர் கவிஞர் ஏகாதசி அவர்களின் உழைப்பில் உருவான தோப்பு. இந்த தோப்பில் வாசகர்கள் இளைப்பாறலாம் ,இனிய காற்றை சுவாசிக்கலாம் .சிந்திக்கலாம், இனிய கருத்துக்களை உணரலாம் .எழுத்தாளர் ச .,தமிழ்செல்வன் அவர்களின் அணிந்துரை மிக நன்று .அட்டைப்படங்கள் உள் புகைப்படங்கள். அச்சு யாவும் மிக நேர்த்தியாக பதிப்பித்து உள்ளனர் பாரதி புத்தகாலயத்தினர் .பாராட்டுக்கள் .

ஜப்பானிய ஹைக்கூ வடிவத்தை உள்வாங்கிக் கொண்டு தமிழ் மண்ணிற்கேற்ப ஹைக்கூ வடிப்பதில் ஒரு கூட்டம் சிறப்பாக உருவாகி விட்டது .தமிழகத்தில் இலக்கியத்தில் ஒரு தாக்கத்தை ,அதிர்வை ஏற்படுத்தி வருகின்றனர் .ஹைக்கூ கவிதையில் காட்சிப் படுத்துதல் ஒரு யுத்தி .வாசகர் நினைத்தது அல்லாமல் வேறு சொல்வதும் ஒரு யுத்தி ,அந்த வகையில் அமைந்த ஹைக்கூ நன்று .

எவ்வளவு இரை வைத்தாலும் முட்டைதான் போடுகின்றன கோழிகள் ! இன்னா செய்தாரை திருக்குறளை வழிமொழிந்து வடித்த ஹைக்கூ சிந்திக்க வைக்கின்றது.

கல்லால் அடித்தும் கோபம் இல்லை சிணுங்கிச் சிரிக்கும் குளம்! கறிக்கடைக்கு செல்லவே பயப்படும் மனிதர்கள் உண்டு. ஆனால் சிறு பூச்சி பெரிய கத்தி கண்டு அஞ்சுவதில்லை என்பதை பார்த்து , உணர்ந்து வடித்த ஹைக்கூ ஒன்று . வெட்டுக்கத்தி பயமின்றி உட்கார்ந்திருக்கின்றன கறிக்கடை ஈக்கள் !

இன்று ஆசிரியர்மானவர் உறவு சரியில்லை .முன்பு தந்த மதிப்பு ,மரியாதை இப்போது ஆசிரியர்களுக்கு கிடைக்க வில்லை .ஆசிரியர்களில் சிலர் மதிக்கும் படி நடப்பதுமில்லை. மாணவர்களில் சிலர் ஆசிரியர்களை கொலை செய்யும் அளவிற்கு மோசமாகி விட்டனர் .ஆசிரியர்கள் முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை எள்ளல் சுவையுடன் உணர்த்தும் ஹைக்கூ .

இலை கிள்ளிய மாணவனுக்குத் தண்டனை மரத்தில் குச்சி ஒடிக்கும் ஆசிரியர் ! ஆணாதிக்கம் பல்லாயிரம் ஆண்டுகளாக இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது .ஆண் குழந்தைக்கு சிறு வயதிலேயே ஆணாதிக்கம் விதைத்து விடுகின்றனர். ஆணாதிக்கம் பற்றி வித்தியாசமாக சிந்தித்து காட்சிப் படுத்திய ஹைக்கூ நன்று .

காட்டுக்குள்ளும் ஆணாதிக்கம் சோளக்காடுகளெங்கும் ஆண் பொம்மைகள் !

நூல் ஆசிரியர் கவிஞர் ஏகாதசி அவர்கள் திரைத்துறையில் திரைப்படப் பாடல் ஆசிரியராக வலம் வருகிறார் என்ற தகவலும் நூலில் உள்ளது , நம் நாட்டில் மக்கள்தொகை பெருகுவது போலவே .முதியோர் இல்லமும் பெருகி வருவது பெருமை அல்ல சிறுமை. முதியோர் இல்லத்தில் உள்ள தாயின் பாசத்தை படம் பிடித்துக் காட்டும் ஹைக்கூ நன்று .

பத்திரமாய் வைத்திருக்கிறாள் மகனின் புகைப்படத்தை தாயொருத்தி முதியோர் இல்லத்தில் !

தங்கம் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது .தங்கம் மீதான் ஆசையும் வளர்ந்து வருகிறது .நாட்டில் கொலை கொள்ளை வன்முறைகளும் பெருகி வருகிறது .தங்கம் விலை உயர்வு ஏழைகளுக்கு எரிச்சலைத் தருகின்றது .பலருக்கு திருமணங்கள் தங்கத்தால் தடை பட்டுள்ளது .ஏழைகளின் மன உணர்வை உணர்த்தும் ஹைக்கூ ஒன்று .

ஏழைச் சிறுவர்கள் வாங்குகிறார்கள் மோதிர அப்பளம் ! சிந்திக்க வைக்கும் ஹைக்கூ கவிதைகள் நூல் முழுவதும் உள்ளன .ஹைக்கூ ரசிகர்கள் மட்டுமல்ல அனைவருக்கும் பிடிக்கும்.வாங்கி படித்துப் பாருங்கள் .நூல் ஆசிரியர் கவிஞர் ஏகாதசிஅவர்களுக்கு பாராட்டுக்கள் .தொடர்ந்து எழுதிட வாழ்த்துக்கள் ,






**நாயகி**

எந்தத் திரைப்படத்தின்
காதல் பாடல்களைக்
காண நேர்ந்தாலும்
அந்த வினாடியே எனக்கு
என் நாயகி உன் நினைவு
வந்து விடுகிறது என் இனிய
உயிர்க்காதல் அன்பே!

**குணம்**

எனக்குப்போர்க்குணம்
என்று மிகப் பெருமையுடன்
பறை சாற்றிக் கொள்கிறாய்!
அது தெரிந்து தானே நான்
உன் மீது காதல் வயப்பட்டேன்
என் உயிரான
இனிய அன்பே!

**மூடு மந்திரம்**

எதையும் மறைத்தே
பழக்கப்படுத்தப்பட்ட
உனக்கு என் மீதுள்ள
கா த லை மட்டும்
மறைக்கத் தெரியவில்லை
நமக்குள் எதற்கு அன்பே
இந்த மூடு மந்திரம்?!

**வெள்ளம்**

எனக்குள் கரை புரண்டு
ஓடிடும் கவிதை
வெள்ளத்திற்குக்காரணம்
உன் மீது எனக்குள்ள
நம் இனிய காதல் தான்
அன்பே!

**மகிழ்ச்சி**

ஒரே ஒரு முத்தமிட்டு விட்டுப்
போகிறாய் அன்பே நீ!
அந்த வினாடியிலிருந்து
காதலைப் பறை சாற்ற
ஆரம்பிக்கிறது அன்பே
என் அன்புள்ளம்!

**நிதானம்**

ஒரு மலர் அசைவது
போல் நீ நிதானமாக
மெல்ல அழகாகத்தான்
நடந்து வருகிறாய்!
அதைத் தரிசித்து ரசிக்கும்
என் மனம் தடதடத்து
லவ் டப் என்று துடித்து
ஓர் அதிவேக ரயில்
வண்டியாய் ஓடுகிறது!

**நம்பிக்கை**

எவளைப் பார்த்தாலும்
உன் முகம்! எங்கு
சென்றாலும் உன் நினைவு!
எது எழுதினாலும்
உன்னைப் பற்றி!
காதலிக்கக்கற்றுக் கொடுத்து
விட்டுப் போனவளே
மறப்பதற்கும் கற்றுக்
கொடுக்க நீ வருவாய்
என்ற நம்பிக்கையில்
இன்னமும் காத்திருக்கிறேன்!

**அர்த்தம்**

உன் நெஞ்சத்திலுள்ள
மஞ்சத்தில் முத்தமிட ஆசை
என்று நீ சொன்ன போது
தான் எனக்கு காதலின்
அர்த்தம் புரிந்தது அன்பே!

**பாடம்**

உன்னைப்பார்த்து தான்
நானும் (கூடக்)
கற்றுக் கொண்டேன் அன்பே!
முன் வைத்த காதலை
எப்பொழுதும்
பின் வைக்கக் கூடாதென்று!

**கோபம்**

உன்னை வைத்து எழுத
மறந்து விட்டால் என்

கவிதைகள் என்னை
என்னமாய்க்கோபித்துக்
கொள்கின்றன என்று
தெரியுமா அன்பே?!

முத்து ஆனந்த்
வேலூர்



**மழைச்சாரல்**



பெருமழை பெய்து பள்ளிக்கும் விடுமுறை..
வெக்கை தணிந்து மேனியெங்கும் குளிர்..

அம்மாவின் கரத்தால் சூடாக காலையுணவு..
பரபரப்பின்றி நிதானமாய் ருசித்து விழுங்க..

குட்டி செல்லம் டாமி துள்ளிட..
ஆசையாய் தூக்கி மடிமேல் வைத்து..

தடவிக்கொடுத்து கொஞ்சலாய் பேசி மகிழ்ந்து..
மழையதும் நின்றிட தூக்கிக்கொண்டு வெளிவர..

மழையால் கழுவப்பட்ட பச்சை மரங்களும்..
சுத்தமான தார் ரோடும் அழைத்திட..

சற்று தூரமாய் நடந்து வர.. மீண்டும் சாரல் பூவாய் இறங்க..

அமர்ந்தேன் ரோட்டோரம் பெரிய கல்லில்..
அவசரத்திற்கு தெருவோரமாய் உடைத்த இலைக்குடையோடு..

டாமியும் குளிருக்கு இதமாய் காலுரச..
அள்ளி எடுத்தணைத்தேன் மழை படாமலே..

தந்தையும் குடையுடன் தேடி வந்திட..
மழையை ரசித்தவாறு நடந்தேன் மீண்டும்..

தஞ்சை பியூட்டிஷியன், உமாதேவி சேகர்..

**யாரோவாக...**

சிறுவயதில் கிறுக்கல்களை
ரசித்த அதே கண்கள்
பள்ளி வயதில்
அழகிய கையெழுத்துக்காக
ஆதங்கப்படுகிறது.

விதைகள் மண்ணில்
விழுந்தவுடன் உரம்
உயிர்ப்புடன் முளைத்து
எழுந்தால் வானுயர்ந்த மரம்.

வலியும் வளியும்
ஒளியும் ஒலியும் போல
இரவு பகலாக மாறிவிடுகிறது
காலத்திற்குத் தகுந்தாற்போல்
யாரோ ஒருவரின் வசமாகி
வழக்கமாக்கிக் கொள்கிறது...

நேற்று வரை யாரோவாக
இருந்தவர்கள்
பரிட்சயமானதால்
பரிந்துரை செய்கிறார்கள்
ஹீரோவாக்க...

அவர்கள் ஹீரோ ஆனதில்
அளவற்ற மகிழ்ச்சி.
மீண்டுமாய் திரும்பிப்
பார்க்கையில்
வெறும் பூஜ்யம் நான்
ஆதலால் எமக்கு யாரோவாக

தொடர்வதில்தான்
பெரும்
விருப்பம்...

எறும்பூர்
கை.
செல்வகுமார்,
செய்யாறு.



**எய்ட்ஸை**
**(தீ நுண்மத்தை)**
**ஒழிப்போம்!**

நேரிசை வெண்பா!

தொற்று பரவுவதால்
தோன்றும் தீநுண்மம்
பற்றைத்தான் வைத்திடுவோம்
பாங்காக..வெற்றுரை
இல்லாமல் ஈடிலாத்
தொண்டாற்றி
வெற்றிகாண்போம்
இல்லாமல் தொற்றே இனி!

மக்களை ஒன்றிணைக்கும்
மாண்பாம் இயக்கமே

தக்கதீ நுண்மம்
தடுத்திடல்... அக்கறை

கொண்டே அகற்றிடுவோம்
கூறும்தீ நுண்மத்தைக்

கொண்ட ஒழுக்கத்தால் கூறு!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

1. கடைக்குள் நுழைந்து
இட்லி எவ்வளவு என்று
கேட்டு தன் சட்டை
பையை தடவிப் பார்த்த
நபருக்கு கடைக்காரர
தன்மானத்துடன்
வயிறு நிறைய சாப்பிட்டு
போங்க என்று கூறி சிறந்த
மனிதர் பட்டம் வென்றார்

2. ஆஸ்தி எவ்வளவு
இருந்தாலும் அஸ்தி கைப்பிடி
அளவு தான் கிடைக்கும்

3. அவளின் வலிகளுக்கு
அவள் வைத்த பெயர்
ஒன்னும் இல்லை

4. பென்சில் கற்றுக்
கொடுப்பது வாழ்க்கையில்
இது ஒன்றுதான் கூர்மையாக
இரு இல்லை என்றால்
சீவி விடுவார்கள்


5. தனி
ஒருவனிடம்
திருடுவதை
திருடன்
தீர்மானிக்கிறான்
அனைவரிடமும்
திருடும்
திருடர்களை
மக்கள் தீர்மானிக்கிறார்கள்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

**தேர்தல்**
**நெருங்கிவிட்டது !**

பொய்களின் ரோடு ஷோ...
ஓ... தேர்தல்
நெருங்கிவிட்டதோ !

பல கட்சிகளின் கொடிகளை
காரில் பத்திரபடுத்தினார்
தலைவர்... பெட்டி
உறுதியான பின் கொடியை
உறுதிபடுத்த....

"இருபது ஆண்டு
அரசியல் வாழ்வில் முதுகில்
குத்திவிட்டார்கள் !'
என்றார் இருபது முறை
கட்சி தாவிய தலைவர் !

"அரசியலில் நண்பர்
பகைவர் இல்லை !' என்று

பேட்டி
கொடுத்தார்
தந்தையுடன்
இணைந்த
மகன்.

எம்.பி.
தினேஷ்,
கோவை

**பிரமிப்பில் மகிழும்.**

பிரமிப்பில் மகிழ்வதை
உணர்ந்தால் மட்டுமே
தெரியும் உள்ளம் தொட்ட
எந்த ஒரு செயலும்
பிரமிப்பே... வானில் இருந்து
வரும் மழையும் பிரமிப்பே....
வெள்ளம் வந்தால் அதுவும்
பிரமிப்பே... சுழல் காற்று
சுற்றி அடித்தால் அதுவும்
பிரமிப்பே... நிகழும்
ஒவ்வொரு இயற்கை
வினோதமும் பிரமிப்பே....
இந்த பிரமிப்பு எல்லாம்
நம் உள்ளத்தில் வரும்
சந்தேகம் என்ற பூட்டினை
திறக்கும் திறவுகோல்......
மொட்டு மலராக மலர்வதும்
பிரமிப்பே... அது
காற்றில் அசைந்து வாசம்
வீசுவதும் பிரமிப்பே...
மலரும் வாசம் காற்றில்
கலப்பதும் பிரமிப்பே.. இப்படி

ஒவ்வொரு
செயலும்
பிரமிப்பாக
உணர்வதால்...
மனம் தினம்
தினம் ஒரு
பிரமிப்பை
எதிர் நோக்குகிறதே...

உஷா முத்துராமன்

**துண்டு விழுந்தது**

அந்தி மாலையில் அந்த
மேடையில்...

இங்கே பலப்பல இரங்கற்
கூட்டம் நடப்ப துண்டு.
நானும் தலைமை வகிப்ப
துண்டு,, உங்கள் முயற்சியை
வாழ்த்துவ துண்டு.,
மக்களும் கேட்டு மகிழ்வ
துண்டு......

தலைவர் வாயில் அடிக்கடி

துண்டு விழக்
காரணம்
– அவர்
கழுத்தில்
துண்டு விழாக்
காரணமென
விரைவில்
புரிந்தது

எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சிக்கோட்டை

**துளிப்பாக்கள்**

அருகில் சென்று தொட்டு
பார்த்தாலும் சுடுவதில்லை
குளத்து நீரில் சூரியன்!

காற்று வீசும்போது
இலைகள் அசையும்போது
நிலவொளி அசைகிறது!

இலையில் வழிந்தோடும்
மழைநீரை வேர்கள்
குடித்து மகிழ்கிறது!

மழை கொண்டு வந்தது
வானத்தில் வர்ணஜாலம்
அழகிய வானவில்!

மிருகக்காட்சிசாலை

ஒரு மான்
மிரண்டு
நின்று
வேடிக்கை
பார்த்தது
மனிதர்களை!

பூ.சுப்ரமணியன்
சென்னை

**நட்பு உண்டு தொடர்பு உண்டு**

" மழைக்கும் காற்றுக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு ..."

இடிக்கும் மின்னலுக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு .... "

மழைத் தூரலுக்கும்
மண்வாசத்துக்கும் நட்பு
உண்டு தொடர்பு உண்டு ... "

வானுக்கும் பூமிக்கும் நட்பு
உண்டு தொடர்பு உண்டு ..."

மேகத்திற்கும் மழைக்கும்
நட்பு உண்டு தொடர்பு
உண்டு .... "

இரவுக்கும் பனிக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு .... "

சூரியனுக்கும் அனலுக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு ..."

புயலுக்கும் கடலுக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு ...."

இரவுக்கும் பகலுக்கும்
நட்பு உண்டு
தொடர்பு உண்டு .... "

மனிதனுக்கும்
இயற்கையோடு நட்பு உண்டு
தொடர்பு உண்டு ..."

ஆர். சீதாராமன்
சீர்காழி

குடை எடுத்துப் போனால்
மழை வாராதிருப்பதும்
எடுக்காது போனால்
கொட்டித் தீர்ப்பதும்
என்ன அதிசயமோ?

ஸ்ரீகாந்த் திருச்சி

**அன்பு வெல்லும்....**

திசைகள் வெவ்வேறாய்
திரும்பிக் கொண்ட...நம்மை

நேர்க்கோட்டில்
நிலைநிறுத்துகிறது...
காலமும்... நாம் பிறழ்ந்த
காதலும்....

கண்களில் விழுந்தால்...
வானவில்லாகும் உள்ளம்...

சாம்பலாகிப் போனகாதலும்....

சம்பவம்
செய்து
உயிர்த்தெழும்....

எதிர் காலம்
மறந்து..
நிகழ்காலத்தில் நிழலாடும்...
என எண்ணியிருக்கையில்....
மீண்டும் வருகிறாய்....மீளா
நிலை காண...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

எனக்கான தனியறை
உனக்காகவே
ஏங்கி தவிக்கிறது!

உண்மையை சொன்னால்
நீ செல்லங்கள் கொஞ்சும்
பொம்மைகள் எல்லாம்
என்னை விட அதிர்ஷ்டம்
அதிகம் பெற்றவைகள் தான்!

அந்த முத்தத்தில் அப்படி
என்ன இருக்கிறதென்று
சிலர் கேட்கின்றனர்
பெற்றால் தானே புரியும்
வரத்தின் அருமை!

நடிக்கவெல்லாம் இல்லை
நிஜமாகவே உன்னை
பிடித்து தான் போனதடி!

வித்தைக்காரியே
அட்டைப்பூச்சியாய்
உன்னோடு ஒட்டி, உரசி
காதலோடு வாழ வேண்டும்!

சிறைப்பறவையாய்

அறைக்குள்
அடைந்து
கிடக்கவில்லை
இருந்தும்
எனக்கான
காதலின்
சுதந்திரம்
என்னிடமில்லை!

@-லி.நௌஷாத் கான்-@

ஹலோ.. அலைபேசி மூலம் அழைத்தான்
அவன் அன்பு காதலியை.
ஆனால் அவள் எடுக்கவில்லை..
மீண்டும் மீண்டும் அழைத்தான்.
அய்யோ... அப்பா வரும் நேரம் பார்த்து ஓயாமல்
அழைக்கிறானே என்று அஞ்சினாள்.
அடுத்த முறை அலைபேசி அலறியதும் உடனே
எடுத்து என்ன விடயம் உடனே சொல் எங்கள்
அப்பாவுக்கு தெரிந்தால் என்னைக் கொன்றே விடுவார்.
பிறகு நம் திருமணம் நடக்காது என்று படபடத்தாள்.
உங்கள் அப்பா ஓர் ஆணவ கொலைகாரர் என்பது
தற்போது தான் எனக்குத் தெரிய வந்தது.
நம் திருமணம் நடந்தாலும் உன் அப்பா என்னை
உயிருடன் விடமாட்டார்.
அதனால் தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன் என்றான்.
என்ன அது சீக்கிரம் சொல் என்றாள் அவள். இப்போது தான்
என் இன்னொரு காதலியைத் திருமணம் செய்து கொண்டேன்.
உன் வாழ்த்தைப் பெறத்தான் உன்னைத் தொடர்பு
கொண்டேன் என்றான் அவன்.
அடப்பாவி.. இவ்வளவு அயோக்கியனா நீ. நல்ல வேலை
உன்னிடமிருந்து தப்பித்தேன் என்றாள் அவள்.
நானும் தான் என்றான் அவன். என்ன உளறுகிறாய்
என்று அவள் வினைவியதற்கு, அவன் கூறினான் நான்
உளறவில்லை. உண்மையைத் தான் சொல்கிறேன்.
உன் அப்பாவின் ஆணவக் கொலையிலிருந்து நான்
தப்பிவிட்டேன் என்றான். ச்சீ .....இவ்வளவு பொறுக்கியாய்
இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை என்றாள்.
அதற்கு மேல் அவளுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை.
தலை சுற்றியது. என்ன வேண்டுமானாலும் திட்டு. ஆனால்
அதற்கு முன் வாழ்த்துச் சொல் என்றான் அவன்.
வாழ்த்தா எதற்கு என்றாள் அவள். என் மனைவியுடன் தேன்

நிலவுக்கு கொடைக்கானல் செல்கிறோம்.
அதற்காகத்தான் உன் வாழ்த்தைப் பெற
விரும்புகிறேன் என்றான். டேய்.. துரோகி
என்னுடைய வாழ்த்து வேண்டுமா?
அங்குள்ள பசுமை பள்ளத்தாக்கில் விழுந்து
இருவரும் சாவுங்கள் என்று கூறி அலைபேசி
இணைப்பைத் துண்டித்தாள் மாலதி.

உ.மு.ந.ராசன்கலாமணி, கோவை



**பணம்**

பணம் பணம்
உலகில் எல்லாம்
பணம்பணம்இல்லாதவன்
பிணம் அன்றே சொன்னது
தான் தான் தான்
எல்லாம் எல்லாம் பணம்
பணமே

பாசம் நேசம் அன்பு பண்பு
எல்லாம் பறந்து பறந்து
போகுமே நம்மை மறந்து
மறந்து போகுமே உறவுகள்
எல்லாம் உரு குழையுமே

பணம் உள்ளவனை
பாரிவள்ளல் நீ தான்
கொடை வள்ளல்
குமணனின் மறு
பிறப்பு என்பான்
வாயார புகழுவான்
வீணான புகழ்ச்சி


பணத்துக்குமுன்னாலே
பாசமிது நேசமிது

அன்பேஇதுஅறிவேதுஇல்லை
.பணம் படைத்தவன் எல்லாம்
மேல் சாதி பணமில்லாதவன்
எல்லாம் கீழ் சாதி
கடைசியில் எதுவும் கூட
வராது

பசி வந்தால் பத்தும் பறந்து
போகும் என்பது பழமொழி

மாறாது மறையாது
எதுவும் இங்கு நிலை
இல்லை நிரந்தரம்
என்பது ஒன்றுமில்லை

பேராசிரியர் முனைவர்
வேலாயுதம்
பெரியசாமி



ஏக்கம், எதிர்பார்ப்பென்று
எதுவுமே இல்லை
எல்லாமுமாக இருந்த
நீ என்னோடு இல்லாததால்!

நடந்தவைகள் ஒரு போதும்
மாறப்போவதில்லை
நீ கொடுத்த வலிகளை
போலவே.. உளிப்பட்ட கல்
சிலையானது
வலிப்பட்ட நான்
சிந்தனையாளனானேன்!

பெரிதாய் ஒன்றும்
வேண்டாம் வருங்காலத்தில்
இந்த உலகத்தில்
நான் இல்லாமல் கூட
போகலாம் இல்லாமல்
போவதை பற்றி
கவலையொன்றும் இல்லை
உன் இதயத்தில்–என்
நினைவுகளாவது
நிரம்பியிருக்க வேண்டும்!

எனக்கு கவிதையெல்லாம்
பெரிதாய் எழுத தெரியாது
நீ இல்லாமல் போன
கவலையால் கிறுக்கியதே.
வெள்ளை காகிதங்கள்
என்னை எத்தனை சாபமிட்டு
இருக்கும். கொள்ளை
கொண்டவளை உருகி,உருகி
நினைத்து எழுதியதெல்லாம்
வெறும் வார்த்தை
கோர்வைகள் அல்ல
அவள் பார்த்த
பார்வைகளின் எச்சிலின்
மிச்சம். இதுவரை
விதைத்ததெல்லாம்
சொச்சம் தான்.
அந்த அடங்காதவள்
மேலுள்ள காதலை சொல்ல
எனக்கு
கொடுக்கப்பட்டிருக்கும்
இந்த ஆயுள் போதாது.
இன்னொரு ஜென்மம்
கிடைத்தால் இன்னமும்
கொட்டி தீர்க்கிறேன்
இதுவரை அவளிடம்
சொல்லாத ஒரு பொல்லாத
காதலை!

@-லி.நௌஷாத் கான்-@

# வாசகர் கடிதம்

தமிழ் இந்தியாவின் பெருமிதம் என மோடி புகழாரம் தெரிவித்துள்ளார்.
தமிழகத்தில் டிட்வா புயலில் மூன்று பேர் பலி. 57,000 ஹெக்டேர் பயிர்கள் சேதம். வெந்தய டீ யின் நன்மைகள் வியக்க வைக்கிறது.
சென்னை விமான நிலையத்திலிருந்து வழக்கம் போல விமானங்கள் புறப்பட்டு சென்றன. சார் படிவங்களை டிசம்பர் 11 வரை கொடுக்கலாம்.
தெய்வம் தந்த வீடு கட்டுரை பயனுள்ள தகவல்.
விக்கல் ஏற்பட என்ன காரணம்
அதை சரி செய்யும் முறை போன்றவை அற்புதமான தகவல்.
குறட்டை எப்படி ஏற்படுகிறது? அதை தவிர்ப்பது எப்படி என்ற கட்டுரை சிறந்த விழிப்புணர்வு கட்டுரையாகும். நூறு பிறவி எடுத்தாலும் நான் நடிகனாகவே இருக்க ஆசைப்படுகிறேன் என ரஜினி கூறியுள்ளார்.
சபரிமலை பக்தர்களிடம் பண மோசடி நடைபெறுகிறது.
உலகின் சக்தி வாய்ந்த நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை பெறுகிறது.
காசாவில் இடிந்த கட்டடங்களில் இருந்து பத்தாயிரம் உடல்கள் கண்டெடுக்கப்பட்டது.
ரஷ்ய எண்ணெய் கப்பல் மீது உக்கிரன் தாக்குதல்

சின்னஞ்சிறு கோபு அவர்களின் கவிதை நகைச்சுவையை வரவழைத்தது.

காதல் கவி வேந்தன் முத்து ஆனந்த் அவர்களின் கவிதை காதலுக்கு சிறந்த இலக்கணமாக திகழ்ந்தது.
எத்தனை முறை படித்தாலும் மீண்டும் மீண்டும் வாசிக்க தோன்றும் விதத்தில் அமைந்துள்ளது இருவருக்கும் பாராட்டுக்கள்
வழக்கம்போல தமிழ்நாடு இ பேப்பர் வழங்கும் கட்டுரைகள் கவிதைகள் சினிமா செய்திகள் ஆன்மீக செய்திகள் நாட்டு நடப்புகள் அனைத்தும் சிறப்பாக தொகுத்து வழங்கப்பட்டுள்ளது
மீண்டும் நாளை சந்திப்போம்



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

முகில் தினகரன் எழுதிய " அம்மா மாதிரி" தற்போதைய சூழலைப் பொறுத்து ஒப்பீடு இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது.
SIR கால அவகாசம் நீட்டிப்பு , நடிகர் SJ சூர்யா ஒரு படத்தில் பேசிய " இல்ல ஆனா இருக்கு" என்ற வசனத்தை நினைவுப்படுத்தியது.



**-ஸ்ரீகாந்த்**
திருச்சி

---

தமிழ் இந்தியாவின் பெருமிதம்#பிரதமர் மோடி புகழாரம்
டிட்வா புயலால் மூவர் பலி#57000 ஹெக்டேர் விளை நிலங்கள் நாசம்=தமிழக அரசு தகவல்
திருப்பத்தூர்:இரு அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழப்பு
எனது உரிமையை யாராலும் திருட முடியாது#பாமக தலைவர் ராமதாஸ்
டிட்வா புயல் பாதிப்பு#இலங்கைக்கு உதவ தமிழக அரசு தயார்#முதல்வர் ஸ்டாலின்
எஸ் ஐ ஆர் படிவம் டிசம்பர் 11 வரை அவகாசம் நீட்டிப்பு
இதுவரை இல்லாத சாதனையைப் படைத்த தமிழ் யுடியூப் சானல்
புதுக் கவிதைகள் சிறப்பாக படைக்கப்பட்டிருக்கின்றன
நூல் விமர்சனம் அருமை
வாசகர் கடிதங்கள் அமர்க்களம்
குறட்டை, விக்கல் எவ்வாறு ஏற்படுகிறது#நிறுத்தும்/ தடுக்கும் வழிமுறைகள் கட்டுரைகள் வெகு நேர்த்தி
முதுகலை பட்டதாரி ஆசிரியர் தமிழ் தகுதித் தேர்வில் 85000 பேர் தோல்வி அடைந்த அவலம்
பட்டரவாக்கம் ரயில் நிலையம் அருகே 12 கிலோ கஞ்சா பறிமுதல்#ஆசாமி கைது
சென்னை வடபழனி சிம்ஸ் மருத்துவமனையில் மூளைச் சாவு அடைந்த பெண்ணின் உடல் உறுப்புகள் தானம்#எட்டு பேருக்கு மறுவாழ்வு
அதிக சக்தி டு வீலர் ஓட்டுபவர்களுக்கு கூடுதல் திறன் பரிசோதனை அவசியமா#மத்திய அரசுக்கு ஐகோர்ட் பரிந்துரை
க்டலை வியாபாரி உலக்கையால் அடித்துக் கொலை#தூத்துக்குடி வாலிபர் வெறிச் செயல்
திருச்சியில் மூன்று கோடி உயர் ரக கஞ்சா பறிமுதல்#போதைப் பொருட்களின் நடமாட்டம் தமிழகத்தில் வெகு அதிகம்
திருவனந்தபுரம்: சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களைக் குறிவைத்து பண மோசடி போலி மருந்து தொழிற்சாலைக்கு சீல்#500 கோடி மாத்திரை, உபகரணங்கள் பறிமுதல்
சர்வதேச கிரிக்கெட்: சச்சினின் வாழ்நாள் சாதனையை தகர்த்த விராட் கோலி
கருங்கடலில் பயணித்துக் கொண்டிருந்த ரஷிய எண்ணெய்க் கப்பல் மீது உக்ரைன் டிரோன் தாக்குதல்
காசாவில் இடிந்த கட்டடங்களில் 10000+ உடல்கள் #உலுக்கும் மீட்பு அனுபவம்
சென்யார் புயல் காரணமாக இந்தோனேஷியா, தாய்லாந்தில் 557 பேர் உயிரிழப்பு



**-பி.சுரேகா**
சென்னை

---

வணக்கம். 1. 12. 25 அன்றைய தமிழ் நாடு பேப்பர்.காம் முதல் பக்கத்தில் தமிழ் இந்தியாவின் பெருமிதம் என்ற பிரதமர் மோடி புகழாரம் சூட்டியது....
உண்மை....
உண்மை....
உண்மை....
உண்மை... என்று மனதுக்குள் ஒரு சந்தோஷம் ரீங்காரம் இட்டது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக இருக்க எனக்கு உதவியது பாராட்டுக்கள்.
எத்தனை முறை படித்தாலும் அலுக்காத அருமையான திருக்குறளை இன்று படித்து ரசித்து மகிழ்ந்தேன்.
திருக் கார்த்திகை தீபத்திருவிழா ஏழாம் நாள் மகர ரத ஊர்வலம் படமும் செய்தியும் மிக அற்புதமாக இருந்தது பாராட்டுக்கள்.
நலம் தரும் மருத்துவம் பகுதியில் வெந்தயமும் அதன் பயன்களும் என்றும் மருதாணியின் மருத்துவ குணங்கள் என்றும் அற்புதமான தகவல் பயனுள்ளதாக இருந்தது
இவற்றையெல்லாம் படிக்கும் போது ஒரு மருத்துவரிடம் கலந்து ஆலோசித்தது போல ஒரு மகிழ்வு வருகிறது.
புதுச்சேரியில் போலீஸ் சொல்லும் எச்சரிக்கையையும் மீறி கடற்கரைக்கு வருகை தரும் மக்களை பற்றி எண்ணியவுடன் இவர்களுக்கு எல்லாம் கேட்கும் பழக்கமே இருக்காதா என்று தோன்றியது.
திருவண்ணாமலை கார்த்திகை தீப திருவிழா ஏழாம் நாள் அண்ணாமலையார் மகர ரதம் வீதி உலா மிகவும் அற்புதமாக இருந்தது பாராட்டுக்கள்.
தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று என் ஜி ராமசாமி அவர்களின் வரலாறும் அவருடைய புகைப்படம் பல நல்ல அறிய தகவல்களை தெரிந்து கொள்ள உதவியது.
பல்சுவைக் களஞ்சியம் பகுதியில் வந்த தெய்வம் தந்த வீடு என்று நம் உடல் நமக்கு கடவுள் கொடுத்த இல்லம் என்ற அற்புதமான தகவலை படித்து மகிழ்ந்தேன். மீம்ஸ் படிக்கும் போது மனதுக்குள் ஒரு மகிழ்ச்சி ஆரவாரம் இடுவது உண்மை.
பன்முகம் பக்கத்தில் வந்த குழந்தைகளின் பிடிவாதம் பெற்றோர் பின் பற்ற வேண்டிய அணுகுமுறை மிக மிக நல்ல தகவல்.
30 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் பரிசளித்ததை படித்தது மகிழ்ச்சியாக இருந்தது தமிழகத்தின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவுக்காக குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டது நல்ல தகவல்.
மனம் மகிழ்ச்சியாக இருந்தது பாராட்டுக்கள் சுற்றுலா பக்கத்தில் வந்த பயணம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்று ஆய்வுகள் நிரூபித்ததை படித்தவுடன் கண்டிப்பாக சுற்றுலா சென்று நாம் ஆரோக்கியமாகவும் மன மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று தோன்றியது.
தொழில்நுட்ப அறிவியல் செய்திகள் மிகவும் அருமை இவற்றையெல்லாம் படிக்கும் போது விஞ்ஞானம் எவ்வளவு வளர்ந்து உள்ளது என்று தெரிந்து கொள்ள முடிகிறது.
சபரிமலைக்கு சுவாமியை தரிசனம் செய்யும் பக்தர்களை குறி வைத்து பணம் மோசடி செய்யும் அந்த கும்பலை பற்றி படித்துடன் அதிர்ச்சியாக இருந்தது.
காசாவின் இடிந்த கட்டடங்களில் 10000 க்கு மேற்பட்ட உடல்கள் மீட்பு என்ற செய்தி மிக மிக அதிர்ச்சியாக பயத்தில் உறைய வைத்தது.
தித்திக்கும் திங்கள் கிழமை விடியலை மிக அற்புதமாக வீடிய வைத்து நல்ல செய்திகளை மிக அருமையாகவும் தெளிவாகவும் கொடுக்கு அரும் பணியை செய்யும் தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**












FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper @gmail.com
RECEIVE OUR DAILY
NEWSPAPERS & MAGAZINES




## ஆட்கள் தேவை

கோவை டவுன்ஹால் வைசியாள் வீதி போலீஸ் ஸ்டேசன் அருகில் இருக்கும் அரிசி மொத்த வியாபாரம் கடைக்கு கடையில் பணிபுரிய +2 முடித்த ஆண்கள் தேவை

வேலை நேரம்
காலை - 8.45 AM
மாலை - 8.15 PM
ஞாயிறு விடுமுறை

90039 92134

## Euro Kids Pre-School

Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

## GODOWN FOR RENT

NEW GRADE-A WAREHOUSE
20,000 sqft
Location: Salem
❖ 12th KM Salem - Chennai NH
❖ Ample Truck Parking
Dock Leveller
72000 51508

## WANTED

YELLOW FOREST FURNISHINGS
RS Puram, Coimbatore
ASST PROJECT CO-ORDINATOR
Training will be given
PROJECT MANAGER
Experience in Interior Field Preferred. Liasoning with Architects and Institutional Customers
Attractive Salary + Incentive + Bonus
Whats app Resume
98424 09490

## WANTED GENERAL MANAGER

For An Security Agency In Coimbatore
- Qualification : Any Degree with Minimum 5 years experience in the related field.
- Age: Below 55 Years
- Salary: Rs.40,000/- per Month

Send your Resume to:
94889 44796
74484 64001
snoufalrizwan2009@gmail.com

## கோவை பீளமேட்டில் உள்ள

லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

## S.R Call Drivers Travels

24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

## WANTED DELIVERY BOY

Two wheeler Licence must
Plenum Info Sys
Singanallur
96887 48510

## WANTED

For a Sheet Metal Fabrication Company in Malumichampatti
✱ Welders
✱ Welding Contractors
Experience in Sheet Metal Welding.
Contact :-
99405 15121

## ஆட்கள் தேவை

நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
6385434442

## ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை

பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

## WANTED

AAIFA BUILDERS
Job location: karungal and marthandam
1. CIVIL ENGINEERS Male and Female (experience and freshers. 20 nos)
2. 3D AND 2D DESIGNER Male and Female
3. OFFICE ADMIN (any Master Degree) Male and Female
4. MARKETING EXECUTIVE Male and Female

Gmail: agnesjerlin55@gmail.com Whatsapp: 99402 43322

## WANTED PERSONAL DRIVER

Automatic & Manual Gear
Experience Minimum 6 Years
Vacancy : 5 | Salary Above ₹ 25,000* | Male
Walk-in Interview Date 24-11-2025, Monday | Time: 10.30 am to 1.30 pm, 4.00 pm to 7.00 pm
VENUE : RAJAN & Co.
Mob. 9487871915
ராஜன் & கோ

## DRIVERS WANTED

பள்ளி வாகனம் ஓட்ட டிரைவர்கள் தேவை
NEAR ANJUGRAMAM
Contact No:
9840391231

## சேல்ஸ்மேன்கள் தேவை

ஸ்நாக்ஸ் ஏஜென்ட்-ல் பணிபுரிய அனுபவம் உள்ள சேல்ஸ்மேன்கள் தேவை.
.......நேரில் வரவும்.......
வயது : 25 முதல் 40 வரை
சம்பளம் : 20,000 + இன்சன்டிவ்
Contact No :
9952704949, 8903224949
திரவியம் ஆஸ்பத்திரி பின்புறம், புரவசேரி


## SHEMFORD LITTLE STARS

Joshua Street,
Opposite to CSI Matriculation School,
Vettoornimadam, Nagercoil-3
WE ARE HIRING
OPEN POSITION
COMPUTER OPERATOR
Literacy skill-Tamil, English, Hindi
Contact: 9443049882

## ஆட்கள் தேவை


ஏஜென்சியில் பணிபுரிய
✶ சேல்ஸ்மேன்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100 +Incentive
✶ ஹெல்ப்பர்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100
நேரில் வரவும். 9 am to 6 pm
தியான் ஸ்டோர்ஸ்
42/1, அசம்பு ரோடு, CBH எதிரில், வடசேரி, நாகர்கோவில்.
செல்: 8110081165
9488888898

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME





# பல்சுவை களஞ்சியம்




## கர்ப்பிணிப் பெண்கள் வேர்க்கடலையை சாப்பிடலாமா?



அனைவருக்கும் பிடித்த வேர்க்கடலை இதய நோயை தடுக்கவும், கர்ப்பிணிப் பெண்களின் உடல்நல ஆரோக்கியத்திற்கும் மிகவும் உதவுகிறது. வேர்க்கடலையில் என்னென்ன நன்மைகள் இருக்கிறது

வேர்க்கடலையில் உடலுக்கு நன்மை செய்யும் கொழுப்பு அதிகம் உள்ளது.

வேர்க்கடலையில் உள்ள தாமிரச் சத்து நமது உடலில் எல்.டி.எல். () எனப்படும் கெட்ட கொழுப்பைக் குறைத்து நன்மை செய்யும் எச்.டி.எல். () கொழுப்பை அதிகப்படுத்துகிறது.

வேர்க்கடலையில் உள்ள வைட்டமின் பி3 மூளையின் செயல்பாட்டைத் தூண்டுவதோடு, நினைவாற்றலையும் அதிகரிக்க உதவுகிறது.

உடல் பருமன் உள்ளவர்கள் உடலைக் குறைக்க விரும்பினால், சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக ஒரு கைப்பிடி அளவு வறுத்த வேர்கடலையைச் சாப்பிடவும். இத்துடன் சீனி சோ;க்காத காபி அல்லது டீ அருந்தவும். பிறகு ஒரு மணி நேரம் கழித்துச் சாப்பிட அமர்ந்தால், உணவை அதிக அளவில் சாப்பிட முடியாது. இதன் பொருட்டு உடல் எடையும் படிப்படியாகக் குறையும்.

வேர்க்கடலையை தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வருவதன் மூலம், இதய நோய் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் குறைகிறது. இதில் உள்ள நல்ல கொழுப்பு சத்தான மோனோஅன்சேச்சுரேட் ஒலீக் அமிலம் போன்ற ஆன்டி ஆக்ஸிடென்ட் ஆகியவை இதய வால்வுகளை பாதுகாக்கிறது. நிலக்கடலையில் உள்ள பாலிபீனால்ஸ் என்ற ஆன்டி ஆக்ஸிடென்ட் நோய்வருவதைத் தடுப்பதுடன் இளமையைப் பராமரிக்கவும் உதவுகின்றது. இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும் சோடியத்தின் அளவு, வேர்க்கடலையில் மிகவும் குறைவாக காணப்படுவதால் வேர்க்கடலை சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்காது. மாறாக இரத்த கொதிப்பு குறையும்.

## கருவேப்பிலை பொடி செய்வது எப்படி?



கறிவேப்பிலை பொடி செய்வதற்கு முதலில் ஒரு வாணலியை சூடு செய்து அதில் 2 டேபிள் ஸ்பூன் அளவிற்கு கடலைப்பருப்பு, நான்கு டேபிள் ஸ்பூன் உளுத்தம் பருப்பு, 2 டேபிள் ஸ்பூன் கொத்தமல்லி விதை, 1/4 ஸ்பூன் மிளகு, ஒரு ஸ்பூன் கருப்பு எள் ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றோடு நான்கு பல் பூண்டினை சேர்க்கவும்..........

இதனை குறைவான தீயில் வைத்து இரண்டிலிருந்து மூன்று நிமிடங்கள் நன்கு வறுத்துக்கொள்ள வேண்டும்........

இவை ஓரளவு வறுபடும் பொழுதே சிறிதளவு கட்டிப் பெருங்காயத்தை சேர்த்து அதையும் நன்கு வறுத்துக் கொள்ளவும். கறிவேப்பிலை பொடிக்கு கூடுமானவரை கட்டிப் பெருங்காயத்தை பயன்படுத்துதல் நல்லது......

இப்பொழுது உங்கள் காரத்திற்கு ஏற்ப இதில் பத்திலிருந்து பதினைந்து காய்ந்த மிளகாய்களை சேர்க்கவும். மிளகாய் பருப்பின் சூட்டிலேயே நன்கு வெந்ததும் இரண்டு கைப்பிடி அளவிற்கு கறிவேப்பிலையை சேர்க்க வேண்டும்.

கறிவேப்பிலையை இதில் சேர்க்கும் முன்பு நன்கு கழுவி சுத்தம் செய்து நிழலில் காயவைத்த பிறகு சேர்க்க வேண்டும். இதனை ஒரு நிமிடம் வரை நன்கு வறுக்கவும்.......

கறிவேப்பிலை நல்ல மொறுமொறுப்பாக வறுபட்டதும். இதனை ஆறவைத்து ஒரு மிக்ஸி ஜாரில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனுடன் தேவையான அளவு உப்பு மற்றும் சிறிதளவு வறுத்த புளி சேர்த்து பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்..... பொடி சூடாக இருப்பதால் இதனை ஆற வைத்து ஒரு கண்ணாடி சாரில் சேமித்து வைக்கலாம். ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும்......

இந்த கறிவேப்பிலை பொடியை சாதம், இட்லி, தோசை என அனைத்திற்கும் பயன்படுத்தலாம். சுவையான இந்த கறிவேப்பிலை பொடி சத்துக்களும் நிறைந்திருப்பதால் தினமும் ஒரு ஸ்பூன் அளவு உணவில் சேர்த்துக் கொள்ளுதல் மிக நல்லது.

# மீம்ஸ்









# விடுகதை


| | |
|---|---|
| இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர்; பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன? | சூரிய காந்தி |
| பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்? | கிளி |
| இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான்? | நிலா |
| அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன? | அம்மி குளவி |
| ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன? | மூக்கு |
| ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஒய்வு அது? | சந்திரன் |



# ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.



# சமையல் அறை ஸ்பெஷல்



## புரதச் சத்து நிறைந்த மல்டி கிரைன் சுண்டல்

| | |
|---|---|
| பச்சைப் பயறு | கால் கப் |
| காராமணி | கால் கப் |
| கொண்டைக்கடலை | கால் கப் |
| பட்டாணி | கால் கப் |
| கொள்ளு | கால் கப் |
| வேர்க்கடலை | கால் கப் |
| உப்பு | தேவையானது |
| தனியா | ரெண்டு ஸ்பூன் |
| கடலைப்பருப்பு | ஒரு ஸ்பூன் |
| மிளகாய் | ரெண்டு |
| பெருங்காயம் | சிறு துண்டு |
| கொத்தமல்லி | சிறிது |
| தேங்காய் துருவல் | சிறிது |



பயிறு வகைகள் அனைத்தையும் களைந்து தனித் தனியாக முளை கட்டவும். முளை வந்த பருப்புகளை சேர்த்து உப்பு போட்டு குக்கரில் இரண்டு விசில் விட்டு எடுக்கவும்.

வாணலியில் தனியா, கடலைப்பருப்பு, மிளகாய், பெருங்காயத் துண்டு ஆகியவற்றை வறுத்து சிறிது ஆறியதும் கரகரப்பாக பொடித்து வைக்கவும்.

வாணலியில் கடுகு, கருவேப்பிலை தாளித்து வெந்த பயறு வகையை நீரை வடித்து சேர்த்து கிளறவும். அத்துடன் பொடித்து வைத்துள்ள தனியா பொடியையும் சேர்த்து நன்கு கலந்து தேங்காய் துருவல் பொடியா நறுக்கிய கொத்தமல்லி கலந்து விட சத்தான சுண்டல் தயார்.

**பச்சைப்பயிறு இனிப்பு சுண்டல்:**

| | |
|---|---|
| பச்சைபயிறு | 200 கிராம் |
| வெல்லம் | 150 கிராம் |
| ஏலக்காய் | 4 |
| தேங்காய் | துருவல் அரை கப் |
| உப்பு | ஒரு சிட்டிகை |

பச்சை பயறை இருமுறை நன்கு கழுவி முங்கும் அளவு தண்ணீர் விட்டு குக்கரில் நான்கு விசில் விட்டு எடுக்கவும். வெல்லத்தை பொடித்து வாணலியில் அரை கப் தண்ணீர் விட்டு வெல்லத்தையும் சேர்த்து வெல்லம் கரைந்ததும் வடிகட்டி திரும்பவும் வாணலியில் விட்டு கொதிக்க விடவும். ஏலக்காயை பொடித்து வைக்கவும்.

வெந்த பச்சை பயறை சிறிது கரண்டியால் மசித்துக்கொண்டு வெல்லக் கரைசலில் சேர்த்து கலந்து கிளறவும்.

அடுப்பை நிதானமான தீயில் வைத்து கிளறவும். நன்கு சேர்ந்து வரும்போது பொடித்த ஏலக்காய், தேங்காய் துருவல் சேர்த்து இறக்க ருசியான பச்சை பயறு இனிப்பு சுண்டல் ரெடி.

## சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற சத்தான உணவு: மூக்குத்தி அவரை பொரியல்!

காம்பு கத்தரி, மூக்குத்தி அவரை எனப்படும் ஒரு வகை கொடி காய்கறியில், பச்சை மூக்குத்தி, சிவப்பு மூக்குத்தி எனமொத்தம் இரண்டு வகை உள்ளது.

இது கிராமப் புறங்களில் தானாகவே முளைக்கும் காய்கறியாகும். நமது பாரம்பரிய காய்கறிகளில் ஒன்றான இந்த மூக்குத்தி அவரையை காலப்போக்கில் மக்கள் பயன்படுத்துவதை குறைத்துக் கொண்டதால், இதைப்பற்றி பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை.

ஆனால், தற்போது அதன் மகத்துவத்தை மீண்டும் உணர்ந்த மக்கள் தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர். மூக்குத்தி அவரையில் ஏகப்பட்ட மருத்துவகுணங்கள் உள்ளது. குறிப்பாக நமது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் அற்புத சக்தி இதற்கு உண்டு. இந்த பதிவில் மூக்குத்தி அவரையை பயன்படுத்தி பொரியல் எப்படி செய்வது என்பது பற்றி பார்க்கலாம்.



**தேவையான பொருட்கள்**

மூக்குத்தி அவரை - 1 கப்.
சின்ன வெங்காயம் - 15.
பச்சை மிளகாய் - 2.
சீரகத்தூள் - ½ டீஸ்பூன்.
தேங்காய் - துருவியது சிறிதளவு.
எண்ணெய் - தேவையான அளவு.
உப்பு - சிறிதளவு.
கடுகு - ½ டீஸ்பூன்.
உளுந்து - ½ டீஸ்பூன்.
மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன்.
கருவேப்பிலை - சிறிதளவு.

**செய்முறை:**

முதலில் மூக்குத்தி அவரைக்காயை தண்ணீரில் நன்றாக கழுவிக்கொள்ளவும். பின்னர் அதை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் சிறிய கடாய் வைத்து தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும் உளுந்து, கடுகு, கருவேப்பிலை சேர்த்து வதக்கவும். பின்னர் அதில் நறுக்கி வைத்த வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதங்கியதும், அதில் பொடியாக நறுக்கிய மூக்குத்தி அவரைக்காய் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து கிளறவும். அதன் பிறகு மஞ்சள் தூள், சீரகத்தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகக் கிளறவும். இறுதியில் மூக்குத்தி அவரை நன்றாக வெந்ததும், அதில் துருவி வைத்துள்ள தேங்காயை தூவி மெதுவாக கிளறி அடுப்பை அணைத்தால் மூக்குத்தி அவரை பொரியல் ரெடி.



## அடுப்பங்கரை டிப்ஸ்: சமையல் வல்லுநர்கள் போல் மிளிரலாம்!



ஊறுகாய் வகைகளை மரக்கரண்டியால் எடுத்து உபயோகிக்க நீண்ட நாள் கெடாமல் இருப்பதுபோல் உப்பிற்கும் மரக்கரண்டி அல்லது பீங்கான் கரண்டி உபயோகிக்க துருப்பிடிக்காமல் நீண்ட நாள் அப்படியே இருக்கும்.

சிகப்பு மிளகாய் தாளிக்க மிளகாயை இரண்டாக வெட்டி டப்பாவில் வைத்துக்கொள்ள தாளிக்கும்போது சுலபமாக இருக்கும்.

வாழைக்காய், வாழைப்பூ நறுக்கும்போது கையிலும், கட்டிங் போர்டிலும் எண்ணெய் தடவிக்கொண்டு பின் நறுக்க கறை ஏற்படாது.

சமையலின்போது பயன்படுத்தும் கரண்டி, ஸ்பூன்களை அப்படியே பரிமாற உபயோகிக்காமல் கழுவிய பின் உபயோகிக்க பார்க்க நீட்டாக இருக்கும்.

கேசரி, அல்வா போன்றவற்றை பரிமாறும்போது குழி கரண்டியில் உள்பக்கம் எண்ணெய் அல்லது நெய் தடவிக்கொண்டு பின் எடுத்து பரிமாற அழகாக குழியாக வரும்.

பாத்திரங்களை சூடாக இருக்கும்போது கழுவாதீர்கள். பாத்திரத்தின் வடிவம் மாறிவிடும். சற்று சூடு ஆறியதும் கழுவ வடிவம், நான்ஸ்டிக் எனில் கோட்டிங் மாறாமல் இருக்கும்.

பாத்திரம் துலக்க தரமான வாசிங்பவுடர், லிக்விடை உபயோகிக்க கை சொரசொரப்பு, கீறல் இல்லாமல் நன்றாக இருக்கும்.

வரும் பண்டிகை சீசனில் இனிப்பு செய்வோம். அதற்கு வெல்லப்பாகு, சர்க்கரை பாகு தேவைப்படும். ஒரு கம்பி பதத்தில் சர்க்கரை, வெல்லப்பாகை செய்து ஃப்ரிட்ஜில் வைத்துகொள்ள சட்டென செய்ய சுலபமாக இருக்கும்.

சர்க்கரை கேரமல் செய்து வைத்துக்கொண்டு பாயஸம், புட்டிங் போன்றவை செய்ய கலரும், சுவையும் நன்றாக இருக்கும்.

நட்ஸ், வறுத்த கடலை, முளைவிட்ட பயறு வகைகளை சமைக்கும் போதே இல்லத்தரசிகள் சாப்பிட்டுக்கொள்ள சத்து சேருவதோடு, அசிடிட்டி பிரச்னைகள் வராது.

சுண்டல் வகைகளை அப்படியே தாளித்து வைக்காமல், முதல் நாள் ஊறி, முளைகட்டிய பயறு வகைகளாக செய்ய சுவையோடு சத்தும் சேரும். புட்டும் வழக்கமான அரிசிமாவில் செய்யாமல் பருப்பு வகைகளில் செய்வதோடு சிறுதானிய மாவு, சிறுதானிய வரையில் செய்ய சுவையோடு சத்தும் சேரும்.

பருப்பு பாயசம் வைக்கும்போது பருப்பை வறுத்துவிட்டு ரவையாக்கி இரண்டாம் பாலில் வேகவிட்டு வெந்ததும், மில்க் மெய்ட், வறுத்த நட்ஸ், தேவையெனில் வெல்லம், ஏலத்தூள், நெய்யில் வறுத்த தேங்காய் துண்டுகள் சேர்த்து கலந்து இறக்க ரிச்சான பருப்பு பாயசம் சுவையாக இருக்கும்.

இனிப்பு பலகாரங்கள் செய்யும்போது சுக்கு, ஜாதிக்காய் ஏலக்காய் கிராம்பு சேர்த்து பொடி செய்து சேர்த்துக் கொள்ள சுவை அதிகரிக்கும்.

## ஆவியில் வேகவைத்த வாழைப்பூ வடை!



**தேவையான பொருட்கள்:**

சிறிய வாழைப் பூ - ஒன்று
பெரிய வெங்காயம் - ஒன்று
பச்சை மிளகாய்- 5
சோம்பு - அரை ஸ்பூன்
பட்டாணிப் பருப்பு - 200 கிராம்
உப்பு தேவையான அளவு
கருவேப்பிலை, மல்லித்தழை சிறிதளவு

**செய்முறை:**


பட்டாணிப் பருப்பை கழுவி விட்டு, 2 மணி நேரங்களுக்கு நீரில் ஊறவைக்கவும். வாழைப்பூவை சுத்தம் செய்து நரம்பு, மற்றும் வெள்ளையாக இருக்கும் களைகளை நீக்கி பொடியாக அரிந்து மோர் கலந்த நீரில் போடவும். பட்டாணி பருப்பை மிக்ஸி ஜாரில் போட்டு, சிறிதளவு உப்பு, சோம்பையும் சேர்த்து கொரகொரப்பாக அரைத்து எடுக்கவும். வாழைப்பூவை நீரின்றி பிழிந்துவிட்டு பருப்புடன் போட்டு ஒரே ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும். பச்சை மிளகாயையும் பொடியாக அரிந்து, கருவேப்பிலை கொத்தமல்லி தலையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இவை அனைத்தையும் அரைத்த மாவில் கலந்து கொள்ளவும். துளி பெருங்காயம் சேர்த்துக் கொள்ளவும்.

இவற்றை வடைகளாக தட்டி இட்லிப் பானைத் தட்டுகளில் லேசாக எண்ணெய் ஊற்றி அதன் மேல் இந்த வடைகளை வைக்க வேண்டும். 15 நிமிடம் ஆவியில் வேகவைத்து எடுத்தால் மிகச்சுவையான வாழைப்பூ வடை ரெடி. ஆவியில் வேக வைப்பதனால் இதன் சத்து அப்படியே நமக்கு கிடைக்கும். ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள் என யார் வேண்டுமானாலும் இதை விரும்பி சாப்பிடலாம்.

### உங்கள் வீட்டு சமையல் அறையில் இதை மட்டும் செய்யுங்கள்..

## உணவுப்பஞ்சம் வராது

நாம் உண்ணும் உணவு ருசியோடு இருப்பதோடு ஆரோக்கியத்தை தருவதாகவும் இருக்க வேண்டும். எத்தனையோ நாடுகளில் ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் வறுமையில் வாடுகிறார்கள். இந்தியாவில் இலவச அரிசி, கோதுமை உள்ளிட்ட பல திட்டங்களாலும் பள்ளிகளில் வழங்கப்படும் இலவச உணவுகளாலும் பலரும் பசியாறுகின்றனர். நம்முடைய வீட்டில் உணவு பஞ்சம் வராமல் இருக்க குறைவில்லாமல் பொருட்கள் இருக்க என்ன செய்ய வேண்டும் எனறு பார்க்கலாம்.



**சமையல் அறை வாஸ்து:** நம்முடைய வீட்டில் எத்தனையோ அறைகள் இருந்தாலும் சமையல் அறை முக்கியமானது. அங்குதான் நம்முடைய எல்லோருடைய ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகிறது. அம்மாவின் கை பக்குவ ருசியை மட்டும் கொடுப்பதில்லை நம்முடைய ஆரோக்கியத்தையும் நிர்ணயம் செய்கிறது. பொதுவாக வீடுகளில் வாஸ்து படி சமையல் அறை அக்னி மூலை எனப்படும் தென்கிழக்கு மூலையில்தான் இருக்க வேண்டும் அதுதான் சிறப்பானது.

**கிச்சன் மேடை:** கேஸ் ஸ்டவ் அல்லது அடுப்பு வைக்கும் மேடை தென்கிழக்கு மூலையில் தெற்கு கிழக்கு சுவரை ஒட்டி அமைக்க வேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் சமையல் அறைக்குள் வரும் வகையில் ஜன்னல் அமைப்பது சிறப்பானது. சமைப்பவர் கிழக்கு நோக்கியே சமைக்க வேண்டும். சமையலறையில் பாத்திரம் கழுவும் குழாய் வடகிழக்கில் அமைப்பது நல்லது. வடகிழக்கு மூலை மட்டுமே தண்ணீர் குழாய் அமைக்க நல்ல இடம் இல்லாவிட்டால் பெண்களுக்கு ஆரோக்கிய குறைபாடு ஏற்படும்.

**சரியான திசை:** எந்த திசையில் சமையல் அறை வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது போல எந்த திசையில் சமையல் அறை கண்டிப்பாக இருக்கக்கூடாது என்றும் வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. வடகிழக்கில் சமையலறை வைத்தால் குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கும். வடகிழக்கு எனப்படும் ஈசான்ய மூலையில் சமையல் அறை வரவே கூடாது. இது தண்ணீருக்கு மட்டும் ஏற்ற இடம். இங்கே அக்னி வைக்க கூடாது. சமையலறை இருப்பது தோஷத்தை கொடுக்கும். குடும்பத்தலைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அக்னியில் தண்ணீர் எப்படி கொதிக்குமோ அதுபோல இங்கே சமையலறை அமைத்துவிட்டால் அந்த குடும்பத்தின் பொருளாதார நிலையில் பாதிப்பு ஏற்படும்.

**உடல் நல பாதிப்பு:** தென்மேற்கு எனப்படும் கன்னி மூலையில் சமையலறை வைக்கவே கூடாது. உடல் நல பாதிப்பு வரும். துஷ்ட சக்திகளால் பாதிப்பு வரும் கடன் பிரச்சினை திருமண தடை, திருமண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படும். அதே போல மேற்கு சமையலறையும் வரவு செலவு சரியாக போகும். நண்பர்கள் கூட விரோதிகளாவார்கள். நல்ல வாய்ப்புகள் கூட தட்டிப்போகும். தென்கிழக்கு பகுதிக்கு எதிர் மூலையான வடமேற்கு வாயுமூலலை பகுதியில் சமையல் அறை வைக்கலாம் ஆனால் அவ்வப்போது லேசாக உடல் நல பாதிப்பு ஏற்படும். தொழில் முன்னேற்றம் வரும் வாஸ்துபடி கட்டிடம் அமைந்தால் தோஷம் வர வாய்ப்பு இல்லை.

சமையலறையில் இதை மட்டும் வைக்காதீங்க..கிச்சனில் இந்த பொருள் இருந்தாலே வீட்டில் பணக்கஷ்டம் வந்துருமாம்

வாஸ்து தோஷம் நீங்க: வீட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு பகுதிக்கு சமையலறையை மாற்ற இயலாத பட்சத்தில், இருக்கிற சமையலறைக்குள் சின்ன சின்ன மாற்றங்களை செய்யலாம். குறிப்பாக அடுப்பு மேடை கிழக்கு நோக்கி தென்கிழக்கு மூலையில் இருக்க வேண்டும். தவறான சமையல் அறை அமைப்பில் குடியிருப்பவர்கள் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுக்கலாம். குடும்பத்தில் வறுமை ஏற்படாது. இரவு நேரத்தில் உணவு கொஞ்சமாவது வைக்க வேண்டும்.

**உப்பு பாத்திரம்:** நம்முடைய உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் உப்பு மகாலட்சுமியின் அம்சம் நிறைந்தது. அந்த உப்பினை நாம் தினமும் கைகளால் எடுத்துதான் வணங்கி விட்டு சமையலுக்கு போட வேண்டும். அந்த உப்பினை நாம் சரியான இடத்தில் வைக்க வேண்டும். அப்போதுதான் உணவுப்பொருட்கள் நம்முடைய வீட்டில் குறைவில்லாமல் இருக்கும். பொதுவாக சமையல் அறையில் உப்பு போட்டு வைக்கும் பாத்திரத்தை மேலே செல்பில் வைக்கவே கூடாது. சமையல் செய்யும் மேடைக்கு கீழே குனிந்து எடுக்கும் வகையிலோ, கைக்கு எட்டும் இடத்திலோதான் வலது கை பக்கத்தில்தான் உப்பு வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் கல் உப்பு வாங்கி கொட்டி வைப்பது செல்வ வளத்தை அதிகரிக்கும்.

**அன்னபூரணி:** நம்முடைய உணவில் ருசி கூடவும் ஆரோக்கியம் அதிகரிக்கவும் நாம் அன்னபூரணி தாயாரின் படத்தை சமையல் அறையில் மாட்டி வைப்பது சிறப்பானது. இதன் மூலம் வாஸ்து தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். காசி அன்னபூரணி உலகிற்கே உணவு கொடுப்பவள் எனவே நாம் அன்னபூரணியின் படத்தினை மாட்டி வைப்பதன் மூலம் உணவு தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். செல்வ செழிப்பு அதிகரிக்கும். எதையும் நம்பிக்கையோடு செய்தால் நல்லவை தேடி வரும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## கபடி போட்டியில் முதலிடம் பெற்ற கரூர் அணிக்கு பரிசு



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளையொட்டி ஓசூரில் நடந்த கபடி போட்டியில் முதலிடம் பெற்ற கரூர் அணிக்கு அமைச்சர் சக்கரபாணி பரிசு வழங்கினார்.

## மாணவர்களுக்கு நிவாரண உதவித்தொகை



கரூர் மாவட்ட விபத்தில் காயம் அடைந்த மாணவர்களுக்கு நிவாரண உதவித்தொகையை குமரி கலெக்டர் அழகுமீனா காசோலையாக வழங்கினார்.

## வேணுகோபால கிருஷ்ண சுவாமி குடமுழுக்கு விழா



ராணிப்பேட்டை மாவட்டம் கீழ் வீராணம், சூரைக்குளம் கிராமத்தில், ருக்மணி சத்தியபாமா சமேத வேணுகோபால கிருஷ்ண சுவாமி குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## சுரங்கப்பாதை அமைப்பது குறித்து ஆய்வு



ராஜபாளையம் நகர் மலையடிப்பட்டி ரயில்வே கேட் பகுதியில் ரயில்வே மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அமைப்பது குறித்து தங்கப்பாண்டியன் எம்எல்ஏ நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

## சரவணன் நியமன கவுன்சிலராக தேர்வு



**திண்டிவனம், டிச.02:**
திண்டிவனம் நகராட்சி 6வது வார்டை சேர்ந்த சரவணன் நியமன கவுன்சிலராக தேர்வு செய்யப்பட்ட நிலையில் கமிஷனர் பானு திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கமிஷனர் முன்னிலையில் நியமன கவுன்சிலர் உறுதி மொழி ஏற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில், நகர மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமிவெற்றிவேல், கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சின்னசாமி, நந்தகுமார், சந்திரன், சுதாகர், ராஜேந்திரன், செல்வம், பரணிதரன், தில்ஷாத்பேகம், லதாசாரங்கபாணி, சரவணன், பாஸ்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

# துணை முதல்வர் உதயநிதிக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு



ஈரோடு வந்த துணை முதல்வர் உதயநிதிக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## 14 மாற்றுத் திறனாளிகளுக்கான நியமன ஆணை




திருச்சி மாவட்டத்தில் உள்ள 14 பேரூராட்சிகளுக்கு நியமிக்கப்பட்ட 14 மாற்றுத் திறனாளிகளுக்கான நியமன ஆணையை நேற்று அமைச்சர் நேரு நேரில் வழங்கினார்.

## மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரண பொருட்களை வழங்கினார்



நாகப்பட்டினம் மாவட்டத்தில் டித்வா புயல், மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரண பொருட்களை வழங்கினார். கலெக்டர் ஆகாஷ், ஷா நவாஸ் எம்எல்ஏ, எஸ்பி செல்வகுமார், நாகப்பட்டினம் நகரமன்ற தலைவர் மாரிமுத்து ஆகியோர் உடன் உள்ளனர்.

## லட்சுமிநாராயணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்



பழனி லட்சுமிநாராயணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## 8ம் நாளில் குதிரை வாகனத்தில் சுவாமி வலம் வந்தார்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் தீபத் திருவிழா 8ம் நாளில் குதிரை வாகனத்தில் நேற்று சுவாமி வலம் வந்தார்.

## மீன் அங்காடி கடைகளுக்கான கட்டுமான பணி



புதுச்சேரி மேட்டுப்பாளையத்தில் புதிய மீன் அங்காடி கடைகளுக்கான கட்டுமான பணியினை முதல்வர் ரங்கசாமி நேற்று துவக்கி வைத்தார்.

## அயலகத் தமிழர் நல வாரிய அலுவலக கட்டிடம் திறப்பு



சென்னை, ஈ வி கே சம்பத் மாளிகையில் தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரிய அலுவலக கட்டிடத்தை அமைச்சர் நாசர் நேற்று திறந்து வைத்தார்.




## கிரிக்கெட் போட்டி




தாராபுரம் கிழக்கு ஒன்றிய மாணவரணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாள் கிரிக்கெட் போட்டியை அமைச்சர் சுவாமிநாதன் துவக்கி வைத்தார்.

## ஐயப்ப பஜனை மற்றும் சமபந்தி விருந்து விழா



வட சென்னை குயப்பேட்டை பகுதியில் ஆதிபெரிய பாளையத்தம்மன் கோவிலில் ஐயப்ப பஜனை மற்றும் சமபந்தி விருந்து விழாவில் பாஜக மாநில செயலாளர் வினோஜ் செல்வம் கலந்து கொண்டார்.



## மணவிழாவில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன்

அதிமுக வழக்கறிஞர் பிரிவு தேனி கிழக்கு மாவட்ட செய்யலாளர் கணேசன் மகன் கோகுலகிருஷ்ணன் - அபிநயா மணவிழாவில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வாழ்த்தினார்.

## குழந்தைகளுக்கு தங்க மோதிரம் தாய்சேய் நலத்திட்ட உதவி



துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் தாய்சேய் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## சூரிய சக்தி நிறுவல் குறித்து 3 நாட்கள் பயிற்சி - முன்பதிவு அவசியம்

சென்னையில் வரும் 09.12.2025 முதல் 11.12.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் சூரிய சக்தி நிறுவல் பயிற்சி" வரும் 09.12.2025 முதல் 11.12.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் சூரிய சக்தி துறையில் தொழில்முனைவோரின் அடிப்படைகள், சூரிய சக்தி துறையில் தொழில்முனைவோரின் அடிப்படைகள், சூரிய சக்தி மென்பொருள் கண்ணோட்டம், சூரிய சக்தி அடிப்படைகள் அறிமுகம், அடிப்படை சூரிய சக்தி திட்ட வடிவமைப்பு, நிதி திட்டமிடல், ஒழுங்குமுறைகள் மற்றும் மானியத் திட்டங்கள், சூரிய வணிக மேம்பாடு, AMC மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகள், வணிக விளம்பரப் பயிற்சி, சூரிய PVக்கான வணிக மாதிரிகளைப் புரிந்துகொள்வது, நிதி திட்டமிடல் போன்றவை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். முதலில் வருவோர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கிண்டி சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை -600 032. 8668102600

முன்பதிவு அவசியம்: அரசு சான்றிதழ் வழங்கப்படும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா: மைசூரில் சுற்றி பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்



### மைசூர் அரண்மனை

மைசூர் அரண்மனை மைசூரில் ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாகவும், இந்தோ-சாராசனிக் கட்டிடக்கலைக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டாகவும் உள்ளது. மைசூர் அரண்மனை கர்நாடகாவின் மைசூர் நகரில் உள்ள ஒரு கண்கவர் நினைவுச்சின்னமாகும், இது பல சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. தாஜ்மஹாலுக்குப் பிறகு, மைசூர் அரண்மனைக்கு அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் வருகிறார்கள் என்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்.

### மைசூரில் உள்ள பிருந்தாவன் தோட்டங்கள்

கர்நாடகாவின் மண்டியா பகுதியில் அமைந்துள்ள மைசூரில் உள்ள பிருந்தாவன் தோட்டம் ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாகும். வெளியே, இந்த தோட்டம் கவர்ச்சிகரமானது; அதன் இயற்கை சூழலால் அனைவரும் ஈர்க்கப்படுகிறார்கள். நீங்கள் முதலில் இந்த இடத்திற்குச் செல்லும்போது, நுழைவாயிலுக்கு அருகில் ரோஜா தோட்டங்கள் மற்றும் பூக்களைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இது 150 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நாட்டின் மிக அழகான தோட்டங்களில் ஒன்றாகும். பார்வையாளர்கள் பிருந்தாவன் தோட்டத்தில் ஒரு தாவரவியல் பூங்கா மற்றும் பல்வேறு நீரூற்றுகளையும் அனுபவிக்கலாம். இசை நீரூற்று தோட்டத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க கூறுகளில் ஒன்றாகும். நீரூற்றின் அற்புதமான வண்ணங்களை உண்மையிலேயே பாராட்ட பார்வையாளர்கள் சூரிய அஸ்தமனத்திற்கு அருகில் வர வேண்டும்.

### சாமுண்டி மலை மற்றும் சாமுண்டேஸ்வரி கோவில்

மைசூரிலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சாமுண்டி மலையில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சாமுண்டீஸ்வரி கோயில் உள்ளது. கோயிலுக்குள் நுழைய 1000 படிகள் ஏற வேண்டும். கோயிலின் கட்டுமானம் அசாதாரணமானது, 7 நிலை கோபுரம் மற்றும் உச்சியில் 7 தங்க முலாம் பூசப்பட்ட கலசம் உள்ளது. இந்த கோயில் துர்கா தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மேலும் இது அவளை எட்டு கைகளுடன் (அஷ்ட புஜங்கள் என்றும் அழைக்கப்படுகிறது) சித்தரிக்கிறது. மைசூரின் மலைகள் மற்றும் கோயில்களுக்கு ஒரு நாள் பயணம் சுற்றுலாவுக்கு ஏற்றது. இது மைசூரின் மிகவும் பிரபலமான குடும்ப இடங்களில் ஒன்றாகும். கம்பீரமான சாமுண்டி மலைகள் மைசூரின் கட்டாயம் பார்க்க வேண்டிய சுற்றுலா தலமாகும், மேலும் அவை நகரின் புறநகரில் அமைந்துள்ளன.

சாமுண்டி மலைகள் அற்புதமாக சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சாமுண்டீஸ்வரி கோயிலின் தாயகமாகும். மைசூரில் கட்டாயம் பார்க்க வேண்டிய சுற்றுலா தலமாகும் இது.

### புனித பிலோமினா தேவாலயம்

மைசூர் அதன் அழகிய கட்டிடக்கலைக்கு பெயர் பெற்றது! தெற்காசியாவின் மிகப்பெரிய கதீட்ரல்களில் ஒன்றான செயிண்ட் பிலோமினா தேவாலயம், மைசூரில் பார்க்க வேண்டிய அடுத்த சிறந்த இடமாகும். கோதிக் பாணியில் வடிவமைக்கப்பட்ட தேவாலயத்தின் கட்டிடக்கலை திட்டம் மிகவும் கவனமாக பின்பற்றப்பட்டது. தேவாலயத்தின் அடித்தளத்தில் உள்ள மைய பலிபீடத்தின் கீழ் கேடாகம்ப்கள் அமைந்துள்ளன. தரைத்திட்டம் ஒரு புனித சிலுவையாக வடிவமைக்கப்பட்டுள்ளது, அதில் ஒரு சபை மண்டபம், பாடகர் குழு மற்றும் டிரான்செப்ட்கள் உள்ளன. கறைபடிந்த கண்ணாடி ஜன்னல்கள் குறிப்பிடத்தக்க கிறிஸ்து சகாப்த நிகழ்வுகளை பிரதிபலிக்கின்றன.

### ரயில் அருங்காட்சியகம்

டெல்லியில் உள்ள தேசிய ரயில்வே அருங்காட்சியகம் இந்தியாவின் முதல் அருங்காட்சியகமாகும், அதே நேரத்தில் ரயில் அருங்காட்சியகம் நாட்டின் இரண்டாவது அருங்காட்சியகமாகும். 1979 ஆம் ஆண்டு இந்திய ரயில்வேயால் கட்டப்பட்டதிலிருந்து இது ரயில்வே சேகரிப்புக்கான பாதுகாப்பான தளமாக செயல்பட்டு வருகிறது.

இந்திய ரயில்வேயின் பயணத்தையும் முன்னேற்றத்தையும் இந்த அருங்காட்சியகத்தில் உள்ள படங்கள் மற்றும் பிற பொருட்களின் சேகரிப்பு மூலம் காணலாம். ரயில் அருங்காட்சியகத்தில் சில அற்புதமான என்ஜின்கள் உள்ளன.

முன்பு, மைசூர் அரண்மனையில் கண்காட்சிகள் நடத்தப்பட்டன, ஆனால் பின்னர் இந்த ரயில் அருங்காட்சியகத்திற்கு மாற்றப்பட்டன.

# கொடநாடு சம்பவம்: வழக்கிலிருந்து 2 பேர் விடுவிப்பு

உதகை, டிச.2:

நீலகிரி மாவட்டம், கோத் தகிரி அருகே உள்ள கொட நாடு பகுதியில் மறைந்த முன் னாள் முதல்வர் ஜெயலலி தாவுக்கு சொந்தமான எஸ் டேட் பங்களாவில் கடந்த 2017 ஆம் ஆண்டு கொலை, கொள்ளை சம்பவம் நடந் தது. இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக 11 பேர் சேர்க்கப்பட்டு, உதகையில் உள்ள ஒருங்கிணைந்த மாவட்ட அமர்வு நீதிமன்றத் தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே கொடநாடு கொலை, கொள்ளை வழக் கில் சம்பந்தப்பட்ட உதகை தனியர் விடுதி உரிமையா ளர் சாந்தா என்ற சாட்சியை கேரளம் மாநிலத்தைச் சேர்ந்த சயான், வாளையாறு மனோஜ் ஆகியோர் மிரட்டியதாகவும், சாட்சி களை கலைக்க முற்பட்ட தாகவும், கடந்த 2019 ஆம் ஆண்டு பிப்.4 ஆம் தேதி உதகை நகர மத்திய காவல் நிலையத்தில் வழக்குப்ப திவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நடை பெற்று வந்த நிலையில், வெள்ளியன்று நீதிபதி சோழியா இறுதி தீர்ப்பு வழங்கினார்.

அதில், அரசுத் தரப்பில் எந்தவித சாட்சிக ளும் உறுதி செய்யப்படாத தால், இந்த வழக்கிலிருந்து சயான், வாளையாறு மனோஜ் ஆகியோரை விடு தலை செய்து உத்தரவிட் டார்.

# விஐடியில் 1,100 மாணவர்களுக்கு ரூ.1 கோடி கல்வி உதவித்தொகை

வேலூர், டிச.2:

வேலூர் விஐடி பல்கலைக்கழகத் தில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை சார்பில் 1,100 மாண வர்களுக்கு ரூ.1.13 கோடி கல்வி உதவித் தொகை வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவுக்கு வேந்தர் கோ.விசுவ நாதன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சேகர் விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி முன்னிலை வகித்தனர்.

வேந்தர் கோ.விசுவநாதன் பேசுகை யில், 2012-ல் தொடங்கப்பட்ட அறக்கட் டளை இதுவரை ரூ.12.84 கோடி கல்வி உதவித்தொகை வழங்கியுள்ள தாகவும், 10,548 மாணவர்கள் பயன டைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்தியாவில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் 28 சதவீதமாக உள்ள நிலையில், தமிழ்நாடு 47 விழுக்காடு டன் முதல் இடத்திலும், கேரளம் 41 விழுக்காடுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன என்றார்.

மொத்த வருவாயில் ஜப்பானை பின்னுக்கு தள்ளி இந்தியா நான்கா வது இடத்துக்கு வந்துள்ளது.

ஆனால் தனிநபர் வருமானத்தில் இந்தியா 2,900 டாலராக உள்ள நிலையில், ஜப்பான் 36,000 டாலர் பெறுகிறது. இந்தியாவில் 10 சதவீத செல்வந்தர்கள் 80 சதவீத சொத்துக்களை வைத்துள் ளனர், ஆனால் முறையாக வரி செலுத்து வதில்லை என்றார்.

துணைத்தலைவர் சேகர் விசுவ நாதன், 69 சதவீத மாணவிகள் உதவித் தொகை பெறுவதாகவும், ஒரு பெண் படித்தால் சமூகத்தை மாற்றிவிட முடியும் என்றும் கூறினார்.

விஐடி செயல் இயக்குநர் சந்தியா சேகர் பிறந்தநாளையொட்டி ரூ.25 லட்ச மும், சங்கர் விசுவநாதன் ரூ.5 லட்சமும், முன்னாள் மாணவர்கள் சார்பில் ரூ.10 லட்சமும் அறக்கட்டளைக்கு வழங்கி னர்.

வேலூர், திருப்பத்தூர், ராணிப் பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 236 ஆண்கள், 864 பெண்கள் என 1,100 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

# கொள்ளையர்களை மீது போலீசார் துப்பாக்கிச்சூடு: சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழப்பு

கோவை, டிச.2:

கவுண்டம்பாளையம் வீட்டுவசதிவாரிய அடுக்குமாடிக் குடியிருப்பில் நடத்திய கொள்ளையில் மூன்று பேரை போலீசார் சுட்டு பிடித்த நிலையில், அதில் ஒருவர் மருத்துவம னையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கோவை மாவட்டம், கவுண்டம்பாளை யம் வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடி யிருப்பில் 13 வீடுகளில் கொள்ளை சம்பவம் நடைபெற்றது. இதையடுத்து குனியமுத்தூர் அருகே குளத்துப்பாளையத்தில் பதுங்கியி ருந்த உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று கொள்ளையர்களை சனியன்று போலீசார் பிடிக்க முயன்றனர். அப்போது அவர்கள் போலீசார் மீது தாக்குதல் நடத்தியதால், தற் காப்புக்கு போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி னர்.

இதில் கால்களில் குண்டு பாய்ந்த மூவ ரும் படுகாயமடைந்த நிலையில், மூவரும் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில், ஆசிப் (28) என்பவர் சிகிச்சை பலனின்றி ஞாயிறன்று உயி ரிழந்தார்.

மற்ற இருவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த ஆசிப்பின் உடல் பிரேத பரிசோதனைக்காக பிணவறை யில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர் பாக போலீசார் மற்றும் நீதிபதி விசாரணை நடத்தவுள்ளனர்.

# குடிநீர் கேட்டு பொதுமக்கள் சாலை மறியல்

தருமபுரி, டிச.2:

பென்னாகரம் அருகே முறையாக குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் சாலை மறிய லில் ஈடுபட்டனர்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே உள்ள கூத்த பாடி ஊராட்சிக்குட்பட்ட கே.குள்ளாத்திரபட்டி காலனி பகுதி யில் 100க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்ய வீடுகள்தோறும் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகிக்கப் பட்டு வந்தது. இருப்பினும் போதுமான குடிநீர் கிடைக்க வில்லை என பொதுமக்கள் அளித்த புகாரின்பேரில், ஆறு மாதத்துக்கு முன்பு இப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் விநியோ கிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்நிலையில், குழாய் செல்லும் வழித்தடம் பட்டா நிலம் என ஊராட்சி நிர்வா கத்திடம் தனிநபர் முறையிட்டார். அதன்பேரில், குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதைக் கண்டித்து, அப்பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் வெள்ளியன்று பென்னாகரம் நாகமரை செல்லும் சாலை யில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல றிந்து வந்த பென்னாகரம் வட்டாட்சியர் சண்முகசுந்தரம், ஒகே னக்கல் காவல் ஆய்வாளர் முரளி ஆகியோர், உரிய நடவ டிக்கை எடுக்கப்படும் என அளித்த உறுதியின்பேரில் பொது மக்கள் கலைந்து சென்றனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,000 ஏக்கர் சம்பா, தாளடி நெற்பயிரை சூழ்ந்த மழைநீர்

தஞ்சாவூர், டிச.2:

*தஞ்சாவூர் மாவட்டத்தில், இடைவிடாது மழை பெய்து வருகிறது. இதனால் மழைநீர் தாழ்வான பகுதிகளில் தேங்கியதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர். இந்த மழையின் காரணமாக மாவட்டத்தில் சுமார் 2,000 ஏக்கரில் சம்பா, தாளடி நெற்பயிரை மழைநீர் சூழ்ந்துள்ளது.*



*தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோ ரப் பகுதிகளில், உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலமான டிட்வா புயலால் டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்தது. மேலும், கடலோர பகுதிகளில் அதிக அளவிலான தரைக்காற்று வீசியது. மழை மற்றும் புயல் வந்தால் அதனை எதிர்கொள்ள மாவட்ட நிர்வா கம் சார்பில் 66 குழுக்கள் அமைக்கப் பட்டு தயார் நிலையில் உள்ளன. மேலும், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி ஆகிய 3 தாலுகாக்கள் மிகவும் பாதிக்கப்படும் என கண்ட றியப்பட்டுள்ளன. அத்துடன் 24 கடற்கரை கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்க 14 முகாம்கள் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன. மீனவர்கள் பாதிப்பு அதிராம்பட்டினம், மல்லிபட்டி னம் பகுதியில் மீன்பிடி துறைமுகங் கள் உள்ளன. இதில் சுமார் 200 விசைப்படகுகள், 2,000-க்கும் மேற் பட்ட பைபர் மற்றும் பாரம்பரிய நாட்டுப் படகுகள் உள்ளன. 32 மீனவர் கிராமங்களில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இந்நிலையில், வடகிழக்கு பருவ மழை, வங்கக்கடலில் உருவான காற்ற முத்த தாழ்வு காரணமாக, கடந்த 22 நாட்களாக மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல், படகுகளை கரையில் நிறுத்தி வைத்து பாதுகாத்து வரு கின்றனர். இதனால், மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதால், அரசு சார்பில் நிவாரணம் வழங்க வேண்டும். நவம்பர், டிசம்பர் மாதங்க ளில் மீனவர்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சம்பா, தாளடி பாதிப்பு அம்மாபேட்டை அருகே புத்தூர், பல்லவராயன்பேட்டை, உக்கடை, சேர்மாநல்லூர், சாலியமங்கலம், களஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி நெற்பயிரை மழைநீர் சூழ்ந்துள்ளது. கடந்த சில நாட்களாக மழைநீர் நெற்பயிரை சூழ்ந்துள்ளதால், அவை அழுகும் நிலையில் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அதே போல் ஒரத்தநாடு பகுதியிலும் மழைநீர் சம்பா, தாளடி வயலில் தேங்கி யுள்ளது. மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிரை மழைநீர் சூழந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மின்சாரம் தாக்கி கால்நடை உயிரிழப்பு பேராவூரணி அருகே, பைங்கால் உக்கடை கிராமத்தைச் சேர்ந்த பழனி வேலின் பசு மாடு ஒன்றும், சிந்தா மணி என்பவரின் ஆடு ஒன்றும், மழை யினால் அப்பகுதியில் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் உயி ரிழந்தன. இதேபோல், திருவோணம் அருகே கொள்ளுக்காடு கிராமத்தைச் சேர்ந்த தேவநேசன் என்பவரின் கறவை மாடு, மழையினால் ஏற்பட்ட குளிர் தாங்காமல் உயிரிழந்தது.*

# விமானங்களில் மென்பொருள் மேம்படுத்தும் பணி - சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் உத்தரவு

புதுடெல்லி, டிச.2:

மொத்தம் 338 A-320 குடும்ப விமானங்களில் மென்பொருள் மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டன.

வான்பகுதியில் பயணத்தின்போது கடுமையான சூரிய கதிர்வீச்சு காரணமாக கணிசமான எண்ணிக்கையிலான A-320 குடும்ப விமானங்களின் விமானக் கட்டுப்பாடு தொழில்நுட்பத்தில் முக்கியமான தரவுகள் சிதைந்துவிடக்கூடும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் விமான நிறுவனங்களுக்கு தேவையான மென்பொருள் மேம்படுத்தல்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு விமான



நிறுவங்களுக்கு உத்தரவு பிறப்பித்தது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, இண்டிகோ, ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகிய மூன்று இந்திய விமான நிறுவனங்களுடன் மொத்தம் 338 A-320 குடும்ப விமானங்களில் மென்பொருள் மேம்படுத்தல் பணிகள் தொடங்கப்பட்டன.

அதன்படி, இண்டிகோ தனது செயல்பாட்டு A-320 குடும்ப விமானங்களில் 200 விமானங்களிலும் மேம்படுத்தல்களை முடித்துள்ளது.

ஏர் இந்தியாவில் 113 விமானங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, அவற்றில், செயல்பாட்டில் உள்ள 100 விமானங்களுக்கு மேம்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸைப் பொறுத்தவரை, 23 A-320 குடும்ப விமானங்களுக்கு மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### சிம் கார்டின் ஒரு மூலை மட்டும் வெட்டப்பட்டு இருப்பது ஏன் தெரியுமா?

இன்றைய உலகில் மொபைல் போன் இல்லாத மனிதர்களே இல்லை எனலாம். மொபைல் போன் பயன்படுத்துபவர்கள் அனைவருமே அதனுள் இருக்கும் மிக முக்கியமான ஒரு பகுதியான சிம் கார்டையும் (SIM Card) பயன்படுத்தியிருப்பீர்கள். மொபைல் போனை ஒரு தொடர்புக் கருவியாக மாற்றும் வேலையைச் செய்வது இந்த சிம் கார்டு தான்.

ஆனால், நாம் தினமும் பயன்படுத்தும் இந்தச் சிம் கார்டில் ஒரு வினோதமான அம்சம் இருப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? அதுதான் சிம் கார்டின் ஒரு மூலை மட்டும் வெட்டப்பட்டு இருப்பது.

நாம் ஒரு பொருளைத் தொடர்ந்து பயன்படுத்தினாலும், அதன் வடிவமைப்புக்குப் பின்னால் உள்ள காரணங்களை அறிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. சிம் கார்டின் இந்த வெட்டப்பட்ட மூலைக்கான காரணம் என்ன? பெரும்பாலான மக்கள் இதைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டியிருக்க மாட்டார்கள். வாருங்கள் தெரிந்துகொள்ளலாம்.

தொழில்நுட்ப வல்லுநர்கள் சிம் கார்டை இப்படி வடிவமைத்ததற்குப் பின்னால் ஒரு சிறப்பு வாய்ந்த காரணம் உள்ளது. தொடக்கத்தில் சிம் கார்டுகள் முழுவதும் செவ்வக வடிவத்தில் இருந்தன. அப்போது, மொபைல் போனில் சிம் கார்டைச் செருகுவதில் பலருக்குக் குழப்பம் ஏற்பட்டது. அதை நேராகச் செருகுவதா அல்லது தலைகீழாகச் செருகுவதா என்ற தடுமாற்றம் இருந்தது. மேலும், எந்தப் பக்கத்தை உள்ளே வைப்பது என்றும் தெரியாமல் பலர் சிரமப்பட்டனர்.

அவ்வாறு சிம் கார்டை தலைகீழாகச் செருகினால், அது சரியாக வேலை செய்யாது. மொபைலில் நெட்வொர்க் கிடைக்காது. மேலும், சில சமயங்களில் சிம் கார்டு சேதமடையவும் வாய்ப்பு இருந்தது.

இந்தக் குழப்பங்களைத் தீர்க்கவும், சிம் கார்டைச் சரியாகப் பொருத்துவதை உறுதிப்படுத்தவும் தான், அதன் ஒரு மூலையை வெட்டும் யோசனை வந்தது.

இந்த வெட்டு மூலையானது, பயனர்கள் சிம் கார்டை மொபைல் போனின் சிம் ஸ்லாட்டில் (SIM Slot) சரியான திசையில் செருகுகிறார்களா என்பதைக் கண்டறிய உதவுகிறது.

ஸ்லாட்டில் உள்ள வடிவம் மற்றும் சிம் கார்டில் உள்ள வடிவம் இரண்டும் ஒத்துப்போகும்போது, சிம் கார்டு நேராகச் செருகப்பட்டுள்ளதா அல்லது தலைகீழாக உள்ளதா என்பதைப் புரிந்துகொள்வது மக்களுக்கு எளிதாகிறது.

சிம் கார்டின் ந்தச் சிறிய வடிவமைப்புக் குறியீடு, பயனரின் அனுபவத்தை மிகவும் எளிதாக்கியுள்ளது.

# அரசு பஸ்கள் மோதலில் 11 பேர் பலி பிரதமர் மோடி நிவாரணம் அறிவிப்பு

புதுடெல்லி, டிச.2:



உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நேற்று அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதி 11 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்தனர்.

இந்த நிலையில், பிரமதர் மோடி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

சிவகங்கையில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் உயிரிழப்புகள் நிகழ்ந்தது மிகுந்த வருத்தமளிக்கிறது.

தனது அன்புக்குரியவர்களை இழந்தவர்களின் துயரத்தில் என் எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய நான் பிரார்த்திக்கிறேன்.

பிரதமரின் தேசிய நிவாரண நிதி மூலம் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாட்ஸ் அப் பயன்படுத்த ஆக்டிவ் சிம் கார்டு கட்டாயம் - மத்திய அரசு அதிரடி

புதுடெல்லி, டிச.2:




மோசடிகளை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு, வாட்ஸ் அப் நிறுவனத்திற்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

வாட்ஸ் அப் என்பது தற்போது தவிர்க்க முடியாத சமூக வலைத்தளங்களில் ஒன்றாக மாறிவிட்டது. உலகம் முழுவதும் பல கோடி பேர் வாட்ஸ் சேவையை பயன்படுத்துகிறார்கள். குறுஞ்செய்தி அனுப்புவது மட்டும் இன்றி தற்போது வாட்ஸ் அப் வழியாக அழைப்புகளையும் மேற்கொள்ள முடியும். வாட்ஸ் அப்களை டெஸ்க்டாப்பில் அதாவது கணிணி வழியாகவும் இணைத்து பயன்படுத்தலாம். ஆனால், இந்த வசதியை பயன்படுத்தி பல்வேறு மோசடிகளும் அரங்கேறுவதாக சமீப காலமாக புகார்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. இதனை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு, வாட்ஸ் அப் நிறுவனத்திற்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி, மொபைலில் ஆக்டிவ் சிம் கார்டு இல்லாவிட்டால் வாட்ஸ் அப் கணக்கு இனி இயங்காது. மொபைலில் உள்ள சிம் கார்டு, அந்தந்த செயலிகளில் இணைக்கப்பட்டிருப்பதை 90 நாட்களுக்கு ஒரு முறை உறுதி செய்ய வேண்டும். அதேபோல வெப்-இல் 6 மணி நேரத்திற்கு ஒருமுறை தானாகவே லாக் அவுட் ஆகிவிடும். இது டெலிகிராம், சிக்னல் செயலிகளுக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. 6 மணி நேரம் கழித்து மீண்டும் கியூஆர் கோடு பயன்படுத்தி ஸ்கேன் செய்த பிறகுதான் வெப் வாட்ஸ் அப் பயன்படுத்த முடியும்.

# ஆதாரில் இருக்கும் செல்போன் எண்ணை வீட்டில் இருந்தபடியே மாற்றலாம்.. புதிய செயலியில் வசதி

சென்னை, டிச.2:

செல்போன் எண் மாற்றுவது, முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்வது, இ-மெயில் முகவரி பதிவு செய்வது உள்ளிட்ட பணிகளை செய்யும் புதியவசதி கொண்டு வரப்பட்டு உள்ளது.

ஆதாரில் இருக்கும் செல்போன் எண்ணை மாற்றுவதற்கு ஆதார் மையத்தை தேடி அலைய வேண்டியதில்லை. இனி வீட்டில் இருந்தபடியே செல்போன் மூலம் மாற்றி விடலாம். அதற்கான வசதி செயலியில் வந்துள்ளது.

இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் ஆதார் (Aadhaar App) என்ற புதிய செயலியை கடந்த சில நாட்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் ஆதார் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அது வந்து உள்ளது. அதன் மூலம்




புதிய செல்போன் நம்பர் வாங்குவது, வங்கியில் புதிய கணக்கு தொடங்குவது, ஓட்டலில் தங்குவதற்கு ஆதார் அட்டை நகல் கொடுப்பது அல்லது கைரேகை வைப்பது எல்லாம் இனி தேவையில்லை. அந்த ஆதார் புதிய செயலியில் உள்ள கியூ-ஆர் கோடு காண்பித்தால் போதுமானது. அல்லது அவர்கள் காட்டும் கியூ.ஆர்.கோட்டினை ஸ்கேன் செய்தால் போதும். அதன் மூலம் நமது ஆதார் உறுதி செய்யப்படும். இந்த டிஜிட்டல் முறையால் நமது ஆதார் எண்ணையோ, முகவரியோ அவர்களால் பார்த்து கொள்ள முடியாது.

தற்போது இந்த செயலியில் ஆதார் செல்போன் எண் மாற்றுவது, முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்வது, இ-மெயில் முகவரி பதிவு செய்வது உள்ளிட்ட பணிகளை செய்யும் புதியவசதி கொண்டு வரப்பட்டு உள்ளது.

ஏற்கனவே ஆதாரில் முகவரி மாற்றம் போன்ற பணிகளை ஆன்லைனில் அல்லது எம் ஆதார் மூலம் செய்யலாம். ஆனால் செல்போன் நம்பர் மாற்றுவது, பெயர் திருத்தம் செய்வது, இ-மெயில் முகவரி கொடுப்பது போன்ற பணிகளை எல்லாம் ஆதார் மையத்திற்கு சென்று தான் செய்ய வேண்டும். அங்கு சென்றால் ஒரு நாள் முழுவதும் வீணாகி விடுகிறது. அதற்கு தீர்வு காணும் வகையில் புதிய ஆதார் செயலியில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி இனி வீட்டில் இருந்தப்படியே செல்போன் மூலம் இந்த பணிகளை செய்து விடலாம்.

இப்போது முதல்கட்டமாக செல்போன் நம்பர் மாற்றும் வசதி நடைமுறைக்கு வந்து விட்டது. நாம் புதிய ஆதார் செயலியில் முக அங்கீகாரம் கொடுத்து பதிவு செய்து விட்டு உள்ளே சென்றால், அதில் My Aadhaar Update என்று உள்ளது. அதனை கிளிக் செய்தால், செல்போன் நம்பர் மாற்றம், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்வது, இ-மெயில் முகவரி பதிவு போன்ற விவரம் வரும். அதில் தற்போது செல்போன் நம்பர் மாற்றும் வசதியை மட்டுமே பயன்படுத்த முடிகிறது. மற்ற வசதிகள் இன்னும் ஓரிரு வாரங்களில் பயன்படுத்த முடியும்.

செல்போன் எண் மாற்றுவதற்கு ரூ.75 கட்டணம் செலுத்த வேண்டும். உடனே நாம் புதிய செல்போன் நம்பரை ஆதாரில் பதிவு செய்து விடலாம்.

## க்ரைம் கார்னர்

### தஞ்சாவூரில் முன்னாள் எம்.பி ஏகேஎஸ் விஜயன் வீட்டில் 87 பவுன் நகைகள் திருட்டு!

தஞ்சாவூர், டிச.2:

நாகை மாவட்டம் சித்தமல்லியைச் சேர்ந்தவர் ஏகேஎஸ் விஜயன். நாகை மக்களவைத் தொகுதியில் 1999, 2004, 2009 தேர்தல்களில் போட்டியிட்டு வென்றவர். தற்போது திமுகவில் விவசாய அணி மாநிலச் செயலாளராகவும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாகவும் உள்ளார். இவருக்கு, தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள சேகரன் நகரில் வீடு உள்ளது. இந்த வீட்டில் விஜயனின் மனைவியும், மகளும் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், நவ.28-ம் தேதி விஜயனின் மனைவி ஜோதிமணி தனது மகளுடன் சித்தமல்லிக்குச் சென்றுவிட்டு இன்று காலை தஞ்சாவூர் திரும்பினார். அப்போது, வீட்டின் முன்பக்க கதவில் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து, வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவும் உடைக்கப்பட்டு, அதில் இருந்த 87 பவுன் நகைகள் திருடு போயிருப்பது தெரியவந்தது.

இது குறித்து ஏகேஎஸ் விஜயன் அளித்த தகவலின் பேரில், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக போலீஸார் சென்று பார்வையிட்டனர். தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் பதிவு செய்யப்பட்டன. மேலும், மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. தகவலறிந்து மாவட்ட எஸ்.பி. ஆர். ராஜாராம், வீட்டைப் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். மேலும், இது குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து, நகைகளை திருடி சென்ற நபர்களை தேடி வருகின்றனர்.

### கேலி, கிண்டல் செய்ததால் ஆத்திரம் ஐ.டி. ஊழியர் கார் மீது பெட்ரோல் குண்டு வீசியவர் கைது

சென்னை, டிச.2:

மதுரையைச் சேர்ந்தவர் ராம் நித்தேஷ் (26). சென்னை கிண்டி, மடுவன்கரை பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நண்பர்களுடன் தங்கியுள்ளார். இவர் ஈக்காட்டுதாங்கலில் உள்ள தனியார் ஐடி நிறுவனத்தில் வடிவமைப்பு பொறியாளராக பணி செய்கிறார். கடந்த 28-ம் தேதி இரவு ராம் நித்தேஷ் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார்.

மறுநாள் அதிகாலை 4.30 மணியளவில், அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இவரது விலை உயர்ந்த கார் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக தீ அணைக்கப்பட்டது. பிறகு இதுகுறித்து கிண்டி காவல் நிலையத்தில் ராம் நித்தேஷ் புகார் தெரிவித்தார். போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக சம்பவ இடத்தை சுற்றிலும் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளைக் கைப்பற்றி ஆய்வு செய்தனர். இதில் ராம் நித்தேஷ் காரின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து பெட்ரோல் குண்டு வீசிவிட்டு தப்பிய கிண்டி மடுவங்கரையைச் சேர்ந்த விஜயபிரபாகரன் (25) என்பவரை போலீஸார் கைது செய்தனர். விசாரணையில் குடியிருப்பில் குடியிருப்பவர்களில் சிலர் விஜய பிரபாகரனை கேலியும், கிண்டலும் செய்துள்ளனர். இதனால், பழிவாங்கும் நோக்கில் பெட்ரோல் குண்டை அந்த குடியிருப்புக்குள் வீசியது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து விஜயபிரபாகரன் சிறையில் அடைக்கப்பட்டார்.

### இருசக்கர வாகனத்தில் சென்ற தந்தை - மகன் அடையாளம் தெரியாத வாகனம் மோதி உயிரிழப்பு

சென்னை, டிச.2:


அடையாளம் தெரியாத வாகனம் மோதி இருசக்கர வாகனத்தில் சென்ற தந்தை - மகன் உயிரிழந்தனர். சென்னை கிண்டி, அருளாகி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் ரவி (50). கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனை அருகே டிபன் கடை நடத்தி வந்தார். இவருக்கு திருமணமாகி 3 மகன்கள் உள்ளனர். இவர் நேற்று முன்தினம் இரவு சைதாப்பேட்டை சந்தையில் காய்கறி மற்றும் மளிகைப் பொருட்கள் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றார். பின்னால் இளைய மகன் கார்த்திக் (15) அமர்ந்திருந்தார். அப்போது மழை விட்டுவிட்டு பெய்து கொண்டிருந்தது. கிண்டி ஆலந்தூர் ரோடு கல்லாற்று மேம்பாலத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத வாகனம் அவர்கள் சென்ற வாகனத்தின் மீது மோதி விட்டு நிற்காமல் சென்றது. இதில், தந்தை - மகன் இருவரும் வாகனத்தின் சக்கரத்தில் சிக்கி அங்கேயே உயிரிழந்தனர். தகவல் அறிந்து அடையாறு போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் சம்பவ இடம் விரைந்து இருவரின் சடலங்களையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும் இது தொடர்பாக வழக்குப் பதிந்து விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற வாகனம் குறித்து சிசிடிவி கேமரா காட்சிகளை அடிப்படையாக வைத்து தேடி வருகின்றனர்.

### காவல் நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்: துணி தேய்க்கும் தொழிலாளி கைது

சென்னை, டிச.2:

காவல் கட்டுப்பாட்டு அறைக்கு கடந்த 29-ம் தேதி அழைப்பு ஒன்று வந்தது. எதிர்முனையில் பேசிய நபர், ‘மதுரவாயல் காவல் நிலையத்தில் வெடிகுண்டு வைத்துள்ளேன். அது சற்று நேரத்தில் வெடித்துச் சிதறும்’ என கூறிவிட்டு இணைப்பை துண்டித்து விட்டார். கட்டுப்பாட்டு அறை காவலர், உடனடியாக இதுபற்றி உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து, வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள், மோப்ப நாய்களுடன் மதுரவாயல் காவல் நிலையம் சென்ற போலீஸார் தீவிர சோதனை நடத்தினர். முடிவில் சந்தேகப்படும்படியான எந்த பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. புரளியை கிளப்பும் வகையில் மிரட்டல் விடுக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக மதுரவாயல் போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்தனர். முதல்கட்டமாக மிரட்டல் விடுத்த செல்போன் எண்ணை வைத்து விசாரிக்கப்பட்டது.

# மண்டல சீசன்: சபரிமலையில் 15 நாட்களில் ரூ.92 கோடி வருவாய்



திருவனந்தபுரம், டிச.2:

நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனை முன்னிட்டு சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது.

சபரிமலை ஐப்பன் கோவிலில் நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனை முன்னிட்டு கடந்த 16-ந் தேதி நடை திறக்கப்பட்டது. 17-ந் தேதி மண்டல சீசன் தொடங்கியது. அடுத்த மாதம் (டிசம்பர்) 27-ந் தேதி மண்டல பூஜையும், ஜனவரி மாதம் 14-ந் தேதி மகர விளக்கு வழிபாடும் நடக்கிறது. சீசன் தொடங்கியது முதல் சபரிமலையில் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகிறார்கள். ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 70 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். மேலும் தற்போது உடனடி தரிசன முன்பதிவு என்ற அடிப்படையில் தினசரி 5 ஆயிரம் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் ஆன்லைன் முன்பதிவு செய்து வரும் பக்தர்களின் வருகைக்கு ஏற்ப உடனடி தரிசனத்திற்கு கூடுதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.


இந்த நிலையில், நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனையொட்டி, சபரிமலையில் கடந்த 15 நாட்களில் 92 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு சீசனின்போது, முதல் 15 நாட்களில் ரூ.69 கோடி கிடைத்து இருந்தது. நடப்பாண்டில் இது 33.33 சதவீதம் அதிகம் ஆகும்.

வருவாயில் பெரும்பகுதி அரவணையில் இருந்து கிடைத்துள்ளது.

அரவணையில் இருந்து ரூ.47 கோடி கிடைத்துள்ளது. உண்டியல் காணிக்கை கடந்த சீசனில் ரூ.22 கோடியாக இருந்த நிலையில், இந்த சீசனில் ரூ.26 கோடியாக உயர்ந்துள்ளது.

இது 18.18 சதவீதம் அதிகமாகும். சபரிமலையில் கடந்த 15 நாட்களில் 13 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கேரள முதல்-மந்திரிக்கு அமலாக்கத்துறை சம்மன்



திருவனந்தபுரம், டிச.2:

கேரள உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியம் தொடர்புடைய மசாலா பத்திரங்கள் வழக்கில், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தை மீறியதற்காக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் 2019ம் ஆண்டு வெளியிட்ட மசாலா பத்திரங்கள் தொடர்பாக அன்னிய செலாவணி விதிமீறல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது குறித்து, கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன், அவரது தனி செயலாளர் மற்றும் முன்னாள் நிதி மந்திரி தாமஸ் ஐசக் ஆகியோருக்கு அமலாக்கத்துறை அன்னிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. சுமார் ரூ. 468 கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் இந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே முதன்முதலில் இத்தகைய ரூபாயில் வெளியிடப்பட்ட பத்திரங்களை வெளியிட்ட மாநிலம் கேரளா ஆகும். கேரள உட்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியம் 2019-இல் லண்டன் பங்குச்சந்தையில் மசாலா பத்திரங்களை வெளியிட்டு ரூ. 2,150 கோடி திரட்டியது. இந்த நிதியை சட்டவிரோதமாக திசை திருப்பியதாகவும், அந்நிய செலாவணி விதிமுறைகளை மீறியதாகவும் அமலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அமலாக்கத்துறை முன்னதாகவே தாமஸ் ஐசக்குக்கு சம்மன் அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நவம்பர் மாத ஜிஎஸ்டி வசூல் எவ்வளவு? நிதி அமைச்சகம் வெளியிட்ட தகவல்




புதுடெல்லி, டிச.2:

ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி 2017 ஜூலை மாதத்தில் அறிமுகமானது. அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் 1-ஆம் தேதியன்று, முந்தைய மாதத்தில் வசூலான வரித்தொகையை மத்திய அரசு வெளியிட்டு வருகிறது. இவ்வருடம் ஜிஎஸ்டி அறிமுகமாகி 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

ஜிஎஸ்டியில் இருந்த 4 வரி அடுக்குகள் தற்போது 2 அடுக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் 22-ந்தேதி முதல் நடைமுறைக்கு வந்த இந்த சீர்த்திருத்த நடவடிக்கையால் பெரும்பாலான பொருட்களின் விலை குறைந்தது. இதனால் மின்னணு சாதனங்கள் விற்பனை அதிகரித்துள்ளதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், நவம்பர் மாதத்துக்கான ஜிஎஸ்டி வசூல் நிலவரத்தை மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1.69 லட்சம் கோடியாக இருந்த ஜிஎஸ்டி வசூல், நடப்பாண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1.70 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் வசூலான தொகையை விட 0.7 சதவீதம் அதிகம்.

மொத்த உள்நாட்டு வருவாய் 2.3% குறைந்து ரூ.1.24 லட்சம் கோடியாக இருந்தது. செப்டம்பர் 22 முதல் அமலுக்கு வந்த 375 பொருட்களுக்கான ஜிஎஸ்டி வரி குறைப்பு நடவடிக்கையை தொடர்ந்து இந்த சரிவு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் இறக்குமதியிலிருந்து கிடைக்கும் வருவாய் நவம்பரில் 10.2% அதிகரித்து ரூ.45,976 கோடியாக உள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிலை, பான் மசாலாவுக்கு புதிய வரி: மசோதா தாக்கல் செய்தார் நிர்மலா சீதாராமன்

புதுடெல்லி, டிச.2:

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் புகையிலை, பான் மசாலாவுக்கு புதிய வரி விதிக்க, மசோதாவை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இந்தியாவில் நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி வரி விகிதம் 5, 18 என, இரு அடுக்குகளாக மாற்றப்பட்டது. அதே நேரத்தில், சிகரெட், புகையிலை பொருட்கள் உள்ளிட்ட சில பொருட்களுக்கு மட்டும், 40 சதவீத சிறப்பு வரி விதிக்கப்பட்டது. இந்த புதிய நடைமுறை, கடந்த செப்டம்பர் 22-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதன் பிறகு, கார், ஏசி, வாஷிங் மெஷின், டிவி விற்பனை அதிகரித்துள்ளது. தற்போது, தீங்கு விளைவிக்கும் பொருட்களின் விலைகள் குறையாமல் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தீவிரம் காட்டியது. இதன்படி, இன்று தொடங்கியுள்ள நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே, இதற்கான மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்துள்ளது.

நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், புகையிலை, பான்மசாலா உள்ளிட்ட பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்க ஏதுவாக கலால் வரி விதிக்கும் வகையில், 2 மசோதாக்களை தாக்கல் செய்துள்ளார். ஜிஎஸ்டி செஸ் வரிக்கு மாற்றாக இந்த கலால் வரி விதிக்கப்படும். இந்த வரியானது சிகரெட், மெல்லும் புகையிலை பொருட்கள், ஹூக்காக்கள் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், 40 சதவீத ஜிஎஸ்டி மற்றும் உற்பத்தி வரி ஆகியவை விதிக்கப்படும்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது: புகையிலை மற்றும் பான் மசாலா மூலம் கிடைக்கும் வருமானத்தை சுகாதாரம், தேசிய பாதுகாப்பை மேம்படுத்த அரசாங்கம் பயன்படுத்தும். நுகர்வோருக்கு விலைகள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதி செய்வதே யோசனை. இது வருவாயை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை கிடையாது" இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# பீகார் சட்டப்பேரவை கூடியது; புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு



பாட்னா, டிச.2:

பீகார் சட்டசபைக்கு சமீபத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது.

243 தொகுதிகளை கொண்ட பீகார் சட்டசபைக்கு சமீபத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது. இதில், ஐக்கிய ஜனதா தளம் - பாஜக கூட்டணி 202 தொகுதிகளில் கைப்பற்றியது. இதையடுத்து, பீகார் முதல்-மந்திரியாக நிதிஷ் குமார் கடந்த மாதம் 20ம் தேதி பதவியேற்றார்.

இந்நிலையில், பீகார் சட்டப்பேரவை இன்று கூடியது. இந்த கூட்டத்தொடர் வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெற உள்ளது. சட்டப்பேரவை இன்று கூடியதும் தேர்தலில் வெற்றிபெற்ற எம்.எல்.ஏ.க்களுக்கு சபாநாயகர் நரேந்திர நாராயணன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

சபாநாயகராக ஐக்கிய ஜனதா தளம் மூத்த தலைவருமான நாராயணன் செயல்பட்டு வருகிறார். ஆனால், இந்த கூட்டத்தொடரில் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார். சபாநாயகருக்கான தேர்தல் நாளை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் திருத்தம் குறித்து விவாதிக்க கேட்பது நாடகமல்ல'; பிரதமர் மோடிக்கு பிரியங்கா பதிலடி



புதுடெல்லி, டிச.2:

பாராளுமன்ற குளிர்காலக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு, இந்தியா கூட்டணி எம்.பி.க்களின் ஆலோசனைக்கூட்டம் இன்று காலை நடைபெற்றது. காங்கிரஸ் தலைவரும் மேல்சபை எதிர்க்கட்சி தலைவருமான மல்லிகார்ஜுனா கார்கே அவர்களின் தலைமையில், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆலோசனையில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, திமுகவின் டி.ஆர். பாலு, திருச்சி சிவா, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்கிடையே, எதிர்க்கட்சிகள் தொடர்பாக பிரதமர் மோடியின் விமர்சனத்துக்கு காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பதிலடி கொடுத்தார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

"வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம், காற்று மாசுபாடு ஆகியவை மிகப் பெரிய பிரச்சினைகள். அவற்றைப் பற்றி விவாதிப்போம். பாராளுமன்றம் எதற்காக? அவற்றைப் பற்றி விவாதிக்கத்தான் இருக்கிறது. பொதுமக்களின் முக்கிய பிரச்சினைகளைப் பற்றி பேசுவது, கேள்வி எழுப்புவது, விவாதிக்க கேட்பது—இவை நாடகம் அல்ல" என்று பிரியங்கா கூறினார் இதேபோல், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கேவும் பிரதமர் மோடியை விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் குறிப்பிட்டதாவது:

"குளிர்காலக் கூட்டத் தொடரின் முதல் நாளில், பாராளுமன்றத்துக்கு வெளியே முக்கிய பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு பதிலாக, பிரதமர் மோடி மீண்டும் ஒருமுறை நாடக உரையை நிகழ்த்தியுள்ளார். கடந்த 11 ஆண்டுகளாக பாராளுமன்ற ஒழுக்கத்தையும் அமைப்பையும் தொடர்ந்து மத்திய அரசு நசுக்கி வருகிறது என்பதே உண்மை. கடந்த மழைக்காலக் கூட்டத்தொடரில் மட்டுமே குறைந்தது 12 மசோதாக்கள் அவசரமாக நிறைவேற்றப்பட்டன.

சில மசோதாக்கள் வெறும் 15 நிமிடங்களிலும், சில மசோதாக்கள் எந்த விவாதமும் இல்லாமலும் நிறைவேற்றப்பட்டன.

விவசாயிகளுக்கு எதிரான கருப்பு சட்டங்கள், ஜிஎஸ்டி, பிஎன்எஸ்எஸ் போன்ற மசோதாக்களை பாராளுமன்றத்தில் 'புல்டோசர்' மூலம் நீங்கள் எப்படி கொண்டு வந்தீர்கள் என்பதை முழு நாடும் கண்டிருக்கிறது. மணிப்பூர் பிரச்சினை எழுப்பப்பட்டு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படும் வரை நீங்கள் அமைதியாக இருந்தீர்கள். பணிச்சுமை காரணமாக எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபடும் பிஎல்ஓக்கள் தொடர்ந்து பலியாகி வருகின்றனர். 'வாக்கு திருட்டு' உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. நாங்கள் அவற்றை பாராளுமன்றத்தில் தொடர்ந்து எழுப்புவோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

# தென்ஆப்பிரிக்க அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டி: இந்திய அணி அபார வெற்றி

ராஞ்சி, டிச.2:

தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. விராட் கோலி சதம் அடித்தார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடுகிறது.

இதன்படி இந்தியா- தென்ஆப்பிரிக்கா இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நேற்று அரங்கேறியது. தென்ஆப்பிரிக்க அணியில் உடல்நலக்குறைவால் கேப்டன் பவுமா ஒதுங்கியதால், மார்க்ரம் அணியை வழிநடத்தினார்.

'டாஸ்' ஜெயித்த தென்ஆப்பிரிக்க கேப்டன் மார்க்ரம், முதலில் பந்து வீச்சை தேர்ந்தெடுத்தார். இதையடுத்து ஜெய்ஸ்வாலும், ரோகித் சர்மாவும் இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக அடியெடுத்து வைத்தனர். பேட்டிங்குக்கு உகந்த இந்த ஆடுகளத்தில் ஜெய்ஸ்வால் பவுண்டரியுடன் தொடங்கினார். ஆனால் அவரது பேட்டிங்குக்கு ஆயுசு குறைவு. 18 ரன்னில் விக்கெட் கீப்பர் டி காக்கிடம் கேட்ச் ஆனார்.

2-வது விக்கெட்டுக்கு ரோகித் சர்மாவுடன், விராட் கோலி கைகோர்த்தார். அனுபவசாலியான இருவரும் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 13.3 ஓவர்களில் இந்தியா 100 ரன்களை தொட்டது. சுப்ராயனின் ஒரே ஓவரில் ரோகித் சர்மா 2 சிக்சர் அடித்தார். இதே போல் கார்பின் பாசின் ஓவரில் கோலி அடுத்தடுத்து 2 சிக்சர் தூக்கி சிலிர்க்க வைத்தார். இதனால் ரன்ரேட் 7-க்கு மேலாக நகர்ந்தது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இந்திய அணி 8 விக்கெட்டுக்கு 349 ரன்கள் குவித்தது.

அடுத்து 350 ரன் இலக்கை நோக்கி ஆடிய தென்ஆப்பிரிக்க அணிக்கு ஒரே ஓவரில் ஹர்ஷித் ராணா 'இரட்டை செக்' வைத்தார்.

தென்ஆப்பிரிக்க அணி 49.2 ஓவர்களில் 332 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. இதனால் இந்தியா 17 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கோலி ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இவ்விரு அணிகள் இடையிலான 2-வது ஒரு நாள் போட்டி வருகிற 3-ந்தேதி ராய்ப்பூரில் நடக்கிறது.

# சர்வதேச பேட்மிண்டன்: இந்தியாவின் திரிசா-காயத்ரி ஜோடி மீண்டும் சாம்பியன்

லக்னோ, டிச.2-

சையத் மோடி நினைவு சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் நடந்தது.

பெண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிசுற்றில் நடப்பு சாம்பியனான இந்தியாவின் திரிசா ஜாலி - காயத்ரி கோபிசந்த் ஜோடி சரிவில் இருந்து மீண்டு வந்து 17-21, 21-13, 21-15 என்ற செட் கணக்கில் ஜப்பானின் காகோ ஒசாவா- மை தனாபே ஜோடியை வீழ்த்தி பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது. இந்த ஆட்டம் 1 மணி 16 நிமிடங்கள் நீடித்தது. இதில் ஒரு கேமில் இருவரும் இடைவிடாது 49 ஷாட்டுகள் அடித்தது ரசிகர்களை பரவசப்படுத்தியது. திரிசா- காயத்ரி ஜோடிக்கு ரூ.17 லட்சம் பரிசுத்தொகையாக கிடைத்தது.

திரில்லிங்கான ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் 16-21, 21-8, 20-22 என்ற செட் கணக்கில் ஜாசன் குனவானிடம் (ஹாங்காங்) போராடி தோற்றார். இதில் கடைசி செட்டில் 20-20 என்று வரை சமனிலை நீடித்தது. இறுதியில் கடைசி இரு புள்ளிகளை தனதாக்கி குனவான் வெற்றிக்கனியை பறித்தார். இந்த ஆட்டம் 1 மணி 7 நிமிடங்கள் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஹினா அகேச்சி (ஜப்பான்) 21-16, 21-14 என்ற நேர் செட்டில் நேஸ்லிஹான் அரினை (துருக்கி) வீழ்த்தி மகுடம் சூடினார்.

# அதிக சதங்கள் அடித்து விராட் கோலி புதிய சாதனை

ராஞ்சி, டிச.2-

135 ரன்கள் குவித்த விராட் கோலிக்கு 52-வது சதம் (306 ஆட்டம்) இதுவாகும். ஒரு நாள் போட்டியில் அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் அவர் முதலிடத்திலும், சச்சின் தெண்டுல்கர் 2-வது இடத்திலும் (49 சதம்) உள்ளனர்.

ஒரு வடிவில் அதிக சதங்கள் எடுத்தவராக தெண்டுல்கர் (டெஸ்டில் 51 சதம்) திகழ்ந்தார். அந்த வகையில் கோலி நேற்று அவரை பின்னுக்கு தள்ளினார்.

தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக அதிக சதங்கள் நொறுக்கியவர் என்ற சாதனையையும் கோலி (6 சதம்) சொந்தமாக்கினார். இந்தியாவின் சச்சின் தெண்டுல்கர், ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் தலா 5 சதம் எடுத்ததே முந்தைய சாதனையாக இருந்தது.

கோலியும், ரோகித் சர்மாவும், சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை 392 ஆட்டங்களில் இணைந்து ஆடியுள்ளனர். இதன் மூலம் அதிக ஆட்டங்களில் இணைந்து களம் கண்ட இந்திய ஜோடி என்ற பெருமையை பெற்றனர். இதற்கு முன்பு சச்சின் தெண்டுல்கர்- ராகுல் டிராவிட் இணைந்து 391 ஆட்டங்களில் ஆடியதே அதிகபட்சமாக இருந்தது. ஒரு நாள் போட்டியில் இந்திய அணி தொடர்ந்து 19-வது முறையாக டாஸில் தோற்றுள்ளது. கேப்டன் மாறிய போதிலும் துரதிர்ஷ்டம் மாறவில்லை.

ராஞ்சியில் நடந்த தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா 3 சிக்சர் பறக்க விட்டார். இதையும் சேர்த்து சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் அவரது சிக்சர் எண்ணிக்கை 352 ஆக உயர்ந்தது.

இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் அதிக சிக்சர் விரட்டிய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்தார்.

# 300 பேர் பலி; 400 மேற்பட்டோர் காணவில்லை: இலங்கையில் டிட்வா விட்டுச் சென்ற பேரழிவுத் தடங்கள்!

கொழும்பு, டிச.2:

வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு மோசமான பேரிடராக மாறியிருக்கிறது. அந்நாட்டின் பெரும் பகுதியைச் சூறையாடிய இந்தப் புயலின் கோரத் தாண்டவம், மிகப் பெரிய உயிர்ச்சேதத்தையும், பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி, மக்களை மீளாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, படிப்படியாகத் தீவிரமடைந்து புயலாக வலுப்பெற்றது. இது நவம்பர் இறுதியில் இலங்கையை நோக்கி நகர்ந்ததால், அங்கு பல பகுதிகளில் வரலாறு காணாத கனமழை கொட்டித் தீர்த்தது. தொடக்கத்தில் இலங்கையின் கிழக்கு மாகாணங்களான மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியவற்றைத் தாக்கிய டிட்வா புயல், பின்னர் வடக்கு மாகாணமான யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தது. மாத்தளை போன்ற பகுதிகளில் 56 செ.மீ. வரை மழை பதிவானது.

இந்த பெருமழை காரணமாக, நாட்டின் பல முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.



குறிப்பாக கெலனி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கொழும்புவின் வடக்கு பகுதி முழுவதும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. தலைநகர் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரை பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இன்னொருபுறம் நிலச்சரிவுகளாலும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பதுளை, கேகாலை உள்ளிட்ட மலைப்பாங்கான பகுதிகளில் ஏற்பட்ட மிக மோசமான நிலச்சரிவுகளில் பல கிராமங்கள் முழுமையாகப் புதையுண்டு போயுள்ளன. இந்த பேரழிவை சமாளிக்க இலங்கையில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவதாக அந்நாட்டின் அதிபர் அநுர குமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

இன்றைய நிலவரப்படி டிட்வா புயல் பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300-ஐ கடந்துள்ளதாக கூறப்படுகிறது. 400-க்கும் மேற்பட்டோரை காணவில்லை என்பதால் இந்த பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது. கிட்டத்தட்ட 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் 1,275 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மின்சாரம், குடிநீர், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புச் சேவைகள் பல பகுதிகளில் துண்டிக்கப்பட்டுள்ளன.

புயல் இலங்கை கடற்பரப்பிலிருந்து விலகி, தற்போது தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்தாலும், இலங்கையின் பல மாவட்டங்கள் இன்னும் வெள்ளக்காடாகவே காட்சியளிக்கின்றன. 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல்துறை, ராணுவம் மற்றும் மீட்புப் படையினர் இணைந்து, பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து மக்களை மீட்கும் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். பல பகுதிகளில் வெள்ள நீர் இன்னும் வடியாமல் இருப்பதால் மீட்புப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. அடுத்த மூன்று நாட்களில் வெள்ள நீர் படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காக ஆபரேஷன் 'சாகர் பந்து' என்ற பெயரில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக சேட்டக் ஹெலிகாப்டர்கள் ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு திரும்ப முடியாமல் சிக்கித் தவித்த 300-க்கும் மேற்பட்ட இந்திய பயணிகளை இந்திய விமானப் படையினர் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட இந்தியர்கள் திருவனந்தபுரம் அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

## சாரா மறைவுக்கு ஜோ பைடன் நிர்வாகமே பொறுப்பு; அமெரிக்க அரசு குற்றச்சாட்டு

வாஷிங்டன் டி.சி., டிச.2:

ஆப்கானிஸ்தானில் இருந்து 2021-ம் ஆண்டு அமெரிக்க படைகள் வாபஸ் பெற்ற பின்னர், ரகுமானுல்லா அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்து சென்றார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் சமீபத்தில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் தேசிய பாதுகாப்பு படையை சேர்ந்த 2 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் சாரா பெக்ஸ்டிராம் (வயது 20) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார். மற்றொருவரான ஆண்ட்ரூ உல்ப் (வயது 24) தீவிர காயத்துடன் உயிருக்கு போராடி வருகிறார். இந்த தாக்குதலை நடத்தியவர் ரகுமானுல்லா லக்கன்வால் (வயது 29) என சந்தேகிக்கப்படுகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் டிரம்ப் தலைமையிலான அரசு நடந்து வருகிறது. டிரம்ப் அரசின் உள்நாட்டு பாதுகாப்புக்கான உயரதிகாரியான கிறிஸ்டி நோயம், வெள்ளை மாளிகையில் நடந்த தாக்குதலில், சாரா கொல்லப்பட்டதற்கு ஜோ பைடன் அரசே பொறுப்பு என குற்றச்சாட்டாக கூறியுள்ளார். துப்பாக்கி சூடும், அதில் சாரா பலியானதற்கும் முழு பொறுப்பும் பைடனும், அவருடைய நிர்வாகமுமே காரணம். பைடன் அரசிலேயே இதுபோன்ற தனி நபர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவது தொடங்கியது என கூறியுள்ளார்..

## இலங்கையில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர் விபத்து: விமானி உயிரிழப்பு

இலங்கையில் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் விமானி உயிரிழந்தார். இலங்கையில் டிட்வா புயல் காரணமாக கடுமையாம பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர் வென்னப்புவவில் விபத்தில் சிக்கியது.

இதனையடுத்து, விமானி உள்ளிட்டு காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் விமானி நிர்மல் சியம்பலாபிட்டியா மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## ஆபரேசன் சாகர்பந்து... இலங்கையில் சிக்கி தவித்த இந்திய பயணிகள் பாதுகாப்பாக மீட்பு

கொழும்பு, டிச.2:

துபாயில் இருந்து 150 தமிழர்கள் உள்ளிட்ட 300 பயணிகளுடன் விமானம் ஒன்று இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்தது. இலங்கை வழியே இந்தியா வர இருந்த விமானம், இலங்கையின் கொழும்பு நகரில் உள்ள பண்டாரநாயகே சர்வதேச விமான நிலையத்தில் சில நாட்களுக்கு முன்பு தரையிறங்கியது. எனினும், வங்க கடல் மற்றும் இலங்கையை ஒட்டியுள்ள பகுதிகளில் உருவான டிட்வா புயல் எதிரொலியாக கனமழை பெய்தது.

இதனால், இலங்கையில் விமானம் மற்றும் ரெயில் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால், இந்தியர்களை ஏற்றி வந்த விமானம் புறப்படுவதில் சிக்கல் ஏற்பட்டது. 150 தமிழர்கள் உள்ளிட்ட 300 பயணிகளும் கடந்த 5 நாட்களாக கொழும்பு விமான நிலையத்திலேயே சிக்கி தவித்தனர். அவர்களுக்கு போதிய உணவு, தண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. எங்களை மீட்டு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும் என இந்திய பயணிகள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டது. இந்நிலையில், இந்தியாவின் ஆபரேசன் சாகர்பந்து நடவடிக்கை மூலம் இலங்கையில் சிக்கியுள்ள தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் மீட்கப்பட்டு உள்ளனர். கொழும்புவில் உள்ள பண்டாரநாயகே சர்வதேச விமான நிலையத்தில் சிக்கியுள்ள இந்திய பயணிகள் அடங்கிய கடைசி குழுவினரும், பாரத் மாதா கி ஜெய் என முழங்கியபடி, திருவனந்தபுரம் புறப்பட்ட இந்திய விமான படையின் விமானத்தில் ஏறினர். அப்போது, இந்திய தூதர் சந்தோஷ் ஜா அவர்களை வழியனுப்பி வைத்துள்ளார் என பதிவிட்டு உள்ளது. இலங்கையில் வேறு எந்த இந்திய பயணியாவது இருக்கிறார் என்றால், அவர் அவசர உதவி எண் +94 773727832-ஐ தொடர்பு கொள்ளலாம் என அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## 'திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பலனடைந்துள்ளது' - எலான் மஸ்க் பகிர்வு

நியூயார்க், டிச.2:

அமெரிக்காவுக்கு வந்த திறமையான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பலனடைந்துள்ளது என உலகின் முதல் பணக்காரரான எலான் மஸ்க் கூறியுள்ளார். அவருடன் அண்மையில் செரோதா நிறுவனத்தின் இணை நிறுவனர் நிகில் காமத் பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் உரையாடி இருந்தார்.

அது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது. இந்நிலையில், அதில் எலான் மஸ்க் பகிர்ந்து குறித்து விரிவாக பார்ப்போம். இதில் அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள், அமெரிக்க குடியேற்ற விதிகள் மற்றும் தனது குடும்பம் குறித்தும் மஸ்க் பேசியுள்ளார்.

"அமெரிக்கர்களின் பணியை பிற நாட்டினர் பறிப்பதாக சொல்லும் கூற்றை பொறுத்த வரையில் அது எந்த அளவுக்கு உண்மை என எனக்கு தெரியவில்லை. நிச்சயம் திறன் கொண்ட பணியாளர்களுக்கு பற்றாக்குறை உள்ளது என்பதை எனது நேரடி அனுபவத்தில் இருந்து சொல்ல முடியும். அவர்களை கண்டறிவது பெரிய சவாலாக உள்ளது. சவாலான பணிகளை மேற்கொள்ள திறமைசாலிகள் வேண்டும். எனது நிறுவனம் அதில் கவனம் செலுத்துகிறது.



எல்லை பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றத்தை நிச்சயம் தடுத்தாக வேண்டும். முந்தைய பைடன் தலைமையிலான ஆட்சியில் எல்லை பகுதிகளில் பலர் சட்டவிரோதமாக குடியேறினர். அதன் மூலம் ஆதாயம் அடைந்தனர். அதனால் சட்டவிரோத குடியேற்றம் கூடாது.

அமெரிக்காவுக்கு வந்த திறமையான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பெரிதும் பலனடைந்துள்ளது. அமெரிக்காவுக்கு திறமைசாலிகளின் தேவை உள்ளது. எனது நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் திறன் கொண்ட நபர்களுக்கு சராசரிக்கும் கூடுதலான ஊதியத்தை வழங்குகிறது.

அதே நேரத்தில் சில நிறுவனங்கள் எச்1-பி விசாவை தவறாக பயன்படுத்துகின்றன. அது மோசமான போக்கு. அதை நிச்சயம் தடுத்தாக வேண்டும். ஆனால், அதற்காக எச்1-பி விசா வழங்குவதையே நிறுத்த வேண்டும் என சொல்வதை ஏற்க முடியாது. ஏனெனில் இங்கு திறமைசாலிகளுக்கு தேவை உள்ளது.

எனது மகன் பெயர் சேகர்: எனது இணையர் ஷிவோன் ஜிலிஸ் உடன் நான் பெற்ற மகன்களில் ஒருவருக்கு சேகர் என்ற இந்திய வம்சாவளியை சுட்டும் வகையிலான பெயரை சூட்டியுள்ளோம். சந்திரசேகரின் நினைவாக இந்த பெயரை வைத்துள்ளோம். ஷிவோன் ஜிலிஸின் முன்னோர்கள் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள். அது எப்படி என்று எனக்கு தெரியாது. அதனால் இந்த பெயரை வைத்தோம்" என அவர் தெரிவித்தார்.

## ஹாங்காங் தீ விபத்து; பலி எண்ணிக்கை 151 ஆக உயர்வு



ஹாங்காங், டிச.2:

ஆசியாவில் அமைந்துள்ள நாடு ஹாங்காங். இதை தங்கள் நாட்டின் தன்னாட்சி பெற்ற பகுதியாக சீனா கருதுகிறது. இதனிடையே, ஹாங்காங் நாட்டின் தாய் பொ நகரில் வாங் பெக் கோர்ட்டு காம்பிளஸ் பகுதியில் 35 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடியில் ஆயிரத்து 984 வீடுகள் உள்ளன. இதில்சுமார் 5 ஆயிரம் பேர் வசித்து வந்தனர். மேலும், அந்த அடுக்குமாடி குடியிருப்பிற்கு அருகே மேலும் சில அடுக்குமாடி குடியிருப்புகளும் உள்ளன. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் கட்டுமான பணிகளும் நடைபெற்று வந்தன. இதனிடையே, இந்த அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 27ம் தேதி மாலை 3 மணியளவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென அடுக்குமாடி குடிருப்பின் பல்வேறு தளங்களுக்கு வேகமாக பரவியது. மேலும், கடுமான பணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த மர கட்டமைப்புகள் மூலமாக தீ மளமளவென அருகில் இருந்த அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் பரவியது.

இந்த தீ விபத்தில் ஏற்கனவே 128 பேர் உயிரிழந்த நிலையில் பலியானோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதன்படி, ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்பு தீ விபத்தில் பலி எண்ணிக்கை 151 ஆக உயர்ந்துள்ளது. 104 பேரின் உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்று தீ விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் போலீஸ் அதிகாரி சாங் ஷுக் கூறியுள்ளார்.

## வெள்ள பாதிப்பு: நிவாரணப்பொருட்களுடன் இலங்கைக்கு சென்றது ஐ.என்.எஸ் சுகன்யா கப்பல்

இலங்கையில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. 'தித்வா' புயல் காரணமாகவும் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் ஆறுகள் கரைபுரண்டு ஓடுவதால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. பலி எண்ணிக்கை தற்போது 330 ஆக உயர்ந்துள்ளது.

200-க்கும் மேற்பட்டோர் மாயமாகி இருப்பதால் அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முன்னதாக வெள்ளம் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து சுமார் 1½ லட்சம் பேர் தற்காலிக நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு உள்ளனர். எனவே வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பாதிப்பை சமாளிக்க நாடு முழுவதும் அவசர நிலை பிறப்பித்து அதிபர் அநுர குமார திசநாயக உத்தரவிட்டுள்ளார். இதனால் வெள்ள மீட்பு பணியில் பேரிடர் மீட்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே வெள்ள மீட்பு பணிக்கு உதவ இலங்கைக்கு இந்தியாவும் ஆதரவுக்கரம் நீட்டியது. அதன்படி இலங்கைக்கு உணவு, மருந்து, போர்வை போன்ற அத்தியாவசிய பொருட்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன. 'ஆப்பரேஷன் சாகர் பந்து' திட்டத்தின் வாயிலாக, விமானப் படைக்கு சொந்தமான இரு விமானங்களில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் 80 பேர் மற்றும் 21 டன் அத்தியாவசியப் பொருட்கள் இலங்கைக்கு இந்தியா அனுப்பியது. மேலும் ஒரு விமானத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது நிவாரணப்பொருட்களுடன் இந்திய கடற்கடை கப்பல் ஐ.என்.எஸ்., சுகன்யா, திரிகோணமலை துறைமுகத்துக்கு சென்றுள்ளது. இது தவிர, கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ்., விக்ராந்த் கப்பலில் இருந்து இரு ஹெலிகாப்டர்கள், அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

# சிறையில் இம்ரான்கான் உயிரோடு இருக்கிறார்: பிடிஐ கட்சி செனட் உறுப்பினர் குர்ராம் ஜீஷன் தகவல்

ராவல்பிண்டி, டிச.2:

''பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் அடிலா சிறையில் உயிருடன் இருக்கிறார். அவரை வெளிநாடு தப்பிச் செல்லும்படி பாகிஸ்தான் அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது'' என பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் செனட் உறுப்பினர் குர்ராம் ஜீஷன் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், ராவல்பிண்டியில் உள்ள சிறையில் கொலை செய்யப்பட்டார் என ஆப்கானிஸ்தானில் உள்ள சமூக ஊடகங்களில் கடந்த வாரம் தகவல் பரவியது.

சிறையில் உள்ள இம்ரான் கானை அவரது குடும்பத்தினர், அரசியல் கட்சியினர் சந்திக்க கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அனுமதி அளிக்கப்படவில்லை. இதனால் அவரது சகோதரிகள் சிறை வாசலில் போராட்டம் நடத்தினர். அவர்கள் மீது போலீஸார் தாக்குதல் நடத்தினர். இம்ரான் கான் உயிரோடு இருப்பதற்கான ஆதாரத்தை வெளியிட வேண்டும் என அவரது மகன் காசிம் கான் கோரிக்கை விடுத்தார்.



இந்நிலையில் பிடிஐ கட்சியின் செனட் உறுப்பினர் குர்ராம் ஜீஷன், இம்ரான் கான் குறித்து கூறியதாவது: இம்ரான் கான் அடிலா சிறையில் உயிரோடு இருப்பதாக எங்களுக்கு பாகிஸ்தான் அரசு உறுதி அளித்துள்ளது. அவரை தனிமைச்சிறையில் அடைத்து வைத்துள்ளனர். நாட்டை விட்டு வெளியேறி, அவருக்கு பிடித்தமான இடத்தில் அமைதியாக இருக்கும்படி பாகிஸ்தான் அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது. இதற்கு இம்ரான் கான் ஒப்புக் கொள்ள மாட்டார்.

இம்ரான் கானின் புகழை கண்டு பாகிஸ்தான் அரசு பயப்படுகிறது. அதனால் தான் அவரது படம் மற்றும் வீடியோ வெளியிட அவர்கள் அனுமதிக்கவில்லை.

கடந்த ஒரு மாதமாக அவரை குடும்பத்தினர் மற்றும் கட்சி தலைவர்கள் சந்திக்க விடாமல் அவரை தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது துரதிர்ஷ்டம். இது மனித உரிமை மீறல். ஏதோ ஒரு விஷயத்துக்காக அவருக்கு பாகிஸ்தான் அரசு அழுத்தம் கொடுப்பதுபோல் தெரிகிறது. இம்ரான் கான் சிறையில் இருந்தாலும், அவரது செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அவரது பிடிஐ கட்சி பாகிஸ்தான் இளைஞர்களிடம் வலுவாக வேரூன்றியுள்ளது. அவரது கொள்கை பல தரப்பினரை ஈர்த்துள்ளது.

பிடிஐ கட்சிக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. இம்ரான் கான் சிறையில் இருக்கும் படம் வெளிவந்தால், அது மக்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், அவரது போட்டோவை வெளியிட பாகிஸ்தான் அரசு அனுமதிக்கவில்லை. இவ்வாறு குர்ராம் ஜீஷன் கூறினார்.